விலை ரூபா 25.00

நடிகர் அமிதாப் வீட்டில் திருட்டு 
பக்கம் 08

வெள்ளத்தில் மூழ்கி சீனாவில் 10 பேர் சாவு 
பக்கம் 09

சிரியாவில் இதுவரை 10 ஆயிரம் பேர் சாவு 
பக்கம் 10

அம்லா முச்சதம் 
பக்கம் 23

www.onlineuthayan.com

# உதயன்

பக்கங்கள் : 26

சுடர் 27
கதிர் 241

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 09 செவ்வாய்க்கிழமை (24/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### மேலும் 14 ஹெலிகள் ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு

மொஸ்கோ, ஜூலை 24
இலங்கையிடம் இருந்து மேலும் 14 எம்.ஐ -17 ரகக் ஹெலிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் கிடைத்துள்ளதாக ரஷ்ய நிறுவனம் அறிவித்துள்ளது. றோசோபோறோன் எக்ஸ் போர்ட் என்ற 04

## மயிலிட்டியை இராணுவம் கையகப்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியுள்ள மயிலிட்டிக் கிராமத்தை நிரந்தரமாகப் பாதுகாப்புத் தேவைகளுக்குப் பெற்றுக்கொள்ளும் வகையில் அந்தப் பகுதிகளில் வசித்த மக்களில் ஒரு தொகுதியினரைக் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அக்கரைப் பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி. வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக மயிலிட்டியின் 3 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இந்த மக்கள் மல்லாகத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்திலும், பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியி 04

### உதயன் ஆசிரியர் தாக்கல் செய்த மனு:

## யாழ்.நீதிவானுக்கு எதிராக இடைக்காலத் தடை நீடிப்பு

கொழும்பு,ஜூலை 24
'உதயன்' நாளிதழின் ஆசிரியருக்கு எதிராக யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நீதிமன்ற நடவடிக்கைகள், நீதிமன்ற விசாரணைகள் போன்றவற்றை முன்னெடுப்பதற்கும் ஆசிரியரைக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவு எதனையும் பிறப்பிப்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் 29ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

ஓகஸ்ட் 28ஆம் திகதி இந்த விடயம் மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் 04

### தேர்தல் கூட்டணி; மாவை—ஹசன் அலி சந்தித்துப் பேச்சு

மட்டக்களப்பு,ஜூலை 24
கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பரப்புரையில் கூட்டணி அமைத்துச் செயற்படுவது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆரம்பகட்டப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.


கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச்செயலர் ஹசன் அலியும் பங்கேற்றுள்ளனர்.

கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நிரந்தரமான கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து இரு கட்சி களின் தலைவர்களும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

### வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ள

# படைகளை ஒருபோதும் அகற்றத் தேவையில்லை



## கோத்தபாய மீண்டும் விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 24
வடக்கு, கிழக்கில் குற்றச் சம்பவங்களில் படையினர் ஈடுபடுவதாக எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளை நேற்று திட்டவட்டமாக நிராகரித்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவ்வாறான சூழ்நிலையில் அங்கு படைமுகாம்களை அகற்றுவதற்கோ, படைக்குறைப்பு செய்யவோ தேவையேற்படவில்லையென்றும் சுட்டிக்காட்டினார். நாட்டில் குற்றங்கள் அதிகரித்து வருவது மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவது ஊடகங்களின் பங்குபற்றியும் நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற 04

### பருத்தித்துறை சட்டத்தரணிகளும் போராட்டம்

மன்னாரில் நீதிமன்றம் தாக்குதல், நீதிபதி மீதான அச்சுறுத்தல் தொடர்பில் இதுவரை திருப்தியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமையினால் காலவரையறையற்ற பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதென பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் (திங்கள்) காலை சங்கத்தின் செயலாளர் பொன். குமாரசாமி தலைமையில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் கூடி காலவரையறையற்ற புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாகத் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிபைத் தொடர்ந்து நேற்றைய தினமும் பருத்தித்துறை மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்கள் இயங்கவில்லை. நேற்றைய விசாரணைக்குரிய வழக்குகள் யாவும் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (த-8)

## பழைய பாடத்திட்ட மாணவர்கள் புதிய 'இஸற்' புள்ளியால் பாதிப்பு

### பல்கலை அனுமதியில் பின்தங்கும் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 24
கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பழைய பாடத்திட்ட மாணவர்கள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட புதிய 'இஸற்' புள்ளிகளின் பிரகாரம் தரவரிசையில் கீழிறக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்களது பல்கலைக்கழக அனுமதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

புதிய 'இஸற்' புள்ளிகள் வெளியீட்டால் பாதிக்கப்பட்ட 30 க்கு மேற்பட்ட மாணவர் 04

### கிளிநொச்சியில் ஜே.வி.பி. பேரணி; பொலிஸார் தடை

கிளிநொச்சி,ஜூலை 24
அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தும் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தியும் ஜே.வி.பி நேற்று கிளிநொச்சி நகரில் நடத்திய பேரணியை இடைநடுவில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அந்தப் 04

## அமைச்சர் கைதாகும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

### வடக்கு சட்டத்தரணிகள் அறிவிப்பு



மன்னார், ஜூலை 24
மன்னார் நீதிபதியை அச்சுறுத்திய அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதலை மேற்கொண்ட தாக்குதலாளிகள் ஆகியோர் கைது செய்யப்படும் வரை தமது பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று வடக்கு மாகாணச் சட்டத்தரணிகள் நேற்று மன்னாரில் வைத்து அறிவித்துள்ளனர். 04

## காணாமற்போனோர் விடயத்தை மூடிமறைக்க இராணுவம் சூழ்ச்சி

### மரணச் சான்றிதழ் வழங்கும் ஏற்பாடுகளில் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
காணாமல் போனோரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் இலங்கையில் காணாமல் போனோர் என்ற விவகாரமே இல்லை என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை இராணுவம் ஈடுபட்டுள்ளது. இதற்காகக் காணாமற்போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையில் அவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 04

### நிமலரூபனின் வீட்டில் அதிகளவு படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 23
சிறைச்சாலையில் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் இறுதிச் சடங்கு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில், 04

### நிமலரூபனின் இறுதிக்கிரியை இன்று மாலை

வவுனியா சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்தில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதி நிமல ரூபனின் சடலம்நேற்றுக்காலை6மணிக்கு அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து, நிமலரூபனின் சடலம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வவுனியாகொண்டு செல்லப்பட்டது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவரது இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு வவுனியா பொது மயானத்தில் இடம்பெறும்.

நிமலரூபனின் இறுதி ஊர்வலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பிக்களும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர்உள்ளிட்ட உறுப்பினர்களும், பல அரசியல் பிரமுகர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்துகொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உணர்வை நோகடித்த இலங்கைப் படை இங்கு எதற்கு?

## மத்திய அரசின் மீது பாய்கிறார் ஜெயலலிதா

சென்னை, ஜூலை 24

தமிழ் மக்களின் உணர்வுகளை நோகடித்த இலங்கைப் படைகளுக்கு இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக்கூடாது. அவர்களுக்கு இங்கு இடமில்லை எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பயிற்சிக்காக இலங்கைப்படைகள் இந்தியா வருவதற்கு அவர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே தாம்பரத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில்கலந்துகொண்ட இலங்கை விமானப்படை வீரர்கள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினால் வேறு



இடத்துக்கு மாற்றப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நான்கு உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து சென்னை சென்று அங்கிருந்து கல்கத்தா சென்றுள்ளனர். இவர்கள் நான்கு மாத இயந்திரவியல் கற்கை நெறியைத் தொடர்வதற்காகவே கல்கத்தாவின் அருகிலுள்ள பரக்பூர் என்னும் இடத்துக்குச் சென்றுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைக் கேள்வியுற்ற தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது கடும் கண்டனத்தை மீண்டுமொரு முறை தெரிவித்துள்ளார். மத்திய அரசு இதனை உடனடியாகக் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ் மக்களின் உணர்வுகளை நோகடித்த இலங்கை படைகளுக்கு இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் இலங்கைப் படையினர் நால்வரும் நேற்று கற்கைக்காக மேற்கு வங்கத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதிவரை பயிற்சிக்காக அங்கு தங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## கதிரியக்க முகாமைத்துவ நிலையம் கற்பிட்டியில்

கொழும்பு,ஜூலை 24

திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த மத்திய நிலையத்தைக் கற்பிட்டியில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கதிரியக்க அனர்த்தங்கள் ஏற்படின் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு அரசுக்கு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அணு தொடர்பான அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமென அவர் கூறினார்.

தற்போது அணு தொழில்நுட்பம் மின் உற்பத்தி மாத்திரமன்றி விவசாயம், மருத்துவம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக அணுசக்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அணு தொழில்நுட்பத்தின் பயன்பாடு மேலும் அதிகரிக்கப்படுவதால், இலங்கையில் திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது முக்கியத்துவம் வாய்ந்ததென அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (த)

## படகில் ஆஸி.சென்ற இலங்கை கர்ப்பிணி வைத்தியசாலையில்

ஆஸ்திரேலிய பேர்த் நகரில் உள்ள வைத்தியசாலையில் குறித்த கர்ப்பிணிப் பெண் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட 141 பேருடன் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ்தீவைச் சென்றடைந்த படகில் இருந்த இலங்கைக் கர்ப்பிணிப் பெண் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பேர்த் நகரில் உள்ள வைத்தியசாலையில் குறித்த கர்ப்பிணிப் பெண் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் 141 பேரை ஏற்றிச் சென்ற படகு கிறிஸ்மஸ் தீவிற்கு 185 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து ஆஸ்திரேலிய சுங்கக் கப்பல் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டது.

இவ்வாறு புகலிடம் கோரிச் சென்றவர்களில் அதிகமானோர் இலங்கையர்கள் எனவும், சிலர் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இவர்கள் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (த)




அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று கிளிநொச்சியில் பேரணி ஒன்றை நடத்தியது. இதில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (த)

## அமைச்சர்களுடைய வாரிசுகளின் பயிற்சி நிலையமாக மாகாண சபை

கொழும்பு, ஜூலை 24

அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடுத்த தலைமுறையினரைப் பயிற்றுவிக்கும் இடமாக மாகாண சபைகள் மாற்றப்பட்டிருப்பதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

உறவினர்கள் இன்றிய பக்கசார்பற்ற தேர்தலை நடத்துவதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த போதிலும், கேகாலை மாவட்டத்தில், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 8 உறவினர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அரசியல் உறவுகளின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என அமைச்சர் ஊடகங்களில் தெரிவித்திருந்த போதிலும் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்கவின் மகன் சமில திஸாநாயக்க, தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரியவின் மகன் தாரக பாலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜி. பத்மசிறியின் மகள் ஜனாதரி ஆகியோருக்குச் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசு பொய்களைக் கூறி, மக்களை ஏமாற்றி விட்டு, உறவினர்களுக்கு விருந்துபசாரம் படைத்து வருகிறது என்பது தற்போது தெளிவாகியுள்ளது. அரசு ஊடகங்களுக்கு ஒன்றைக் கூறி விட்டு, மற்றொன்றை செய்து வருகிறது -என்றார்.(த)

## ஆறு மாதத்தில் 3,934 பேருக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜூலை 24

வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மூவாயிரத்து 934 பேர் தென்கொரியாவில் தொழிவாய்ப்புகளை பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு கொரிய மொழிப் பரீட்சையில் சித்திபெற்ற இரண்டாயிரத்து 460 பேர் இதில் அடங்குவதாகப் பணியகம் தெரிவிக்கின்றது.

அத்துடன 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கொரியப் பரீட்சையில் சித்தி பெற்ற 474 பேருக்கு இந்த முறை கொரியாவில் வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முறை நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையில் ஒன்பதாயிரத்து 998 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது.

அவர்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் கொரிய வேலைவாய்ப்புக்காகத் தெரிவுசெய்யப்படும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த வருடம் ஏழாயிரத்து 411 பேர் தென்கொரியாவில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த)

## வடக்கு மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 24

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட வடமாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளினதும் மருத்துவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான உண்மைகள் ஆரம்பக் கட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. அது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியநிலையில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் விசாரணைக்கு இடையூறாக இருப்பது தொடர்பில் சங்கம் அதிருப்தி கொண்டுள்ளது.

எனவே அந்த விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துமாறு கோரியே வடமாகாணத்தில் உள்ள வைத்தியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். எனவும் இதன் போது அவசர நோயாளர் சேவைகளில் தடையிருக்காது என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதி ராஜா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.பிரசாத் மற்றும் ஊழியர் ஒருவர் உட்பட மூவருக்கும் எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வைத்தியசாலை முறைகேடுகள் தொடர்பாக கொழும்பு சுகாதார அமைச்சில் இருந்து வந்திருந்த அதிகாரிகள் வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் உட்பட பலரிடம் ஆரம்ப விசாரணையை மேற்கொண்டது. அதனடிப்படையில் மூவரும் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்தது. அதன் பின்னரே மூவருக்கும் எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. (த-4)

## இப்படிக் கடன்பெறும் அரசு இதுவரை இருந்ததே இல்லை

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 24

கடனை திரும்பிச் செலுத்த மற்றுமொரு வணிகக் கடனைப் பெற்றுக்கொள்வதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதாகவும், இதன் பின்விளைவுகளை நாடும், மக்களுமே எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன், இவ்வாறு கடன் பெற்ற அரசொன்று இதுவரை இருக்கவில்லை எனவும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எச்.எஸ்.பி.சி வங்கியிடம் பெற்ற 500 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்துவதற்காக அரசு மேலும் 1000 மில்லியன் ரூபாவை வணிகக் கடனாக பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஆட்சி பொறுப்பில் இருந்த எந்தவொரு அரசுகளும் இவ்வாறு பெற்ற கடனை ஒரே தடவையில் செலுத்துவதற்காகப் பெருந்தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்றதில்லை.

எச்.எஸ்.பி.சி வங்கியில் பெற்ற 500 மில்லியன் டொலர் கடனை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி அரசு ஒரே தடவையில் செலுத்த [illegible] கடனை அடைப்பதற்காக பெறப்பட்டுள்ள 1000 மில்லியன் டொலரில் மீதமுள்ள தொகையை கொண்டு ஏனைய கடன்களை அடைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மற்றுமொரு வணிகக் கடனை பெற்றுக்கொள்வதை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. அரசின் இந்[illegible]திபலன்களை நாடும், மக்களும் எதிர்காலத்தில் அனுபவிக்க நேரிடும்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி சந்தைக்கு முன் வீதியில் வாகனம் நிறுத்தினால் சட்ட நடவடிக்கை

### நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாக ஆடிய பாதம் வீதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும் தொடர்ந்து வாகனங்கள் நிறுத்தப்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லூர் பிரதேச சபை இது சம்பந்தமான அறிவுறுத்தல் பிரசுரங்களை வீதியில் நட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமை நாள்களில் இந்த வீதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை என்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம் இந்த அறிவுறுத்தலையும் மீறி வீதியோரங்களில் வாகனங்கள் மற்றும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுகின்றன.

இந்த வீதியோரத்தில் இவ்வாறு வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுகிறது. இந்த நிலையில் இவ்வாறான செயற்பாடுகளில் இனி வரும் காலங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## இரண்டாம் காலாண்டு மருந்துகள் விரைவில் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன என்று சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தக் காலாண்டுக்கான ஒரு தொகுதி மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள மருந்து வகைகளும் வந்து சேர்ந்ததும் வைத்தியசாலைக்கு இவை விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

மிகுதி மருந்து வகைகளை அடுத்து வரும் நாள்களில் இங்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-17)

### சிவில் விடயங்களில் மூக்கை நுழைக்காமல்

# இராணுவம் தன் வேலையை மட்டும் பார்த்தாலேயே போதும்

### தளபதி ஹத்துருசிங்கவுக்கு சுரேஷ் எம்.பி. சாட்டை

*யாழ்ப்பாணம், ஜூலை24*

*இராணுவத்தினர் அவர்களது வேலைகளை மட்டும் பார்க்கட்டும். சிவில், சமூக விடயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள் என்று கேட்கும் அதிகாரம் இராணுவத்தினருக்கு இல்லை. அந்த அதிகாரம் அரசியல்வாதிகளைத் தெரிவு செய்த பொதுமக்களுக்கே உண்டு. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''யாழ்.மாவட்டத்தில் இராணுவம் அவசியமற்றது என்று கூறும் அரசியல்வாதிகள் வறிய மக்களுக்காக என்ன செய்துள்ளார்கள். நாங்கள் 2 ஆயிரம் வீடுகள் வரையில் கட்டிக் கொடுத்துள்ளோம்'' என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பு அமைச்சிலிருந்து நிதியைப் பெற்று இராணுவத்தினர் வீடமைக்கின்றனர். எங்களுக்கும் அரசு அவ்வாறு நிதி வழங்குமாக இருந்தால் நாங்களும் வீடமைத்துக் கொடுப்போம்.

மேலும் அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள் என்று கேட்கும் அதிகாரம் இராணுவத்தினருக்கோ அல்லது இராணுவத் தளபதிக்கோ இல்லை. மக்கள் தான் அரசியல்வாதிகளை தெரிவு செய்கின்றனர். மக்கள் எங்களிடம் கேட்கட்டும்.

இராணுவம் தனக்குரித்தான வேலையை மட்டும் பார்க்கட்டும். தேவையில்லாத விடயங்களில் மூக்கை நுழைக்கக் கூடாது. சுமுகமான சூழல், ஒரு ஜனநாயகமான சூழல் இன்னும் தோன்றாமல் இருப்பதற்கு இவ்வாறான இராணுவத்தினரின் தேவையற்ற மூக்கு நுழைப்புக்களே காரணம் - என்றார். (த-5)

## பெரும்போக நெற்செய்கை முன்னேற்பாட்டுப் பணிகள்

நவாலி, ஜூலை 24

நவாலி ஆனைக்கோட்டை பகுதியில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான முன் ஏற்பாடுகள் வயல்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் வயல்களில் வரம்புகளைக் கட்டி வீடு வீடாகச் சென்று குப்பைகளை வாங்கி உழவு இயந்திரங்களில் ஏற்றிவந்து வயல்களில் கொட்டுகின்றனர். சிலர் உழுது பண்படுத்துகின்றனர். (ம-100)

## யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன்

யாழ்.மாவட்டசமுர்த்தி உதவி ஆணையாளராக கந்தையா மகேஸ்வரன் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். சமுர்த்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய ச.சிவஸ்ரீ கரவெட்டிப் பிரதேச செயலராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்தே மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர் சமுர்த்தி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

## நிரந்தர வைத்தியர் இன்றி நயினாதீவு ஆஸ்பத்திரி

மூன்று வைத்திய அதிகாரிகள் கடமையாற்றிய நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் இன்று நிரந்தர கடமையில் ஒரு வைத்திய அதிகாரி கூட இல்லை என நயினாதீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு கோரியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நயினாதீவுக்கான வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதற்குக் கண்டனம் தெரிவித்தும் நிரந்தர வைத்திய அதிகாரியை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் பொதுமக்கள் கையொப்பமிட்ட மனு ஒன்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து 500 பேர் இந்த மனுவில் கையொப்பமிட்டுள்ளனர்.மேலும்கையொப்பமிட மக்கள் முன்வந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது பிற்பகல் 2மணிவரைமட்டும்வைத்திய அதிகாரி ஒருவர் கடமையில் இருக்கிறார். வைத்தியஅதிகாரி ஒருவர் நிரந்தரமாக இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## கொலை,களவு குற்றவாளிகள் பல வருடங்களின் பின்னால் கைது

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த 2001 ஆம் ஆண்டு வீடு ஒன்றை உடைத்து களவாடினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 10 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்று அகப்பட்டார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி வயாவிளான் பகுதியில்வைத்து இவர் கைது செய்யப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை திருநெல்வேலி கம்பஸ் லேனில் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி பெண் ஒருவரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நேற்று கோப்பாய் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

கடந்த ஐந்தரை வருடங்களாக தேடப்பட்டு வந்த இவர் கந்தர்மடம் பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (10)

## பொதுக்கிணற்றில் வாளி திருட்டு

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் பொதுக் கிணற்றில் மக்கள் பாவனைக்கு குடிதண்ணீர் பெற்றுக்கொள்ள வசதியாக போடப்பட்டிருந்த கப்பி, வாளி, கயிறு என்பன விஷமிகளால் தொடர்ந்து திருடப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு மாதங்களில் மூன்று முறை இவ்வாறு திருட்டு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் இங்கு குடிதண்ணீர் பெறும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-135)

## கழிவுநீர் வாய்க்கால்களில் தேங்கின பொலித்தீன்கள்

### துர்நாற்றம் ஏற்பட்டு சுகாதாரக்கேடு



யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். நகரின் பிரதான மார்க்க வடிகால் கழிவுப் பொருள்கள் தேங்கி அடைத்துக் கொண்டதால் கழிவுநீர் வழிந்தோடுவது தடைப்பட்டது.

இதனால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசியதோடு மக்கள் அசௌகரியங்களுக்குத் தள்ளப்பட்டனர்.

இதனை அடுத்து யாழ். மாநகர தொழிலாளர்கள் கழிவுநீர் பாய்ந்தோடும் இந்த வடிகாலைத் துப்புரவு செய்து அதற்குள் சிக்கிக் கிடந்த பெருமளவு பொலித்தீன்கள் மற்றும் சேறுகளை அகற்றினார்கள். நகரில் உள்ள கால்வாய்கள் இவ்வாறு பொலித்தீன்கள் மற்றும் கழிவுகளால் தேங்கிக் காணப்படுவதால் கழிவுநீர் பாய்ந்தோடுவது தடைப்படுவதாக மாநகர சுகாதார பகுதியினர் தெரிவித்தனர்.

பொலித்தீன் பாவனை அதிகரித்து காணப்படுவதே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.(ம-17)

# பி.சி. படிவம் கிடைக்காத மக்கள் தேர்தல் அலுவலகத்தில் பெறலாம்

### யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

வாக்காளர் பதிவுக்காக இப்போது வழங்கப்பட்டுள்ள பி.சி. படிவம் கிடைக்காத பொதுமக்கள் யாழ். செயலகத்தில் உள்ள உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாக்காளர் பதிவில் மக்கள் அக்கறை எடுக்க வேண்டும். கிராம சேவகர்களில் வழங்கப்பட்ட படிவம் இருந்தால் அவற்றையும் ஒப்படைக்கலாம்.

> பதிவுகளை மேற்கொள்ளாதவிடத்து பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால் பொதுமக்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்

வாக்காளரைப் பதிவு செய்வதற்கான படிவங்கள் கிராம அலுவலர் மூலம் வழங்கப்பட்டிருந்தன. இரண்டு மாவட்டங்களில் அல்லது இரண்டு இடங்களில் பதிவு செய்யக் கூடாது. படிவங்களில் பிழை காணப்பட்டால் அது குறித்து காரணம் கேட்டு உரியவர்களுக்குக் கடிதம் அனுப்பப்படும்.

வாக்காளர் பதிவு என்பது அனைத்து தேவைகளுக்குமான முக்கியத்துவம் கொண்டது. வாக்காளர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பெரும்பாலான பொதுமக்களும் சில கிராம அலுவலர்களும் இது விடயத்தில் பெரிதாக அக்கறை செலுத்துவதில்லை.

பதிவுகளை மேற்கொள்ளாதவிடத்து பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால் பொதுமக்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நிகழ்வு

# இன்று

### கூட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகள் தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நீதிவானுக்கு...

01↘ போது யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா தமது சார்பில் நேரடியாகவோ சட்டத்தரணிகள் மூலமாகவோ நீதிமன்றத்தில் முற்படுவதற்கான அழைப்பாணையை மீண்டும் அவருக்கு அனுப்பி வைக்கவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.

ஜூன் 28ஆம் திகதி 'உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் யாழ்.நீதிவான் கணேசராஜா தமக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தடை விதிக்கக் கோரியே 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் சார்பில் மேற்படி 'ரிட்' மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதை ஒட்டி இடைக்காலத் தடை உத்தரவும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தடை உத்தரவே ஓகஸ்ட் 29ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, திபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க முன்னிலையாகியிருந்தார். அவர் 'நீதிமன்றுக்கு உதவுபவர்' ('அமிக்காஸ் கூரே') என்ற வகையிலேயே முன்னிலையாக முடியும் என மனுதாரர் தரப்பு மன்றில் சுட்டிக்காட்டியிருந்தது.

அதையடுத்து வழக்கை ஓகஸ்ட் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதியரசர்கள், இடைக்காலத் தடையை, அதற்கு அடுத்த தினமான 29ஆம் திகதிவரை நீடிக்க உத்தரவிட்டனர். அதே சமயம் எதிர்மனுதாரரான யாழ்.நீதிவான் கணேசராஜாவுக்கு புதிய அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் பணித்தது.

''நாடாளுமன்றில் கூறப்படும் விடயங்களை விமர்சிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை - சுமந்திரன் எம்.பி. நேற்று சுட்டிக்காட்டு'' - என்ற தலைப்பில் ஜூன் 28ஆம் திகதி 'உதயன்' நாளிதழில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் விளக்கமளிக்குமாறு தம்மை நீதிமன்றுக்கு அழைத்த யாழ்.நீதிவான் சட்டமுறையற்ற வகையில் தம்மை பகிரங்க நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோருமாறு பலவந்தப்படுத்தினார் என்று 'ரிட்' மனு ஒன்றைப் பத்திரிகை ஆசிரியர் தே.பிரேமானந்த் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

யாழ். நீதிவானின் சட்டமுறையற்ற நடவடிக்கைகளில் இருந்தும் தமக்குப் பாதுகாப்பு தருமாறு கோரி 'உதயன்' ஆசிரியர் தாக்கல் செய்திருந்த இந்த மனுவின் சார்பில் நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன், சட்டத்தரணிகள் வி.புவிதரன், இரான் கொரியா, நிரான் அங்கிட்டல் ஆகியோர் முன்னிலையாகி வாதிட்டனர்.

இதேவேளை, பிரதிவாதியான யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா, ஜூலை 17 ஆம் திகதியிட்டு மேன்முறையீட்டு நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் உதயன் ஆசிரியருக்கு எதிரான வழக்கு விசாரணையிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்கொள்வதாகஅறிவித்துள்ளார். மேலும், தான் நீதிவான் நீதிமன்றத்தின் மேற்படி வழக்கு விசாரணையிலிருந்து விலகிக்கொள்வதால் தன்னை இந்தவழக்கின் பிரதிவாதி என்ற வகையில் நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து விடுவிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.(த)

# படைகளை....

01↘ கருத்தரங்கம் ஒன்றிற்குத் தலைமை வகித்துப் பேசும்போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்ட அவர், மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகம் என்றும், படையினரே அதற்குப் பொறுப்பு என்றும் என்னைச் சந்தித்த தூதுவர் ஒருவர் கூறினார். வடக்கு, கிழக்கில் படைக்குறைப்புச் செய்யவும், படைமுகாம்கள் அகற்றப்படவேண்டுமென்பதையும் நியாயப்படுத்தியே அப்படிச் சொன்னார் தூதுவர்.

நான் இதனை நன்கு ஆராய்ந்தேன். பாதிக்கப்பட்டவர்கள் பயத்தினால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்ய பயப்பட்டனர் எனக் கூறப்பட்டது. இதனால் மருத்துவமனைகளில் உள்ள பதிவுகளின் ஊடாக விவரங்கள் திரட்டப்பட்டன. புள்ளி விவரங்களை நான் பார்த்தேன். அப்போது எந்தவொரு வகையிலும் படையினர் இந்தச் சம்பவங்களில் ஈடுபடவில்லையெனத் தெரியவந்தது. மூன்று சம்பவங்களில் படையினருக்குத் தொடர்பு இருந்தது. அந்தச் சம்பவங்கள் வவுனியாவில் சிங்களப் பகுதிகளில் நடந்துள்ளன. படையிலிருந்து தப்பியோடிய சிப்பாய்களே இதில் தொடர்புபட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள பெண்கள் மீதான வன்முறைகளுடன் அவர்களின் அயல்வாசிகள், நெருங்கிய உறவினர்கள், தெரிந்த நபர்கள் என்ற சிறு குழுக்கள் பின்னணியில் இருந்தமை தெரியவந்தது. பாதுகாப்புக்காக இருந்தவர்கள் தான் இவற்றைச் செய்துள்ளனர். வடக்கு, கிழக்கின் நிலைமை இதுதான். போரின் பின்னர் விதவைகளாக இருப்போர் மீது படையினர் வன்புணர்வுகளில் ஈடுபடுவதாகப் பரப்புரைகள் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

பொறுப்பற்ற ரீதியில் செயற்பட்டு பாதுகாப்புத் தரப்பினரை எடுத்ததற்கெல்லாம் குற்றஞ்சுமத்தக் கூடாது.

குற்றச்சம்பவங்களைத் தடுப்பதற்காக முப்படையினரைப் பயன்படுத்தும் அதிகாரங்கள் எம்மிடம் இல்லை. அதற்காக சட்டங்கள் திருத்தப்படவேண்டும். - என்றும் குறிப்பிட்டார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

# காணாமற்போனோர்...

01↘ வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை இரு நாளும், வவுனியா ஜோசப் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அங்கு சென்று காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர்.

காணாமல்போனவர்களின் பெற்றோர், மனைவி ஆகியோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடுகளின்படி முறைப்பாட்டாளர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இராணுவத்தினர் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற காணாமல் போனோரின் உறவினர்களிடம் காணாமல் போனவர்கள் தொடர்பிலான முழுமையாக விவரங்கள் திரட்டப்பட்டன. இதன்பின்னர் வெள்ளைத்தாள் ஒன்றில் உறவினர்களிடம் இராணுவத்தினர் கையெழுத்துப் பெற்றுள்ளனர்.

மூன்று வருடங்களாகத் திரும்பி வராதவர்கள் இனி வரப் போவதில்லை. எனவே காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக காணாமல்போனவர்களின் உறவினர்களிடம் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்க இராணுவத்தினருக்கு அதிகாரம் உள்ளதா? சிவில் சமூக சேவைகளில் இராணுவத்தினர் ஈடுபட அனுமதி கொடுத்தது யார்?

இதனைவிடப் பெற்றோர் தமது கண் முன்னாலேயே பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தனர். அவர்களுக்குத் தற்போது மரணச் சான்றிதழ் வழங்க இராணுவம் முனைப்புக் காட்டுகிறது. அப்படியானால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் மரணச்சான்றிதழ் கொடுப்பதாயின் எவ்வாறு மரணமானார்கள் என்பதை முதலில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இன்றும் தமது பிள்ளைகள் திரும்பி வருவார்கள் என்று பெற்றோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், அண்மையில் ஒரு சிறைக்கைதி கோமா நிலைக்குச் சென்றபின்தான் அவரது பெற்றோருக்கே அந்தப்பிள்ளை தமது பிள்ளைதான் என்று தெரியவந்தது. இவ்வாறானதொரு நிலையில் காணாமல் போனவர்களுக்கு எவ்வாறு மரணச்சான்றிதழ் வழங்க முடியும்.

எனவே இந்த விடயத்தில் மனித உரிமை அமைப்புகள் தலையிட்டுப் பாதிக்கப்பட்ட - காணாமல் போனவர்களின் உறவுகளுக்குச் சரியான தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (த-5)

# மேலும் 14...

01↘ ரஷ்ய நிறுவனத்திடம் இருந்தே இலங்கை விமானப் படை எம்.ஐ-17 ரக ஹெலிகள் பதின்னான்கை வாங்கவுள்ளது. இவை உலன் உடே தொழிற்சாலையில் கட்டப்படவுள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கை விமானப்படை 1993ஆம் ஆண்டில் இருந்து எம்.ஐ- 17 ஹெலிகளைப் பயன்படுத்தி வருகிறது.

தற்போது இலங்கை விமானப்படையினரின் 6ஆவது ஹெலி அணியில் 13 தொடக்கம் 18 வரையான இந்த வகை ஹெலிகள் உள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்யா சென்றிருந்த போது, 10 ஆண்டுகால அடிப்படையில் அந்த நாடு வழங்க முன்வந்த 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்திலேயே இந்தக் ஹெலிகளை இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது. (த)

# நிமலரூபனின்...

01↘ நிமலரூபனின் வீட்டில் இராணுவத்தினரின் அளவுக்கதிகமான பிரசன்னம் காணப்படுகின்றது. இதனால் அயலவர்கள் கூட நிமலரூபன் வீட்டிற்குச் சென்று உதவி செய்ய முடியாத நிலை காணப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா சிறைச்சாலையில் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் சடலம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு இன்றைய தினம் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

இதற்காக நிமலரூபனின் வீட்டை துப்புரவு செய்யும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அந்தப் பகுதிகளில் பெருமளவான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நிமலரூபனது உறவினர்கள்,அயலவர்கள் கூட அவர்களது வீட்டுக்குச் செல்லப் பயப்படுகின்றனர். அந்தளவு தூரத்துக்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு சிறைச்சாலைகளில் ஆகக் குறைந்தது கொழும்பு சிறைச்சாலையிலாவது தமிழ் அரசியல் கைதிகளை வைத்திருந்தால் அவர்களது பெற்றோர்களோ , சட்டத்தரணிகளோ சென்று சந்திக்கக் கூடியதாக இருக்கும். பூசா முகாமுக்கு மாற்றும் பட்சத்தில் அவர்களை யாரும் சந்திக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகளை துன்புறுத்தாமல் விடுதலை செய்ய வேண்டும்- என்றார் (த-5)

# மயிலிட்டியை...

01↘ லும் வசித்து வருகின்றனர். தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி மயிலிட்டியைச் சேர்ந்த 1032 குடும்பங்கள் அரச அதிபரிடமும் மனு கையளித்திருந்தன.

இந்த நிலையில் தற்போது அந்தப் பகுதிகளை நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு மயிலிட்டியைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்களைக் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மாத நடுப்பகுதியில் கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அதில் மயிலிட்டியைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குப் பொருத்தமான காணியைக் கண்டறியுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த்து. அதற்கமைய அக்கரைப் பிரதேசத்தின் சிவன்கோயிலடிப் பகுதியை பிரதேச செயலர்·ம.பிரதீபன் இனங்காட்டினார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரிய மேற்படி காணியில் 97 காணித் துண்டங்கள் காணப்படுகின்றன. அதில் ஏற்கனவே 32 குடும்பங்கள் வசித்து வருகின்றன. எஞ்சிய 55 காணித் துண்டங்களிலேயே மயிலிட்டி மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கை கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் 97 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அக்கரைப் பிரதேசமும் மீன்பிடிப் பிரதேசம் என்பதால் அந்தப் பகுதி மக்களுடன் இணைத்து மயிலிட்டி மக்களையும் குடியமர்த்த அரசும், இராணுவமும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இதன் மூலம் மயிலிட்டிப் பகுதியை நிரந்தரமாக சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

# கிளிநொச்சியில்...

01↘ பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. உரிய பொலிஸ் அனுமதி பெறப்படாமையாலேயே பேரணி தடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.1983ஆம் ஆண்டு ஜூலைப் படுகொலையின் நினைவு நாளான ஜூலை 23ஆம் திகதியான இன்று 'இன நல்லிணக்கத்தையும் தேசிய ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுதிரள்வோம்' என்ற தொனிப்பொருளில் இந்தப் பேரணி நடைபெற்றது.ஜே.வி.பியின் இளைஞர் அணி யான சோசலிஷ இளைஞர் சங்கமும் தென்பகுதியிலிருந்து கிளிநொச்சிக்கு வருகை தந்த ஜே.வி.பியின் உறுப்பினர்களும் ஜே.வி.பியின் கிளிநொச்சிக் கிளையினரும் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணி யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் மாவட்டச் செயலம், பொலிஸ் தலைமையகம், பொது மைதானம் ஆகியவற்றைக் கடந்து கரடிப்போக்குச் சந்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பொலிஸார் தடை விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸில் முறைப்படியான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமையால் பேரணி நடத்துவதைத் தம்மால் அனுமதிக்கமுடியாதென கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வம் தெரிவித்தார்.(த-6)

# அமைச்சர் கைதாகும்...

01↘ நேற்று மன்னார் நீதிமன்றத்தின் முன்பாக வடக்கு மகாணத்தில் உள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை, நீதிமன்றம் தாக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்தும் இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல் லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இதில் கலந்துகொண்டு எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை யும்,தாக்குதலாளிகளையும் கைது செய்யும் வரை தமது பணிப்புறக் கணிப்புத் தொடரும் என அறிவித்தனர். (த-4-12)

# பழைய பாடத்திட்ட...

01↘ கள், பெற்றோருடன் நேற்று 'உதயன்' அலுவலகத்துக்கு நேரில் வந்து தமது அவலநிலை குறித்து மனக்கவலையுடன் தெரிவித்தனர். தமக்கான தீர்வை சம்பந்தப்பட்ட தரப்பினர் பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தில் தோற்றியிருந்தோம். எமக்கான வினாப்பத்திரங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேர அளவு தான் புதிய பாடத்திட்டத்தினருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் எமக்கு அதிகளவான வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டியிருந்தன. ஒரே நேர அளவீட்டில் வினாக்களின் எண்ணிக்கை புதிய, பழைய பாடத்திட்டத்துக்கு மாறுபட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. அப்போது வெளியிடப்பட்ட 'இஸற்' புள்ளி தரவரிசை என்பன சிறிது நேரத்திலேயே மாற்றப்பட்டு புதிய தரவரிசை, 'இஸற்' புள்ளி என்பன வெளியிடப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் மருத்துவபீடம், பொறியியல் பீடம் கிடைக்கும் என்று நாம் எண்ணியிருந்தோம். இந்த நிலையில் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய புதிய, பழைய பாடத்திட்டத்துக்கு இரு வேறு 'இஸட்' புள்ளிகள் வெளியிடப்பட்டன. ஆனால் இரண்டுக்கும் ஒரே தர வரிசையே வெளியிடப்பட்டுள்ளது.

இதில் பழைய பாடத்திட்டத்தில் தோற்றிய எங்களுக்கு 30 தர நிலை வரை கீழிறக்கப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ பீடம், பொறியியல் பீடம் என்பனவற்றுக்குத் தெரிவாக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் இந்த ஆண்டு இடம்பெறும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கும் தோற்ற முடியாது. மருத்துவ பீடம், பொறியியல் பீடம் ஆகியவற்றில் அனுமதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கப்பட்டுள்ளன- என்றனர்.

இதன்படி மாவட்ட நிலையில் முன்னர் 24ஆவது தர நிலையைப் பெற்ற பி.விஷ்ணு தற்போது 43ஆவது நிலையையும் 40 ஆவது தர நிலையைப் பெற்ற ரி.திருவரன் தற்போது 58 ஆவது நிலையையும் 48 ஆவது நிலையைப் பெற்ற எஸ்.கோபிகாந்தன் 63 ஆவது நிலையையும் 45 ஆவது நிலையைப் பெற்ற ரி.தர்ஷன் 61 ஆவது நிலையையும் 51ஆவது நிலையைப் பெற்ற இ.வேல்மகிபன் தற்போது 71 ஆவது நிலையையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை புதிய 'இஸற்' புள்ளி வெளியீட்டால் பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களையும் மணிக்கூட்டு நிலைய வீதியிலுள்ள சயன்ஸ் கோணரில் காலை 10 மணிக்கு ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் சிறுவர்களின் எதிர்காலம்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது இன்று எல்லோராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாக மாறியுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகமும் சிறுமிகள் (இளம்பெண்கள்) மீதான பலாத்காரமும் சர்வசாதாரணமாக நடைபெறும் சம்பவங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. இந்தவிடயங்கள் பற்றிய முறைப்பாடுகள் பதியப்படாத பொலிஸ் நிலையங்களே நாட்டில் இல்லையென்று சொல்லிவிடலாம்.

இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பது பற்றி சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரஜைகள் எவரும் அதிகம் சிந்திப்பதாகத் தெரியவில்லை. பொலிஸ் திணைக்களம் இருக்கிறது. குற்றங்களை அவர்களிடம் பதிவது மக்கள் கடமை, அவைகளைக் கண்டுபிடித்து தவறு செய்கிறவர்களை நீதி மன்றங்களில் நிறுத்துவதும் தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதும் அவர்களின் கடமை என்றவாறு பலரும் இருந்து வருகிறார்கள். உண்மையில் இது ஒரு மிகவும் பாரதூரமான விடயம். புற்றுநோயைப் போல் சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களிலும் முளைவிட்டு பெருகிக்கொண்டிருக்கும் பல்வேறு குற்றச்செயல்களில் சிறுவர் துஷ்பிரயோகமும் சிறுமிகள் மீதான வன்புணர்வு முயற்சிகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. அரசியல் தலைவர்களுக்கோ, அதிகார வர்க்கத்தினருக்கோ இது பற்றிக் கவலையில்லை.

இருந்த போதிலும் ஒரு சில அமைப்புகள் இந்தச் சமுதாய சீர்கேட்டைத் தடுத்து நிறுத்துவதற்காக செயல்படவும் சமூகத்தின் சகல தரப்பினரது கவனத்தையும் இதன் பால் திருப்பி சிந்திக்க வைக்கவும் முன்வந்திருப்பது சற்று ஆறுதலான விடயம். அந்த வகையில் நேற்று முன்தினம் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் பல அரசு சாரா அமைப்புகளும் பெண்ணிய உரிமை செயற்பாட்டாளர்களும் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறார்கள்.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக நடைபெறும் குற்றங்களை புலனாய்வு செய்யவும் விசாரணை நடத்தி தண்டனைகளை வழங்கவும் சிறப்பு நீதிமன்றங்களை நிறுவும்படி அவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த மாதிரிக் குற்றச் செயல்களைக் கண்காணித்து செயல்படும் வகையில் கிராமங்கள் தோறும் சமுதாய காவல் குழுக்களை நியமிக்கும் படியும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்துள்ள ஐ.தே.க வின் நாடாளுமன்ற உறுப்பினர் றோசி சேனநாயக்க, பாலியல் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படும் அரசியல் வாதிகளின் குடியியல் உரிமைகளைப் பறிக்க வேண்டும். அவ்வாறானவர்கள் வகிக்கும் பதவிகளில் இருந்தும் அவர்கள் தூக்கி எறியப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாட்டில் சிறுவர்களுக்கெதிரான வன்செயல்கள் அதிகரித்திருப்பதற்கு திறந்த பொருளாதாரமும் வர்த்தக மயமாக்கலும் பெருமளவில் காரணமாக இருந்துள்ளன என்று றோமன் கத்தோலிக்க திருச்சபை மற்றும் தேசிய கிறிஸ்தவ சபையின் சார்பில் கருத்துத் தெரிவித்துள்ள வண.பிதா ரோஹான் சில்வா கூறியுள்ளார். வர்த்தகமயமாக்கலானது நாட்டில் தார்மிக விழுமியங்களைச் சீர்குலைத்துவிட்டது. சிறுவர்களைப் பயன்படுத்திய பின்னர் அவர்களைப் புறக்கணித்துவிட அது உதவியுள்ளது என்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஊடகங்கள் இந்தவகையான குற்றங்களை புரிபவர்களை வெளிப்படுத்த வேண்டும். அதே சமயம் சகல சமயங்களையும் சார்ந்த சமூக ஆர்வலர்கள் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக பணியாற்ற முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இலங்கை றோமன் கத்தோலிக்க திருச்சபைகளின் தலைவர் வண.சி.என்.ஜான்ஸ், பத்திரிகையாளர்கள் சந்திப்பில் நேற்று முன்தினம் கருத்து வெளியிடுகையில் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு விரிவான விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பாதிக்கப்படுபவர்களுக்கு உறுதியான ஆதரவு கிடைப்பதற்கான ஓர் அமைப்பு முறை செயற்பட வேண்டும். சட்ட உதவி போன்று ஏனைய உதவிகளும் அவர்களுக்குக் கிடைப்பதாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் இளம் பெண்கள் தொடர்பான வன்செயல்களை சமூகத்திலிருந்து அகற்றுவதற்கு சமூகத்தில் உள்ள அனைவருமே மும்முரமாக பணியில் இறங்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஏற்கெனவே பலரும் சுட்டிக் காட்டியிருப்பது போல் சிறுவர்களின் பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் இதில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். சிறுவர்களை, சிறுமிகளைத் தனித்து விடுவது, தூர இடங்களுக்குத் தனியாகச் செல்ல அனுமதிப்பது போன்ற விடயங்களில் இவர்கள் தம் கண்காணிப்பை புறந்தள்ளி விடக்கூடாது.

தனியாகச் செல்லும் அல்லது தனித்து இருக்கும் பெண்களே பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

இந்த விடயத்தில் பாடசாலைக் கல்விச் சமூகங்களும் அக்கறை எடுப்பது வரவேற்கத்தக்கது. பொறுப்புள்ள ஆசிரியர்கள் குழுக்களாகச் செயல்பட்டு சிறுவர்களின் செயற்பாடுகளை அவதானிக்க முடியும். பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி விட்டு தொழில்களுக்குச் செல்லும் போது அவர்களை ஆசிரியர்களும் தம் பிள்ளைகள் போல் கூடியவரை கண்காணிக்க முயல்வது ஒரு சமுதாய கடமையாக அமையும்.

பொதுவில், நாட்டின் மக்கள் குறிப்பாக சிறுவர்களும், சிறுமியர்களும் பாதுகாப்பாக இருக்கவும் உரிய பொறிமுறைகளை உருவாக்க வேண்டியது அரசின் கடமை. இளம் சமுதாயத்தினரே இந்த நாட்டின் எதிர்காலச் சொத்து என்று கருதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனம் இந்த சமுதாயத்தினரின் பாதுகாப்புத் தொடர்பாகவும் விசேஷமாக திரும்ப வேண்டும்.

# பளைப் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தை புனரமைக்குக

## பிரதேச மக்கள் கோரிக்கை

பளை, ஜூலை 24

பளைப் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தை மீண்டும் புனரமைக்கப் பிரதேசத்தில் உள்ள பிரமுகர்கள் முன்வர மாட்டார்களா என்று பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையான பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளில் முகமாலை பிரிவும் வேம்பொடுகேணி, இத்தாவில் பிரிவுகளில் ஒரு தொகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடியமர்ந்துள்ள போதிலும் இன்னமும் தனியார் வீடொன்றில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருகிறது.

**இரண்டு வருடங்களுக்கு மேலாக தனியார் வீடொன்றில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வைத்தியசாலை இயங்கி வருகிறது**

நோய்களால் பாதிக்கப்படும் மக்கள் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய ஆதார வைத்திய சாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பிரதேசத்துக்கென பல மில்லியன் ரூபா செலவில் வைத்திய சாலைக்கான நிர்வாக அலகு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டு ஒரு வருடமாகியும் வேலைகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் செயற்படாமல் உள்ள வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைத்துச் செயற்படுத்திப் பிரதேச மக்களுக்கு சிறந்த வைத்திய வசதிகள் கிடைக்க பிரதேச பிரமுகர்கள் முன்வர வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

பிரதேச மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான வைத்திய சேவைக்கென இரண்டு வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றுகின்ற போதிலும் பிரதேச வைத்தியசாலை இரண்டு வருடங்களுக்கு மேலாக தனியார் வீடொன்றில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## விபத்துக்களில் சிக்கி காயமடைவோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாவட்டத்தில் தினமும் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. விபத்துக்கள் அதிகரிக்க வாகனங்களின் அதிகரிப்பு மட்டுமல்ல வீதி அகலிப்பும் ஒரு காரணமாக உள்ளது. முன்னர் பத்து அடி தூரத்தில் காணப்பட்ட வீதிகள் தற்போது முப்பது அடிகள் வரை அகலிப்புச் செய்யப்பட்டுள்ளன. வீதி அகலிப்பால் வீதியைக் கடக்க முற்படும் வேளையில் விபத்துக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெறுகின்றன.

ஏ-9 வீதி கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான நெடுஞ்சாலையாக அகலிக்கப்பட்டு வருகிறது. இந்த வீதியில் பாதசாரிகளும் சைக்கிளில் செல்வோரும் வீதியோரத்தைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அந்த விதிமுறையை எவரும் கடைப்பிடிப்பதில்லை.

வீதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் பெரும்பாலானவை வேகமாக வந்த வாகனங்களால் மோதப்படுவதால் ஏற்பட்டவையே.

பல வீதிகள் தற்போது காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளதால் சாரதிகள் வேகமாக வாகனங்களைச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது.

கடந்த ஆறு மாதங்களில் ஆயிரக்கணக்கானோர் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்துள்ளதுடன் அநியாய உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-9)

## துப்பாக்கி வைத்திருந்த குற்றத்தில் கைதானோர் மீது தொடர் விசாரணை

வலி வடக்கு, ஜூலை 24

மானிப்பாய் பகுதியில் ரி 56 ரக துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மானிப்பாய் பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டைச் சோதனையிட்ட மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்ட துப்பாக்கியையும் மற்றும் துப்பாக்கிக்கான ரவைகள் மற்றும் 02 கைக்குண்டுகள் என்பவற்றை மீட்டதுடன் சந்தேகத்தின் பெயரில் மூவரையும் கைது செய்திருந்தனர்.

யாழ். மாவட்ட நீதிமன்றில் சந்தேகநபர்கள் மூவரும் மானிப்பாய் பொலிஸாரால் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இந்த நிலையில் நீதிமன்றில் பொலிஸார் விடுத்த கோரிக்கையை அடுத்து மூவரையும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ம-86)

## குறைமாதப் பிள்ளையைப் பெற்று வீட்டுக் காணியில் புதைத்த பெண்

### சுன்னாகம் பொலிஸார் விசாரணை

குறைமாதப் பிள்ளையைப் பெற்று வீட்டில் புதைத்த சந்தேகத்தின் பேரில் ஓர் இளம் பெண் சுன்னாகம் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் நந்தாவில் தாவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பிள்ளை பிறப்பதற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்கும் நிலையில் பிள்ளை இறந்த நிலையில் வீட்டில் பிறந்ததாகவும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட அதிக இரத்தப் போக்கால் யாழ். போதனா வைத்திய சாலையில் குறித்த பெண் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து குறிப்பிட்ட பெண் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இறந்த நிலையில் பிறந்ததாகக் கூறி, வீட்டு வளவில் புதைக்கப்பட்ட பிள்ளையின் சடலமும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

# கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூலை 24

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அரங்கில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் சபையின் போஷகருமான என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், மருத்துவர் திருமதி சகிதேவி தயாபரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

''கலை இலக்கியமும் கடந்த காலமும்'' என்னும் நூலை கலை இலக்கிய களத் தலைவர் சைவப் புலவர் சு.செல்லத்துரை அறிமுகம் செய்து வெளியிட்டு வைக்க முதற் பிரதியைப் பொறியியலாளர் சி.தயாபரன் பெற்றுக் கொண்டார்.

பண்டிதர் சி.அப்புத்துரையின் 'ஈழத்து தமிழ் புலவர் வரலாறு வாழ்வியலும் நூலகமும்' என்னும் நூலுக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் கலாநிதி கி. விசாகரூபன் அறிமுக உரை நிகழ்த்தினார்.

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் 'சிவகாமி கவிதை' நூலுக்கான அறிமுகவுரையை நாடக கலாவித்தகர் திருமதி பகீரதி கணேசதுரை நிகழ்த்தினார்.

முதுபெரும் கலைஞர் வை.கா. சிற்றம்பலம், இளவாலை புலவர் ம.பார்வதிநாதசிவம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவின் கீழ்வரும் பாலிநகர் இலக்கம் 6 கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் தலைமையில் டெங்கு ஒழிப்புக்கான சிரமதானப் பணிகள் இடம்பெறுகின்றன. (415)

# மோசமான நிலையில் தற்காலிக வீடுகள்

முல்லைத்தீவு, ஜூலை 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக வீடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டு மக்கள் வசிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இங்கு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு மூன்று வருடங்களான நிலையில் இதுவரை பலருக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை. தற்காலிக வீடுகளிலேயே அவர்கள் இன்னமும் வசிக்கின்றனர். ஆனால் இந்த வீடுகளின் தடிகளைக் கறையான்கள் அரித்துச் சேதப்படுத்தியுள்ளன. இதனால் இவை முறிந்து விழும் நிலையிலுள்ளன.

ஏற்கனவே தற்காலிக வீடொன்று முறிந்து விழுந்ததால் பிரதான குடியிருப்பாளர் ஒருவர் காயமடைந்துள்ளார். இதனால் இந்த வீடுகளில் தங்குவதற்கு மக்கள் அஞ்சும் நிலையே காணப்படுகின்றது.

மேலும் தற்போது வீசும் காற்றால் வீடுகளின் மேற்கூரைகளும், வேலிகளும் மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் வெட்ட வெளியில் திறந்த வீடுகளில் அச்சத்துடன் மக்கள் பொழுதைக் கழிக்கின்றனர்.

திருடர்களும், விஷ ஜந்துக்களும் இவர்களின் தூக்கத்தைக் கலைக்கும் பிரதான காரணிகளாக உள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் இவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு இந்த மக்களுக்கு விரைவில் நிரந்தர வீடுகளை வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க-500)

# துணுக்காயில் அமைக்கப்பட்ட கமநல சேவை நிலையம் திறப்பு

அக்கராயன், ஜூலை 24

துணுக்காயில் எட்டு மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கமநல சேவை மத்திய நிலையம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

விவசாயம் மற்றும் வனவள அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன், கமநல சேவைகள் நிலையங்களின் ஆணையாளர்நாயகம், விவசாய அமைச்சின் மேலதிக செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு உதவி விவசாய ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வின்போது 150 தெளிகருவிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் அடுத்த வாரமளவில் 75 இரு சக்கர உழவு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுமார் 500 விவசாயிகள் கலந்து கொண்டனர். (க-18)

# உடையார்கட்டு மேற்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் ரூ.20 ஆயிரம் கொடுப்பனவு

சண்டிலிப்பாய், ஜூலை 24

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின்கீழ் வரும் உடையார்கட்டு மேற்குப் பகுதியில் ஏற்கனவே மீளக்குடியமர்ந்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெறாதவர்களுக்கும் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் இந்தப் பணத்துக்கான காசோலையை வழங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள சிவநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீளக்குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்து 272 குடும்பத்தினர் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

சிவநகர் கிராமத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, செட்டிகுளம் மனிக்பாம் முகாமில் இருந்த 141 குடும்பத்தினர் கடந்த வாரம் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**இந்தக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களைச் சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கு வசதியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.**

இந்தக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களைச் சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கு வசதியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய ஏனைய மாவட்டங்களில் வசித்து வந்த 272 குடும்பத்தவர்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை சிவநகர் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட 141 குடும்பங்களில் 140 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் மேலும் 5,000 ரூபா பணமாக வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சிவநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீளக் குடியமர்த்தப்பட்ட 141 குடும்பங்களில் 129 குடும்பங்களுக்குக் கடந்த வாரம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் 20 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்த மக்களின் நலன் கருதி, மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட காசோலை மறுநாள் கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் வைத்துப் பணமாக மாற்றிக் கொடுக்கப்பட்டது.

(க-115)

# கெருடமடு தீர்த்த உற்சவத்தில் அதிக எண்ணிக்கையில் மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 24

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கெருடமடுவில் ஆடி அமாவாசையன்று இடம்பெற்ற தீர்த்தோற்சவ நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெருடப் பறவையால் உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கெருடமடு என்றுமே வற்றாத நீரைக் கொண்டது.

தீர்த்த உற்சவத்துக்கு முதல் நாள் இங்கு வந்தவர்கள் கெருடமடுவில் குறைந்தளவு நீர் இருக்கக் கண்டனர். அடுத்த நாள் இதில் எவ்வாறு தீர்த்தமாடுவது என்றும் தமக்குள் கதைத்துக் கொண்டனர்.

ஆனால் அடுத்த நாள் தீர்த்தமாடும் நேரம் வந்தபோது மடுவில் போதியளவு நீர் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினம் முல்லைத்தீவில் வாழும் மக்கள் தமது இறந்தோருக்கான பிதிர்க் கடன்களை இங்கே நிறைவேற்றித் தீர்த்தமாடிச் சென்றதைக் காண முடிந்தது. (க-500)

# சுற்றாடல் குழுவினருக்கு பாடசாலையில் கௌரவம்

வவுனியா, ஜூலை 24

வவுனியா நெளுக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சுற்றாடல் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

கௌரவிக்கப்பட்ட சுற்றாடல் குழுவினர் பாடசாலையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் பூந்தோட்டம் அமைத்தல், பாடசாலையைச் சுத்தம் செய்தல், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, சுகாதார ரீதியில் விளையாட்டு வீரர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், சுற்றாடல் விழிப்புணர்வு தொடர்பான பதாகைகளைத் தொங்கவிடல், கருத்தரங்குகளை ஒருங்கமைத்தல், நூல் வெளியீடு ஆகிய பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வந்துள்ளனர்.

இவர்களுக்குக் கௌரவம் வழங்கும் நிகழ்வைப் [illegible]சாலை அதிபர் முன்மாதி[illegible]யாக நடத்தி வைத்தார்.

இந்தச் செயலை இங்[illegible]ள்ள கல்விச் சமூகத்தினர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

(க-402)

# 72 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் மட்டுமே

துணுக்காய், ஜூலை 24

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கி வரும் அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலையில் உள்ள தரம் ஒன்றில் கல்வி கற்கும் 72 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் மட்டுமே கற்பித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் 3 ஆசிரியர்கள் இந்த வகுப்பில் கற்பித்து வந்தனர். இரண்டாவது தவணை ஆரம்பத்தில் ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். ஆசிரியை ஒருவர் பிரசவ விடுமுறையிலுள்ளார். தற்போது ஆசிரியர் ஒருவரே கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். பிரதி அதிபரும் வேறொரு ஆசிரியரும் அவ்வப்போது உதவி புரிந்து வருகின்றபோதிலும் மாணவர்கள் தமது கல்வியை முழுமையாகப் பெற முடியாத நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் வடகாடு கிராமம், அனிஞ்சியன்குளம் இரண்டாம் பகுதிக் கிராமம், புகழேந்தி நகர்க் கிராமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

தரம் 1 இல் இவர்கள் முறையான கல்வியைப் பெறாதுவிட்டால் இவர்களின் எதிர்காலமே பாதிப்படைந்து விடுமெனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தரம் 1 வகுப்புக்குத் தேவையான ஆசிரியர் [illegible] தமது பிள்ளைகளின் கல்விக்கு [illegible] விடுத்துள்ளனர். (க)

# ரயில் பாதை புனரமைப்பு வவுனியாவில் துரிதம்

வவுனியா, ஜூலை 24

வவுனியாவிலுள்ள ரயில் பாதைகள் கடந்த சில நாள்களாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாகப் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள், தண்டவாளங்கள் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அடுத்துத் துரிதமாகத் தண்டவாளங்களைப் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

**பாதுகாப்பற்ற ரயில் கடவை தொடர்பாகவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.**

தண்டவாளங்களுக்கு இடையில் கற்களை இடல், தண்டவாளங்களுக்கு இடையிலுள்ள மரக் கட்டைகளுக்கு பதிலாக சிமெந்துக் கட்டைகளை மாற்றியமைத்தல் மற்றும் ரயில் கடவைகளில் சமிக்ஞை இடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் உட்படப் பல்வேறு பணிகளை வவுனியா ரயில்வே பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பாதுகாப்பற்ற ரயில் கடவை தொடர்பாகவும் மேலதிகாரிகளை அணுகி உரிய பாதுகாப்பு வசதிகளை மேற்கொள்ளவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அண்மையில் தேக்கவத்தைப் பகுதியில் பயணிகளின் ஹைஏஸ் வாகனம் குடைசாய்ந்தமை தொடர்பான செய்தி வவுனியா ரயில்வேப் பகுதியினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

(க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

21.07.2012 சனிக்கிழமை சோமசுந்தரம் பேராசிரியர் என்பவருடைய கைபாக் (கற்பித்தல் ஆவணங்கள்) ஒன்று உடுவிலிலிருந்து உரும்பிராய்க்கும் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கும் சைக்கிளில் செல்லும்போது தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு - 0775609200

மானிப்பாய் வீதி உடுவில்,சுன்னாகம் (20776) (3.6.7)

## பெறுபேறுகள் நாளையே

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியில் பீடத் தமிழ் மாணவர்களால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக நேற்று பார்வையிடமுடியவில்லை.

இந்தப் பெறுபேறுகள் இன்று இணைய தளத்தில் பார்க்க முடியும். அத்துடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களது விவரம் நாளைய உதயனில் வெளியாகும். (10)

## வாடகைக்குண்டு

சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்குண்டு.

தொடர்பு -0774767215 (20792) (3.14)

## தவறிவிட்டது

நவரட்ணராசா சங்கீத்காந் ஆகிய எனது 902243011V இலக்க NIC, லைசன்ஸ், ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ். நகரப்பகுதிக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்

தொடர்புகளுக்கு -

0779877974 / 0212221548 (20786) (3.14)

## விண்ணப்பம் கோரல்

அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் லோகோ திட்டத்தின் கீழ் (LOGO PROJECT) தொழில்நுட்ப உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்) பதவிக்கு 06 மாத கால ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்

வெற்றிட எண்ணிக்கை - 08

01. கல்வித்தகைமை : இரண்டு பாடங்கள் அடங்கலாக 03 விஞ்ஞானப் பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலும் அத்துடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் கூடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இத்துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழிநுட்பவியல் சான்றிதழ் (3 வருட பகுதி நேரப் பயிற்சி பாடநெறி) அல்லது

படவரைவியல் தொடர்பாக ஒரு வருட முழு நேரகால பயிற்சி பாடநெறியை திருப்திகரமாக பூர்த்தி செய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்

02. தொழில்சார் தகைமை : தொழில்நுட்பம் தொடர்பான தகைமைகள்

மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்)

வெற்றிட எண்ணிக்கை - 01

01. கல்வித்தகைமை க.பொ.த (சா/த)/க.பொ.த(உ/த) / பட்டதாரி / மொழித்தேர்ச்சி

02. தொழில்சார் தகைமை : மொழிபெயர்ப்பு அனுபவம் தொடர்பான சான்றிதழ் மொழி பெயர்ப்பு மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து 26.07.2012 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடவும். குறிப்பிட்ட கல்வித்தகைமை உடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(சுந்தரம் அருமைநாயகம்)
அரசாங்க அதிபர், மாவட்டச்செயலாளர்,
யாழ். மாவட்டம்

(C/1659)(8-14)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பரீட்சையைப் பிற்போடல்

25.07.2012 அன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற விருந்த முழு நேர உப விடுதிக் காப்பாளர், தரம் 11 பதவிக்கான பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சகல பரீட்சார்த்திகளும் இதனைக் கருத்தில் கொள்ளவும்.

பதிவாளர்.

2012.07.24 (சி/1658) (2,6,7)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பாக்கியம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாக்கியம் நேற்று (23.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2012) செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆ.விபுலானந்தராஜா (மகன்)

(சி/1666) (3) முத்தட்டு மட வீதி,

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா



வழக்கம்பரை பூதராசிஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா கடந்த (21.07.2012) சனிக்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதிக்குருக்கள் - இராசம்மாள் தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் - பல்வளைநாயகி அம்பாள் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இசையாசிரியர் கோவிந்தராஜா ஐயர் அவர்களின் பாசமிகு மனைவியும், திலகேஸ்வரி காலஞ்சென்ற விஜயசுந்தரம், மகாராசா (தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஓய்வு பெற்ற கொள்வனவாளர்- அச்சுவேலி தற்போது கனடா), நந்தகோபாலக்குருக்கள் (பிரதமகுரு நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் - வல்வெட்டித்துறை), பராசக்தி, கதிரமலை, பொன்னம்மா சத்தியமூர்த்தி (ஓய்வு பெற்ற இசையாசிரியர் - கொழும்பு - தற்போது ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற இசையாசிரியர் - வவுனியா, தற்போது தபாலதிபர் - லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா - உதயகுமாரி (லண்டன்), உதயகுமாரன் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீதரன், கேதீஸ்வரி, வள்ளிகாந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும்,ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), அருந்தவநாயகி (கனடா), அறிவழகி (ஆசிரியர், ந/மங்கையர்க்கரசி வித்தியாலயம்), ஸ்ரீதரன் (லண்டன்), காமினி (கனடா), வதனா ஆகியோரின் பாசமிகு மாமியும், வரதா (கனடா), வனஜா (கனடா), வத்சலா (கனடா), ஸ்ரீகரன் (கனடா),ஸ்ரீசங்கமீரா, ஸ்ரீசங்கீதன், ஸ்ரீசங்கநேசன், சாயினி (கனடா), சயந்தவி (கனடா), சௌதாமினி, சோபனா, கணசியாம் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் 203, கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:

203, கோயில் வீதி, நல்லூர்

லயன்.கோ. ஸ்ரீஸ்கந்தராஜா (மகன்),

(20789)(8-14) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## விசேட கருத்தரங்கு

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

கொழும்பிலிருந்து வருகை தரும் பிரபல்யமான வளவாளர்களினால் 2012 பரீட்சைக்குத் தோற்றும் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்காக விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது

| திகதி | பாடம் | வளவாளர்கள் |
|---|---|---|
| 24.07.2012 காலை 9.00 | உயிரியல் | திரு. K.V. குகாதரன் |
| 24.07.2012 | பொருளியல் | திரு. V.K. ரூபன் |
| 24.07.2012 25.07.2012 காலை 9.00 | அரசியல் | திரு. V.K. செல்வா |
| 25.07.2012 26.07.2012 காலை 9.00 | கணக்கீடு | திரு. M. சசிரூபன் |
| 26.07.2012 காலை 9.00 | புவியியல் | திரு. N. இராஜமனோகரன் |
| 27.07.2012 காலை 9.00 | இணைந்தகணிதம் | திரு. குணசிங்கம் |
| 28.07.2012 காலை 9.00 | இரசாயனவியல் | திரு. A. சிவகுமார் |
| 30.07.2012 31.07.2012 காலை 9.00 | பொருளியல் | திரு. K. உதயன் |
| 01.08.2012 காலை 9.00 | கணக்கீடு | திரு. கு.ஸ்ரீ |

அனுசரணை வழங்குபவர்-

மகாஜனன் கலாநிதி.சி.சிவபவானந்தா, பொறியியலாளர் (இங்கிலாந்து)

மகாஜனன் கலாநிதி.சி.நிர்த்தானந்தா (S.S. ஆனந்தன்) பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வி வலயம், திருகோணமலை.

மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கும், ஏனைய கல்லூரி மாணவர்களுக்கும் இக்கருத்தரங்கு இலவசமானது.

மகாஜனக்கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்,

பழைய மாணவர் சங்கம்.

(சி/1660) (3.6.14)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி துரைராசா (சின்னக்கிளி)



வேலணை கிழக்கு அம்மன் கோயிலடி, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் துர்க்கா கண்டோன் வயின்பில்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா கமலாதேவி (20.07.2012) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி - தெய்வானை தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், ரவிக்குமார் (ரவி - சுவிஸ்), ரவிமோகன் (ஜேர்மனி), கயல்விழி (சுவிஸ்), சசிகரன் (பிரான்ஸ்), சர்மிளா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரசேகர் (இந்தியா), சந்திராதேவி (பிரான்ஸ்), ராஜேந்திரன் (கொழும்பு), மகாதேவன் (சாவகச்சேரி), சறோஜாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உஷாநந்தினி (சுவிஸ்), குமுதினி (ஜேர்மனி), திருக்கேதீஸ்வரன் (சுவிஸ்), பாமினி (பிரான்ஸ்), விஜயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் செல்வதி (கொழும்பு), காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தெய்வேந்திரம் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற அமுதவதி மற்றும் புனிதவதி (யாழ்ப்பாணம்), லோகாம்பிகை (இந்தியா), அருளையா (பிரான்ஸ்), சாரதாதேவி (கொழும்பு), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், முரளிதாஸ் (கனடா), சங்கரன் (கனடா), துஞ்சா (ஜேர்மனி), டிசினி (ஜேர்மனி), கஜன் (இந்தியா), வாணி (கனடா), தினேஸ் (லண்டன்), ரஜனி (லண்டன்), வதனி (கொழும்பு), கௌசி, சரணியா, சுவே, டிசானா (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஹேமா மற்றும் பாமா, துஷி ஆகியோரின் பாசமிகு மாமியும், அருட்செல்வி (பிரான்ஸ்), சத்தியசீலன் (சுவிஸ்), சுபிதா (பிரான்ஸ்), கவிதா (சுவிஸ்), கார்த்திகா (பிரான்ஸ்), சிந்துஜன், ஆருஜன், அஜந்தினி, பிரியந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், கௌசிகன், கௌதமன், காவியா, துசிந்தன், கவிநாஸ், அஸ்மிரா, துவாரகா, பவித்திரன், சாருகா, விதுசா, சச்சின், சௌமியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2012) புதன்கிழமை 9 மணிமுதல் 2 மணிவரை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுவிஸ்.

தகவல்: குடும்பத்தினர். (18126) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கி வரும் DS-Max International மீண்டும் 25 பேருக்கு பயிற்சி அளிக்க முன்வந்துள்ளது. இதுவரையில் 25 பேருக்கு ரூ.35000/= சம்பளத்துடன் வேலைபெற வைத்துள்ள (யாழ். நகரிலேயே) இந்தக் கம்பனியானது சாதாரணதர கல்வி கற்ற திறமையானவர்களையே ஏதிர்பார்க்கின்றது.

* பயிற்சிக்காலத்தில் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.
* பயிற்சி முடிவில் சர்வதேச ரீதியில் சான்றிதழும் ரூ.35000/= சம்பளத்துடன் வேலையும் வழங்கப்படும்.
* பயிற்சிக்காலத்தில் மாதாந்தம் வருமானமாக ரூ.12000/= பெறமுடியும்.

உடனே அழைக்க வேண்டிய இலக்கங்கள்.

**0778330074 (சிந்தர் - முகாமையாளர்)**
**0772151014 (கிஷோர் - உதவி முகாமையாளர்)** (20450) (14.3)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக் கூடிய **BAHIRAHA NO-1** புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 26.07.2012 அன்று விநியோகிக்கப்படும்.

பதிவுகளை மேற்கொள் ளவும்.

* றாஜீவ் நவாலி வீதி ஆனைக்கோட்டை
* P. ரவி சாவகச்சேரி,
* ஜென்சி பாம், பருத்தித்துறை, (T.P- 0773541771)
* கதிர்வேளாண் கிளிநொச்சி, (T.P- 0772046803)

(20690) (3.6.7)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2011 வரையும் (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 31.01.2012 வரையும் (மீட்புக்காலம் ஆறு மாதத்துக்கானது) மீட்கப் படாத நகைகளும் 15.09.2012 (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லிவீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1657) (2.6.7) 2012.07.20

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
adyt@uthayan.com
0215671111

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள குளிர்பான நிலையமொன்றிற்கு பணியாளர்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: **0779608395** (20790) (3.14)

# மரண அறிவித்தல்கள்



*திருமதி*
### *மகேஸ்வரி கைலாயபிள்ளை*

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கைலாயபிள்ளை நேற்று (23.07.2012) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் கைலாய பிள்ளையின் (ஆயுள்வேத வைத்தியர்) அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான சட்டநாதர் -சின்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்காளான கந்தசாமி (உதவிநிலஅளவை அதிகாரி), நடராஜா (C.T.B), இராசையா (பெருந்தோட்ட அதிகாரி), Dr.இராஜேந்திரம் (E.N.T SURGEON), மற்றும் புஸ்பவதி மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, புஸ்பமணி, யோகேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2012) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்

### *செல்வி சின்னத்தம்பி மகேஸ்வரி*



நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பு சந்தியைப் பிறப்பிட மாகவும் மாவிட்டபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்தம்பி மகேஸ்வரி கடந்த (21.07.2012) சனிக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் செல்லம்மா (குஞ்சம்மா) தம்பதியரின் அன்பு மகளும், மனோரஞ்சிதம், சுலோசனா, இராசலிங்கம், தர்மலிங்கம் (சுவிஸ்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும், மயில்வாகனம், சற்குணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜீவன், துசானி, சயன், ஷாமினி ஆகியோரின் சிறியதாயும், தர்சிகா, அபி ஆகி யோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசடி வீதி, மாவிட்ட புரத்தில் (25.07.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*மாவிட்டபுரம்.*

தகவல்
செல்லம்மா (தாய்) (20783) (3.14)

## மணல் விற்பனைக்கு

நாகர் கோயில் மணல் , கண்டாவளை மணல், பூநகரி மணல் என்பன மிகவும் குறைவான விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங் களிற்கு விநியோகிக்கப்படும்.

தொடர்பு : 077 1988980
(20780)(8-14)

## தேவை

பலாலி வீதியை அண்மித்ததாக திருநெல்வேலிக்கும் கோண்டாவில் டிப்போவுக்கும் இடையில் காணி உடனடியாகத் தேவை.
தொடர்பு-
**0775631981 / 0755560062**

## Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில் உதயன் கேட்போர் கூடத்தில், 30ம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 5ம் திகதி வரை கொழும்பில்



எங்களிடம் மட்டுமே!

VISA 100%

வீசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரு 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

* MBBS
* Engineering
* Aircraft Flight Operation (Pilot)
* Management
* Hotel & Tourism
* Computing
* Automation
* Marketing
* Banking
* Nursing • Law
* HR • Design

1000's of courses...

* பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
* IELTS அவசியமில்லை
* ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
* Sponsorship தேவையில்லை
* கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
* விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
* குறைந்த வாழ்க்கைச் செலவு
* குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

**072 62 69 956**
**077 354 64 00** 87, பேராதெனிய வீதி, கண்டி.

**Rohaka (Pvt) Limited**
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
(மயஸ்ரிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி: 0112 590 445 www.rohaka-global.com

## குத்தகைக்கு காணி தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் நிறுவனம் ஒன்றின் வேலைத்தளம் அமைப்பதற்கு காணி தேவை (பெரிய வாகனங்கள் செல்லக் கூடியதாக இருத்தல் வேண்டும்)
தொடர்புக்கு: 0772607614

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு Bus Bookking செய்வதற்கும், விற்பனைப்பிரதிநிதி, கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கேற்ற ஆள்கள் தேவை.
தொடர்பு -
**0777755502**
(20779) (3.14)

## தவறிவிட்டது

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில், பெறுமதிமிக்க பொருள்களுடன் கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு -
**0778659005**
(சி/1664) (3.14)

## தவறிவிட்டது

செல்லையா மகேந்திரன் என்பவருடைய Chaly (J11-9776 )மோட்டார் சைக்கிளின் காப்புறுதி, மோட்டார்சைக்கிள் புத்தகம், கச்சேரிக்கும், மாம்பழம்சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:
0775002218,
0771900411

உதயன் சுடர் ஒளி
**நாளிதழ்களின்**
ஊடக அனுசரணையுடன்

# புலமைச்சுடர் நடாத்தும்

கொழும்பு, வவுனியா முன்னணி ஆசிரியர்கள் பங்கேற்கும்

**வலி. தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபம் - மானிப்பாய்**

# யாழ். மானிப்பாயில்...

காலம் 29.07.2012 (ஞாயிற்றுக்கிழமை)

**தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு**

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

புலமைசாலி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்


மேலதிக தொடர்புகளுக்கு:
**071 6850005,**
**071 6182182**

ஒழுங்கமைப்பு
SRI LANKA Youth
வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்

குறிப்பு : இடநெருக்கடியை தவிர்த்துக்கொள்வதற்காக நீங்கள் 077 2480863, 077 4683427 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு முற்பதிவு செய்து தங்களுக்குரிய பதிவிலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வேல் முருகன் ஆலயத்தில் இருந்து வழமையான மரபின்படி நல்லூர் கந்த சுவாமி கோயில் திருவிழா கொடிச்சீலை நேற்று எடுத்து வரப்பட்டது. (ம-7-17)

# இந்திய இழுவைப் படகுகளால் தொழில் செய்வதில் நெருக்கடி

## இந்தியத் தூதுவரிடம் நெடுந்தீவு மக்கள் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் பகுதியில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் நெடுந்தீவு மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை உள்ளது.

இதனால் தாம் மிகவும் கஷ்டம் அடைவதாகவும் இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனவும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவிடம் நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெடுந்தீவில் தொழில் வாய்ப்புக்கள் செய்ய முடியாத நிலை உள்ளதால் இங்குள்ள இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்கள் பறிபோவதால் அதற்கு இந்திய அரசு உதவ முன்வர வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதற்கு அசோக் கே காந்தா பதிலளிக்கையில், மீனவர் பிரச்சினை குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்ததுடன் நெடுந்தீவில் என்ன தொழிற்சாலைகளை அமைக்க முடியும் என்று பொதுமக்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பனம் பொருள் மற்றும் மீன்பிடி இரண்டும் இங்கு உள்ளன. பெரிய அளவிலான தொழில்கள் என்பதால் அது தொடர்பான தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் உதவியாக இருக்கும் என்று மக்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது கடற்படை, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச சபைத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(ம-7)

## நல்லூர் ஆலயச் சுற்றாடல் துப்புரவுக்கு 60 பணியாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை24

நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் துப்புரவு பணிக்கென அறுபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை யாழ். மாநகராட்சி மன்றம் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

ஆலயத்தின் திருவிழா நிறைவுறும் வரைக்கும் இந்தத் தொழிலாளர்கள் ஆலய சுற்றாடலை தூய்மையாக்கும் பணியில் தினமும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இந்தத் தொழிலாளர்களை தொடர்ச்சியாக ஆலய சுற்றாடல் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-17)

## குடிதண்ணீர் பற்றாக்குறை; விநியோகிப்பதில் நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஜூலை 24

கரவெட்டி பிரதேசத்துக்கு நிலத்தடி குழாய் மூலம் மேலதிகமாக குடிதண்ணீரை விநியோகிப்பதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு இதுவரை நிலத்தடி குழாய் மூலமே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மாயக்கையில் உள்ள நன்னீர் வற்றாத கிணறு மூலம் இந்த குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்த கிணற்றில் இருந்து 500 நீர்த் தாங்கிக்கு நிலத்தடி குழாய் மார்க்கமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இந்தத் தாங்கி மூலம் பிரதேச மக்களுக்கு குழாய் வழியாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் குழாய் மூலமான குடிதண்ணீருக்குப் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் அவர்களுக்கான விநியோகத்துக்கு தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## போசாக்குச் செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை 24

ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கான போசாக்குச் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது. சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள், சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்கள், தாய்மார், கழக அங்கத்தவர்கள் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டனர்.

போசாக்கு விழிப்புணர்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்னும் பொருளிலான செயலமர்வில் யாழ். பிராந்திய தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமகள் சிவசங்கர், மாவட்ட சுகாதாரக் கல்வி அலுவலர் திருமதி சிவகுமாரி, சமூக சுகாதார மேம்பாட்டு அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (ம- 9)

## நெடுந்தீவு உள்ளூர் சேவைக்கு இந்தியா பஸ் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

நெடுந்தீவுக்கான உள்ளூர் போக்குவரத்துக்கென புதிய பஸ் ஒன்றை வழங்க இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த இந்தியத் தூதுவரிடம் நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்துகளில் உள்ள கஷ்டங்கள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

ஒரு பஸ்ஸை இதற்கு வழங்கி உதவுமாறும் கடற்போக்குவரத்துக்கு படகு ஒன்றை வழங்க முன்வருமாறும் கேட்கப்பட்டது.

இது குறித்த மனு ஒன்றும் நெடுந்தீவு பிரதேச சபையால் தூதுவரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மரக்கறி ஏற்றிச் சென்ற வாகனம் குடைசாய்ந்தது

தென்மராட்சி, ஜூலை24

ஏ-9 வீதியில் அகலிப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் மிருசுவில் வைத்தியசாலைக்கு அருகில் மரக்கறி ஏற்றிச் சென்ற வாகனம் குடை சாய்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்றது.

வீதி அகலிப்புக்காக ஒரு வழிப்பாதையாக உள்ள இடத்தில் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் தலைகீழாகக் குடை சாய்ந்தது. வாகனத்தில் பயணித்தவர்கள் பாதிப்புக்கள் எதுவுமின்றி உயிர் தப்பித்தனர். (ம-9)

## நுளம்பு வலைகள் விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 24

வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு அண்மையில் சுகாதாரத் திணைக்களத்தால் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டன.

மழை காலங்களில் இந்தப் பிரிவுகளில் நீண்ட நாள்கள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு ஆளாகி வருவதைக் கருத்தில் கொண்டு இங்குள்ள 345 குடும்பங்களுக்கும் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம- 9 )

## கேபிள் தொலைபேசி இணைப்பை அராலிக்கு விஸ்தரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 24

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அராலிப் பகுதிக்கு கேபிள் தொலைபேசி இணைப்பை விஸ்தரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் தொழில்நுட்பக் குழு தலைவருமான த.நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆயிரத்து 400 குடும்பங்கள் இந்தப் பகுதிகளில் வசித்து வரும் நிலையில் இந்த மக்களின் தொலைபேசி சேவையை விஸ்தரித்து பயன்பாட்டை அதிகரிக்க உரியவர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் இருந்து அராலி பிரதேசத்துக்கான தொலைபேசி இணைப்பு வழங்கல் எனும் தலைப்பில் ரெலிக்கொம் பிராந்திய முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி. மேற்கு பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட பரந்த பிரதேசம். இதில் வட்டுக்கோட்டை சந்தியில் இருந்து யாழ்ப்பாணக் கல்லூரி வரை இணைப்பு வழங்கப்பட்டால் இந்தப் பகுதி மக்கள் நன்மையடைவர்.

தற்போது அராலிப் பிரதேசத்திலுள்ள அராலி மேற்கு, அராலி மத்தி, அராலி தெற்கு, அராலி வடக்கு, அராலி கிழக்கு ஆகிய 5 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த ஆயிரத்து 400 குடும்பங்கள் இந்த இணைப்பைப் பெறக் காத்திருக்கின்றன.

பிரதேச வளர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தொலைபேசிப் பாவனை, இன்ரநெற் பாவனை, மாணவர் கல்வி போன்றவற்றுக்கு இந்த கேபிள் மூலமான தொலைபேசி அவசியமானது.

எனவே இந்தப் பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகை யில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது. (ம-50)

## வீதியோரம் கட்டடப் பொருள்கள் அச்சுவேலி பயணிகள் சிரமத்தில்



அச்சுவேலி, ஜூலை 24

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியோடு இணைந்த பிரதான வீதியில் இரண்டு பக்கங்களிலும் வெள்ள வாய்க்கால் அமைப்பதற்கான கட்டுமானப் பொருள்கள் பறிக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் பஸ்கள் வீதியோரத்தில் வைத்தே பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. இந்த நிலையில் வீதி விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பதோடு பயணிகள் வீதியோர [illegible] இறங்கிவிழ வேண்டிய நிலைமையும் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து வடிகால் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் நீண்ட தொடராக வீதியோரமாக ஆழமான குழி காணப்படுகின்றது. அவற்றுள் தவறிவிழுந்தால் பலத்த காயத்துக்கு ஆளாகும் நிலைமை ஏற்படும் என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதி விஸ்தரிப்பு பணியின் நிமித்தம் ஆவரங்கால் சந்தியில் இருந்து வல்லைச் சந்திக்கு செல்லும் பிரதான வீதி முற்றாக போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு சகல வாகனங்களும் அச்சுவேலி பஸ்நிலைய வீதி வழியாகவே பயணத்தை மேற்கொள்வதற்கு வழிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் கனரக வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும்சென்றுவருவதால்இந்தப் பகுதியில் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பஸ் நிலையத்தை பஸ்கள் பயன்படுத்தாமல் வீதியோரத்தில் பயணிகளை இறக்கி ஏற்றுவதால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகப் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குக

## பாண்டியன் கோரிக்கை



தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


நீண்ட காலமாக தண்ணீர் பற்றாக்குறை பிரச்சினை இருந்து வருகிறது. இங்கு போதுமான மழை இல்லை. எனவே நதி நீர் பங்கீட்டின் மூலமாக தான் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் பெற வேண்டும். இதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மத்திய அரசு தமிழக மக்களுக்கு எதிராக செயற்படுகிறது. தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் நான்கரை லட்சம் தமிழர்கள் முகாம்களில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களை உடனடியாக முகாம்களில் இருந்து விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் பெண் மானபங்கம், கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பாலியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் அமைச்சர்கள், ஆன்மிகவாதிகளே ஈடுபடுகிறார்கள். இதைத் தடுக்க மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் எதையும் செய்யாமல் செயலற்ற அரசாக அது உள்ளது.- என்றார். (வ)

# யாருடன் கூட்டணி வைத்தாலும் புலிகள் ஆதரவில் மாற்றம் இல்லை

## வைகோ உறுதி



நாம் எந்தக் கூட்டணியில் இருந்தாலும் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இதுகுறித்து திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு மணல் கடத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இலவசங்கள் வழங்குவதால் மனிதனின் உழைப்பு வீணாகிறது. செப்ரெம்பர் 15 ஆம் திகதி கரூரில் ம.தி.மு.க. மாநாடு நடைபெறுகிறது. முல்லைப் பெரியாறு அணையை உடைக்க கேரளா சட்டமன்றத்தில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சகம் இதை அனுமதிக்கக் கூடாது. கேரளாவைச் சேர்ந்தவர்கள் மத்தியில் முக்கிய அங்கம் வகிப்பதால், கேரளா சொல்வதை மத்திய அரசு செய்து வருவதோடு, தமிழர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் மத்திய அரசு தொடர்ந்து கேடு செய்து வருகிறது.

வளைகுடா நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அரசு ஏற்று நடத்தும் டாஸ்மாக் மதுபானங்களால் பெரியவர்கள் முதல் பள்ளிச் சிறுவர்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாம் எந்தக் கூட்டணியில் இருந்தாலும் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம். இலங்கை கடற்படையினரால் இதுவரை 578 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் - என்றார்.

# சுதந்திர போராட்ட வீராங்கனை லக்ஷ்மி சேஹ்கல் காலமானார்



டில்லி, ஜூலை 24

சுதந்திரப் போராட்ட வீராங்கனை லக்ஷ்மி சேஹ்கல் தனது 97 ஆவது வயதில் நேற்றுக் காலை மாரடைப்பால் உயிரிழந்தார்.

உடல்நிலை பாதிக்கப்பட்ட லக்ஷ்மி சேஹ்கல் கடந்த வாரம் கான்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சையின் போது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படாமலேயே அவரது உயிர் நேற்றுப் பிரிந்தது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது, சுபாஷ் சந்திரபோஸின் இராணுவப் படையில் கப்டனாகப் பணியாற்றியவர் லக்ஷ்மி சேஹ்கல். மருத்துவம் படித்து, நாட்டின் சுதந்திரத்துக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் இவர்.

இவரை கௌரவிக்கும் வகையில் 1998ஆம் ஆண்டு இந்திய அரசு. இவருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.(வ)

# பிரணாப் பதவியேற்கும் தினத்தில் ஊழல் ஆதாரங்கள் வெளிவரும்

## ஹசாரே குழுவினர் அறிவிப்பு

டில்லி, ஜூலை 24

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜிக்கு எதிரான ஊழல் ஆதாரங்களை அவர் பதவியேற்கும் தினமான நாளை புதன்கிழமை வெளியிடப் போவதாக அன்னா ஹசாரே குழுவினர் அதிரடியாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஹசாரே குழு உறுப்பினரான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே ஓர் ஊழல்வாதி பிரதமர் இருக்கையில் அமர்ந்திருக்கையில் தற்போது ஜனாதிபதியும் ஊழல்வாதியாக வந்துள்ளார். பிரணாப் முகர்ஜிக்கு எதிரான ஊழல் ஆதாரங்களை நாளை புதன்கிழமை நாம் ஆரம்பிக்கவிருக்கும் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின் போது வெளியிடுவோம். இனிமேல் அரசை நம்புவதாக இல்லை. அரசின் உறுதிகளை இம்முறை ஏற்க மாட்டோம்.

எங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் எங்கள் உடல்களைத் தான் அந்த இடத்தில் இருந்து அகற்ற வேண்டும். தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை முடிக்க மாட்டோம் - என்றார்.


இதேவேளை, அன்னா குழுவினர் ஊழலுக்கு எதிராக நாளை புதன் கிழமை தொடக்கம் டில்லி யில் உள்ள ஜந்தர் மந்திரில் கால வரையறையற்ற உண்ணாவிரதம் இருக்கின்றனர். அதேநாளில் தான் பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அணையைப் பராமரிக்க தமிழக அரசுக்கு அனுமதி

முல்லைப் பெரியாறு அணையை தமிழக அரசு பராமரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்து தமிழக மற்றும் கேரள அரசுகள் தாக்கல் செய்த மனுக்கள் மீது நேற்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

இதில், முல்லைப்பெரியாறு அணையைப் பராமரிக்க தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேலும், முல்லைப் பெரியாறு அணையை ஆய்வு செய்த தமிழக அரசின் அறிக்கையை கேரள அரசுக்கு அளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையை ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (வ)



ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பிரணாப் முகர்ஜியை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

# உத்தரப் பிரதேசத்தில் இனக்கலவரம்

## ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு

லக்னோ, ஜூலை 24

உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள இரண்டு இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு இடையே கடுமையான இனக்கலவர மோதல் நடைபெற்றதில் நேற்றுமுன் தினம் இரவு முதல் அந்த மாநிலத் தின் நான்கு பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் பரேலியில் கன்வாரியா இன மக்களுக்கும் மற்றொரு தரப்புக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு மோதல் நடைபெற்றது.



இதனையடுத்து, கலவரம் முற்றி கடுமையான சண்டை மூண்டது. இந்தச் சம்பவத்தில் ஒருவரை யொருவர் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர பொலிஸார் தடியடி நடத்தினர். இந்தநிலையில், தற்போது கோத்வாலி, பராதாரி, பிரேம்நகர் மற்றும் குயிலா ஆகிய பொலிஸ் நிலையப் பகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ)

# பிரணாப்பின் வெற்றிக்கு எதிராக சங்மா வழக்கு




ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வாய்ப்புள்ளது என்று பிரணாப் முகர்ஜியை எதிர்த்துப் போட்டியிட்டு தோற்ற பி.ஏ.சங்மா தெரிவித்தார்.

இதுகுறித்து டில்லியில் செய்தி யாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தல் பாரபட்சமுடனும், அரசியல் சார்புடனும் நடைபெற்றுள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தனது வேட்பாளருக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்தில் சில மாநிலங்களின் அரசுகளுக்கு பொருளாதார சலுகைகள் மற்றும் நிதி உதவி வழங்கியது. தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டபின் உத்தரப் பிரதேச மாநில அரசுக்கு ரூ.57 ஆயிரம் கோடியும், பிகார் மாநில அரசுக்கு ரூ.27 ஆயிரம் கோடியும் வழங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முலாயம் சிங், மாயாவதி போன்றவர்கள் மிரட்டல் விடுக்கப்பட்டு, அடிபணிய வைக்கப்பட்டனர்.

தேர்தலில் இரகசியம் காக்கப்படவில்லை. மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் நடத்தை விதிமுறைகள் இருப்பது போல, ஜனாதிபதித்தேர்தல் மற்றும் துணைத் தலைவர் தேர்தலுக்கும் அதனைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறும். - என்றார்.(வ)

# நடிகர் அமிதாப் வீட்டில் திருட்டு



பொலிவூட் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் வீட்டில் திருடி விட்டு தப்ப முயன்ற திருடனை வீட்டு பணியாள்கள் மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் இவனை வீட்டு பணியாள்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவனிடம் நடத்திய விசாரணையில், தன் பெயர் கேவத் என்றும் மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவன் என்றும் தெரிவித்தான். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கி சீனாவில் 10 பேர் சாவு

## 30 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு

சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவு பெய்த கன மழை காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர். 30 ஆயிரம் பேர் பாதுகாப்பான பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அதிக வெள்ளப் பெருக்குக் காரணமாக, ஃபாங்ஷன், ஹுவாய்ரோ, மென்டொயுகொ, பிங்கு, மியுன், யான்யிங் பகுதியைச் சேர்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

நகர வெள்ளக் கட்டுப்பாட்டுத் துறையினர் இந்தத் தகவலைக் கூறியதாக அரசின் செய்தி நிறுவனமான ஜின்ஹுவா தெரிவித்துள்ளது.



ஷான்ஜி மாகாணத்தின் வடக்குப் பகுதியில் ட்ரக் மூலம் பாலத்தைக் கடக்க முயன்ற 4 பேர் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டு இறந்தனர்.

ஷான்ஜி மாகாணத்தின் வடக்குப் பகுதியில் ட்ரக் மூலம் பாலத்தைக் கடக்க முயன்ற 4 பேர் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டு இறந்தனர். மேலும் ஒருவரைக் காணவில்லை.

சிச்சுவான் மாகாணத்தின் தென் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 6 பேர் உயிரிழந்தனர்.

ஃபாங்ஷன் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை வரை 460 மில்லி மீற்றர் மழை பதிவானது. வெள்ளப் பெருக்கால் 12 நகரங்களில் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. 6 நகரங்களில் தொலைத்தொடர்பு, இணைய சேவைகள் முற்றிலும் துண்டிக் கப்பட்டுள்ளன. (வ)

# நோர்வே படுகொலை நடந்து ஓராண்டு காலம் நிறைவு



நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த ஆண்டு நடை பெற்ற குண்டுவீச்சுச் சம்பவத்தில் 77 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தின் ஓராண்டு அஞ்சலி நிறைவு நேற்று முன்தினம் நினைவு கூரப்பட்டது.

நோர்வே நாட்டில் அண்டர்ஸ் பேரிங் ப்ரீவிக்(வயது 32) என்பவர் நடத்திய தாக்குதலில் 77 பேர் கொல்லப்பட்டனர். இந்தச்சம்பவம் கடந்தாண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பதின்ம வயதினராவர்.

இதன் ஓராண்டு நிறைவை நினைவு கூரும் விதமாக தேவாலயங்களில் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டன.

நோர்வேயின் ஹெரோல்ட் மன்னரும், பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பேர்க்கும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர், நோர்வே மக்களின் மீது கடுமையான துயரங்கள் கட்ட விழ்த்துவிடப்பட்ட போதிலும், நாட்டின் கலாசாரத்தைச் சுற்றி மக்கள் இணைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு அருகே உத்தேயா எனும் தீவில் நடந்த கோடை முகாமின் போது பலர் கொல்லப்பட்டனர்.


இன்னும் சிலர் துப்பாக்கித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

## குண்டுவெடிப்பில் நேட்டோ படையினர் மூவர் சாவு

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற இருவேறு சம்பவங்களில் 3 நேட்டோ படையினர் கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானில் அமெரிக்க- நேட்டோ கூட்டுப் படையினர் 1.30 லட்சம் பேர் முகாமிட்டுள்ளனர்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில், வீதியோர குண்டு வெடிப்பில் 2 வீரர்களும், மற்றொரு சம்பவத்தில் தீவிரவாதியால் படையினர் ஒருவரும் கொல்லப்பட்டனர் என்றும், சர்வதேச பாதுகாப்பு உதவிப் படை தெரிவித்துள்ளது. இருப்பினும் கொல்லப்பட்ட வீரர்களின் பெயர்கள், எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.



கிரீஸ் தலைநகர் எதென்ஸ் சென்றுள்ள அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன், அந்தநாட்டுப் பிரதமர் ஆன்டோனிஸ் சாமராசைச் சந்தித்துப் பேசினார்.

# பிரிவினைப்புப் போர் திபெத்தில் தீவிரமாகும்

## மிரட்டுகிறது சீனா

திபெத்தில் பிரிவினைக்கு எதிரான போர் தீவிரப்படுத்தப்படும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் லீ ஜாங்ஜங் மிரட்டல் விடுத்துள்ளார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது திபெத். அங்குள்ள மக்கள், தங்களை சீன அரசு அடக்கி ஆள்வதாகவும், தங்களது கலாசாரம், பண்பாட்டை அழிப்பதாகவும் கூறி, கடந்த பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். இந்த நிலையில், சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் லீ ஜாங்ஜங், திபெத்தின் லாசா மற்றும் நியின்சி பகுதிக்குச் சென்றார்.

அப்போது, அவர் கூறுகையில், திபெத்தில் வாழ்வியலுக்குத் தேவையான சமூக இணக்கம், இன ஒற்றுமை மற்றும் நிலைத்து நிற்கும் தன்மைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முக்கியத்துவம் வழங் கப்படுகிறது. பிரிவினைக்கு எதிராக தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.



இது திபெத் விடுதலைக்காக போராடி வருபவர்களுக்கு சீனா விடுத்துள்ள மறைமுக மிரட்டலாகவே கருதப்படுகிறது. (வ)

# குவியும் சிரிய அகதிகளால் ஈராக் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## அந்தநாட்டு அரசு தெரிவிப்பு



சிரியாவில் உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஈராக்குக்கு அகதிகளாக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஈராக் அரசு தெரிவித்துள்ளது.

இதுவரையிலும் ஈராக்கின் குர்திஷ் பிராந்தியத்துக்கு மொத்தம் 9 ஆயிரம் பேர் அகதிகளாக வந்துள்ளனர்.

இதுகுறித்து ஈராக்கின் குர்திஷ் பிராந்திய குடியேற்றத் துறை அதிகாரிகள் கூறுகையில், சிரியாவிலிருந்து எல்லை தாண்டி அகதிகள் தொடர்ச்சியாக வருகை தருவதால், அவர்களுக்கு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். அகதிகளைப் பராமரிப்பது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சர்வதேச அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் தெரிவித்தனர்.

இந்தநிலையில் அதிகரித்து வரும் சிரிய அகதிகளைப் பராமரிப்பதில் சிக்கல் இருப்பதாகவும், இது ஈராக்கின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் என்றும் ஈராக் மத்திய அரசு தெரிவித்துள்ளது. (வ)

## கடலில் வீழ்ந்தது அமெ. போர் விமானம்

அமெரிக்காவுக்குச் சொந்தமான போர் விமானம் ஒன்று ஜப்பான் நாட்டின் அருகே கடலில் விழுந்தது. அமெரிக்காவின் அமோரி விமானப் படைத் தளத்திலிருந்து எப்-16 ரக போர் விமானம் புறப்பட்டுச் சென்றது. இந்த விமானம் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணி அளவில் ஜப்பான் நாட்டின் அருகே உள்ள பசுபிக் கடலில் விழுந்தது. இந்தப் போர் விமானத்தை ஒரே ஒரு விமானி தான் ஓட்டிச் சென்றார். அவர் கதி என்ன என்று தெரியவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து ஜப்பான் அதிகாரிகள் கூறுகையில், விபத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்து வருகிறோம், அதேவேளை விமானியை மீட்கும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தனர்.

# ஜேர்மனி இராணுவ விழா வேறு இடத்துக்கு மாற்றம்

ஜேர்மனியில் ஹிட்லரின் அழிவுக்கு வழி வகுத்த இடத்தில் நடைபெறவிருந்த இராணுவ விழா வேறு இடத்தில் நடைபெற்றுள்ளது.

ஜேர்மனியில் 1944 ஆம் ஆண்டில் ஹிட்லரைக் கொலை செய்யத் திட்டமிட்ட இடத்தில்தான் இதுவரை புதிய ஜேர்மனி இராணுவத்தினர் பதவியேற்றனர்.

இந்த நிகழ்ச்சி ரிச்ஸ்டாக் நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்பு உள்ள சதுக்கத்தில் கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்று வந்தது.

ஆனால் இந்த வருடம் பெண்ட்லர் பிளாக் கட்டடத்துக்கு வெளியே கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த இடமாற்றத்தை ஜேர்மனியின் இராணுவத்தினர் கழகம் வரவேற்கவில்லை.



இதுகுறித்து இராணுவத்தினர் கழகத்தின் துணைத் தலைவர் உல்ஃப்கேங் ஷெல்லஸ்ஸ் தெரிவித்ததாவது:-

ரிச்ஸ்டாக் முன்பு உள்ள சதுக்கம், ஜேர்மனி மக்களையும் மக்களாட்சியையும் பிரதிபலிக்கின்றது. எனவே இராணுவத்தினர் பதவிப் பிரமாணம் எடுக்க இதுவே சிறந்த இடமாக அமையும் என்று தெரிவித்தார்.

1999 முதல் ரிச்ஸ்டாக்கில் நடைபெற்று வரும் இந்த நிகழ்ச்சி, 1944 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி கிளாஸ் ஷெங்க் கிராஃப் வான் ஸ்டாஃபென்பெர்க் என்பவர் தலைமையில் ஹிட்லரைக் கொல்ல முயற்சித்த நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையிலும் அமைகிறது.

இதன் மூலம் ஜேர்மனியின் இளம்வீரர்களுக்கு வீரத்தையும் துணிச்சலையும் அளிக்கின்றது என்றார்.

கட்டாய இராணுவப் பயிற்சி முறை ஒழிக்கப் பட்டு ஓராண்டு கடந்த பின்னர் ஜேர்மனி இளைஞர்கள் 400 பேர் ஆர்வமிகுதியால் இராணுவத்தில் இணைய விருப்பப்பட்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இதுவரை 19 ஆயிரம் பேர் சாவு

## மனித உரிமைகள் அமைப்பு தெரிவிப்பு

சிரியாவில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நடந்து வரும் உள்நாட்டுப் போரில், இதுவரை 19 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக்கோரி, போராட்டக்காரர்கள் கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராடி வருகின்றனர்.

போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், இதுவரை 19,106 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பின் பார்வையாளர் அப்துல் ரஹ்மான் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அப்துல் ரஹ்மான் குறிப்பிடுகையில்,

சிரியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியில், 13 ஆயிரத்து 296 அப்பாவி மக்களும், 4,861 இராணுவத்தினரும், 949 போராட்டக்காரர்களும் உயிரிழந்துள்ளனர்.

சிறையில் அடைக்கப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களைப் பற்றி இன்னும் தகவல் இல்லை என்றார்.



இந்தநிலையில் சிரியத் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், இராணுவத் துக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடந்த சில தினங்களாக கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது.

டமாஸ்கஸ் நகரின் முக்கிய பகுதிகளில், தாங்கிகளும், ஏவுகணைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. கிளர்ச்சியாளர்கள் மீது ஹெலிகொப்டர் மூலம், இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இராணுவத்துக்கு எதிராக எரிமலை என்ற பெயரில் போராட்டத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும், போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலைமை மோசமாகி வருவதால், சிரியாவுக்கு ஆயுத விநியோகம் செய்யும் ரஷ்யாவுடனும், சீனாவுடனும் ஐ.நா. முன்னாள் பொதுச் செயலர் கொபி அனான் பேச்சு நடத்தினார்.

போராட்டக்காரர்களைக் கொன்று குவிக்கும் சிரிய அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இந்தத் தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் ஏற்கவில்லை. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**போராட்டக் காரர்களைக் கொன்று குவிக்கும் சிரிய அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது.**

## செய்திக் குழுமத்திலிருந்து விலக ரூபர்ட் முர்டோக் திடீர் முடிவு



பிரிட்டனில் வெளிவரும் பல்வேறு நாளிதழ்களின் குழுமங்களின் தலைவர் ரூபர்ட் முர்டோக் அந்தப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். பிரிட்டனில் முன்னணிச் செய்தி நிறுவனமான நியூஸ் கார்ப்ரேசன் இன்டர்நாசனல் நிறுவனத்தின் தலைவர் ரூபர்ட் முர்டோக்(வயது 81) ஆவார்.

இவர் தனது நிறுவனத்துக்குச் சொந்தமான அனைத்து செய்தித் தாள்கள் வர்த்தகத்திலிருந்து விலக முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளி யாகி உள்ளது.

இதுதொடர்பாக நியூஸ் கோர்ப்ரேசன் இன்டர் நாசனல் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் டெய்சிடன்லப் கூறுகையில், தற்போது இந்தநிறுவனத்தின் கீழ் திரைம்ஸ், சன்டே ரைம்ஸ், வால்ஸ்ட் ரீட் ஜர்னல் உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகள் உள்ளன. இவற்றின் தலைவரான ரூபர்ட் முர்டோக்(வயது 81) இவற்றின் வர்த்தகம் தொடர்பான அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலக முடிவு செய்துள்ளார். இந்த அறிவிப்பு கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி வெளியிடப் பட்டுள்ளது என்று தெரிவித் தார். (வ)

## பொப் பாடகர் ஜக்சனின் தாயார் மாயம்



மறைந்த பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் தாயார் காணமற் போயுள்ளார். மறைந்த பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் தாயார் காதரீன் (வயது 82). இவர் மைக்கேல் ஜாக்சனின் குழந்தைகளுக்குப் பாதுகாவலராகவும் உள்ளார். அவர்களுடன் அரிசோனாவில் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக அவரைக் காணவில்லை. திடீரென மாயமாகிவிட்டார். எங்கு சென்றார் என்று தெரியவில்லை. இந்தத் தகவலை மைக்கேல் ஜாக்சனின் மகள் பாரிஸ் ஜாக்சன் உறுதி செய்துள்ளார்.

ஆனால் இதைக் காதரீனின் மகன் ஜெர்மெய்ன் ஜாக்சன் மறுத்துள்ளார். தனது தாயாருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதாகவும், அதற்காக அரி சோனாவில் ஓய்வு எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். குடும்பப் பிரச்சினை காரணமாக அவர் வீட்டை விட்டு வெளியேறியதாகத் தெரிகிறது.

## பிரேஸில் நூற்றுக்கணக்கில் பென்குயின்கள் உயிரிழப்பு

பிரேஸில் கடற்கரையில் நூற்றுக்கணக்கான பென்குயின்கள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளன. இந்தச்சம்பவம் கடல் வாழ் ஆர்வலர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடல் நீர் மாசு பட்டதே இந்த இறப்பிற்கு காரணம் என்று அந்தப் பகுதியில்தகவல்வெளியாகியுள்ளது. அதே சமயம் கடலில் உணவு எனநினைத்து பிளாஸ்ரிக் பொருள்களை பென்குயின்கள் உட்கொண்டதே இவற்றின்இறப்புக்கு முக்கிய காரணம் என உயிரியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.


## காணி விற்பனை

**வவுனியா உக்குளாங்குளம் 20 பேர்ச் பரப்பளவைக் கொண்ட காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.**

**தொடர்புகளுக்கு : 077 6116565**

(18696)(6-7-8)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A " தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(20676)(6-7-8)


## கண்ணீர் அஞ்சலி

மனித நேயமுள்ளவரும், சமூக சேவை ஆர்வலரும்

### லயன் குட்டிப்பிள்ளை கிட்ணர் *(சமாதான நீதிவான்)*

முன்னாள் உதவி அரச அதிபர்- கோப்பாய்



முன்னாள் கோப்பாய் உதவி அரச அதிபரும், கோப்பாய் லயன் கழகத் தலைவரும், நல்லூர் லயன் கழக ஸ்தாபக அனுசரணையாளரும், சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் ஆரம்பகால தலைவரும், செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவ சங்க நிர்வாகசபை உறுப்பினரும், செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையின் ஆலோசகருமாகிய லயன் குட்டிப்பிள்ளை கிட்ணர் ஜே.பி

அவர்கள் (20.07.2012) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரத்தில் காலமானார். அவரின் மறைவையொட்டி துன்பப்படும் பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மேற்படி சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

இவர் குணத்தால், நடையால், பக்தியால், மனிதாபிமானத்தால் உதவி செய்வதில் மேம்பட்ட நல்ல பிறவியாவார். இவரது ஆத்மா நிட்சயமாக பிறவியில்லாச் சாம்ராட்சியத்தில் இடம் பெற பிரார்த்திக்கின்றோம்.

கலாநிதி லயன் வல்லிபுரம் [illegible] ஜே.பி
குடும்பத்தினர், நல்லூர்.

(20686)(6-7-8)

## மரண அறிவித்தல்

### முருகேசு நாகலிங்கம் நடராசா (நயினாதீவு)

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், **RDA**), முன்னாள் பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், முன்னாள் தலைவர், செம்மணத்தம்புலம், ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், நிர்வாக உத்தியோகத்தர் சைவ பரிபாலனசபை யாழ்ப்பாணம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மு.நா.நடராசா கடந்த (20.07.2012) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ் சென்றவர்களான கதிரித்தம்பி- யோகம்மா தம்பதியரின் மருமகனும், குணபூஷணியின் அன்புக் கணவரும், சுரநுதா (ஆசிரியை, கல்கமுவ), சோபிதா (கொழும்பு), மயூரன் (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), நர்த்தனன் (ஆசிரிய மாணவன் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), பிரணவன் (விஞ்ஞான பீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலேஸ்வரன் (ஹொங்கொங்), நந்தகுமார் (வர்த்தகர்,கொழும்பு), சகிலா (ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), வேணுயா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இந்துமதி (முன்னாள் பிரதேச செயலர், கிளிநொச்சி) மற்றும் திலகவதி (கொழும்பு), சிவசக்தி (கனடா) ஆகியோரின் சகோதரனும், கனகம்மா, சரஸ்வதி, சவுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), **Dr.** பெரியநாயகி (நீர்கொழும்பு), ஆறுமுகம் (ஓய்வு பெற்ற செயலாற்று உதவியாளர் ( **DOA**) இ.போ.ச யாழ். சாலை, கோண்டாவில்), கதிரேசபிள்ளை (உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்), விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இரத்தினசபாவதி மற்றும் சொர்ணலிங்கம் (வர்த்தகர்), மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), வரதலெட்சுமி (அதிபர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -நாகம்மா தம்பதியரின் பெறாமகனும், அயிலவன், கிருஷிகா, சதுர்சன், ரதுர்த்திகா, அபிவர்ஷினி, கஜவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் நயினாதீவு சல்லிப்பரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், நயினாதீவு.

தகவல் -
*ந.மயூரன் (மகன்), க.ஆறுமுகம் (மைத்துனர்)*
*க. நந்தகுமார் (மருமகன்)*

(20867)(14-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(6)


ஆகவே ஒரு காரியத்தை முடியாது என்று ஒதுக்கி விடுவதை விட, முடிக்கும் வழி என்ன என்று ஆராய்வதே புத்திசாலித் தனமாக இருக்கும். எடுத்த எடுப்பிலேயே முடியாது என்று சொல்லி விடுகிறவர்கள் எதையும் சாதிக்கின்ற மன உறுதி இல்லாதவர்களாகவே கருதப்படுவார்கள். சோதனைகளைத் தாங்கும் மன உறுதி இல்லாதவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

சோதனைகளைப் பொறுமையுடன் சந்தித்து சாதனைகள் படைத்த பெருமக்களின் வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு பாடம்.

**சோதனைகளை வென்ற சிலர்**

சோதனைகளைச் சரியானபடி ஏற்றுக் கொண்டால் வாழ்க்கையில் கஷ்டம் இருக்காது. சோதனைகள் நமக்கு வைக்கப்படும் பரீட்சைகள். இந்தப் பரீட்சைகளில் நாம் தேறினால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். பரீட்சைக்குப் போகாமலோ அல்லது, பரீட்சையைப் புறக்கணித்தோ தேறியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

வாழ்க்கைப் பரீட்சைகளை நீங்கள் சந்திக்கப் பயந்தால் வாழ்க்கையில் தேறி முன்னேறுவது சாத்தியமில்லாமல் போய்விடும்.



ஆகவே வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளை உங்களுக்கு வைக்கப்பட்ட பரீட்சைகளாக எண்ணி, அதில் வெற்றி பெற நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

பெரிய சாதனைகளுக்கு மட்டுமல்ல, சிறிய காரியங்களில் வெற்றி பெறக்கூட முழுமையான முயற்சி தேவைப்படுகிறது. ஆகவே வாழ்க்கையில் எந்த நிலையில் நீங்கள் இருந்தாலும், எதிர்படுகின்ற கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் மனப்பயிற்சியைப் பெறுதல் அவசியம். சிறிய கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள முதலில் பழகிக் கொண்டால் பெரிய கஷ்டங்கள் சுமையாக இருக்காது.

பிரபல படத்தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் தன்னுடைய முயற்சியால் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்கிற எண்ணத்துடன் சிறு வயதிலேயே வீட்டை விட்டுக் கிளம்பி விட்டார்.

ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த அவர் வாழ்க்கையைத் தேடி பம்பாய்க்குப் போனார். உடனடியாக அங்கு அவருக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. தையற்கடையில் சிறிது காலம் வேலை பார்த்தார். பின்னர் பம்பாய் ஸ்ரூடியோ ஒன்றில் சிப்பந்தியாக வேலை பார்த்தார்.

அவருடைய கடினமான உழைப்பு பலரையும் கவர்ந்தது. ஸ்ரூடியோவில் வேலை பார்த்த போது படத் தொழிலில் பல நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார். இதனால் விரைவிலேயே உதவி இயக்குநராக பணியாற்றுகின்ற வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. முடிவில் அவரே திரைப்பட இயக்குநர் ஆனார்.

பிறகு சொந்தமாக படங்கள் தயாரித்தார். ஸ்ரூடியோக்களும் கட்டினார். சென்னையில் உள்ள பிரசாத் ஸ்ரூடியோ மட்டுமல்ல, பிரசாத் கலர் லேபரட் டரியும் அவருக்குச் சொந்தமானவை. இவற்றில் பல நவீன வசதிகளும் இருக்கின்றன.

இவற்றைப் படிக்கும் போது எல்.வி.பிரசாத் மள மள வென்று வாய்ப்புகள் கிடைத்து, வாழ்க்கையில் முன்னேறி விட்டதாக கருத வேண்டாம். ஒவ்வொரு கட்டத்திலும் ஏராளமான சோதனைகளை அவர் சந்தித்து இருக்கிறார். எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தளராமல் உறுதியுடன் போராடியிருக்கிறார்.

தோல்விகளை நிறையச் சந்தித்து இருக்கிறார். ஆனால் தோல்விகளைக் கண்டு அவர் ஒரு போதும் துவண்டதில்லை. அவற்றைச் சவால்களாக ஏற்று, ஒவ்வொரு கட்டத்திலும் போராடி வெற்றி பெற்றதாலேயே உன்னதமான நிலைக்கு அவரால் உயர முடிந்தது.

இத்தனைக்கும் பிரசாத் ஏழைக் குடும்பத்தில் பிறக்கவில்லை. ஓரளவுக்கு வசதி உள்ள விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தகப்பனாரோடு சிறு வயதிலேயே கருத்துவேறுபாடு கொண்டு, தன் சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும் என்கிற பிடிவாத உணர்ச்சியுடன் வீட்டை விட்டு வெளியேறினார். அதே உறுதியுடன் உழைத்து வாழ்க்கையில் வெற்றியும் கண்டார்.

பிரசாத் வாழ்க்கையைப் பார்க்கும்போது ஒரு விஷயம் தெளிவாகிறது. வாழ்க்கைச் சோதனைகளை விரும்பி ஏற்றுக் கொள்ள அவர் தயாராக இருந்தார். அதனால் தன்னுடைய சுய முயற்சியால் வெற்றி பெறுவது அவருக்குச் சாத்தியமாயிற்று.

பிரபல பத்திரிகையாளராகவும், ஜெமினி ஸ்ரூடியோவின் அதிபராகவும் விளங்கிய எஸ். எஸ். வாசனின் வாழ்க்கை சோதனைகள் பலவற்றைச் சந்தித்து வெற்றி பெற்ற வாழ்க்கைதான். அவர் வறுமையான குடும்பத்தில் பிறந்தவர். வாழ்க்கையில் சாதனைகள் புரிய வேண்டும் என்கிற எண்ணத்துடனேயே சென்னைக்கு வந்தவர். பல சோதனைகளையும் சந்தித்து வெற்றி கண்டு, பத்திரிகைத் துறையிலும், திரையுலகத்துறையிலும் அரிய சாதனைகள் நிகழ்த்திக் காட்டிய அற்புதமான மனிதர்.

கவிஞர் கண்ணதாசன் இலக்கியத் துறையிலும், திரையுலகிலும், பல அற்புதங்களை நிகழ்த்தியவர். அவர் சலூன் கடையில் வேலை பார்த்திருக்கிறார். பத்திரிகை அலுவலகங்களில் எடுபிடியாகப் பணியாற்றியிருக்கிறார். அவருடைய திறமைக்குப் பல சோதனைகள் ஏற்பட்டதுண்டு.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# மக்களுக்கு உதவிகளை வழங்கி வரும் அமைப்புகள் அபிவிருத்தியை இலக்காக கொண்டு இயங்க வேண்டும்

## அபிவிருத்திக்கான உதவி ஊக்க நிர்வாக இயக்குநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளை வழங்கி வரும் அமைப்புகள் தமது நிறுவன அபிவிருத்திக்கு மட்டுமல்லாது மக்களின் அபிவிருத்தியை இலக்காக வைத்து சேவை வழங்க வேண்டும்.

இதற்கமைவாக சமூக அமைப்புகள் வாழ்வாதார மேம்பாட்டுக்கான பயனாளிகளை தகுந்த முறையில் தெரிவு செய்வதுடன் அவை மக்களுக்கு சாதகமாக உள்ளனவா? என்பது தொடர்பாகவும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையத்தின் நிர்வாக இயக்குநர் திஸ்ஸ விஜேதுங்க தெரிவித்தார்.

மூளாயிலுள்ள ஐ.என்.எஸ். நிறுவனத்துக்கு அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம் கடந்த 16 ஆம் திகதி பொது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நிதி உதவியை கையளித்தது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியை இலக்காக வைத்து பல்வேறு சமூக மட்ட அமைப்புகள் வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால் இந்த உதவிகள் தகுந்த பயனாளிகள் பலரைச் சென்றடைவது இல்லை. இதனால் வாழ்வாதார மேம்பாட்டை உயர்த்துவதற்கு பல வறிய குடும்பங்கள் இனங்காணப்படாமல் உள்ளன.

**வாழ்வாதார உதவிகளைப் பெற்றவர்கள் அதன் மூலம் நன்மை அடைகிறார்களா என்பதை அவதானித்து அவர்களை மேலும் ஊக்கப்படுத்தி தாமாகவே முன்னேற்றம் பெற வழிகாட்ட வேண்டும்.**

எனவே வறிய குடும்பங்களை இனங்காணும் முயற்சியை சமூக அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் பயனாளிகளைத் தெரிவு செய்து உதவிகளை வழங்குவது பயனுடையதாக இருக்கும்.

அதனடிப்படையில் மூளாய் ஐ.என்.எஸ். நிறுவனம் தனது செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும். சமூக மட்ட அமைப்புகள் வழங்கும் நிதியுதவிகள் அதிகமாக வெளிநாடுகளில் இருந்தே பெறப்படுகின்றன. இவை மக்களைச் சென்றடையாவிட்டால் எதிர்காலத்தில் வெளிநாடுகளும் சமூக மட்ட அமைப்புகளும் நிதி உதவிகளை வழங்கப் பின்னடிக்கும்.

எனவே செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது உரிய ஆளணிகளுடன் நேரடியாகச் சென்று பயனாளிகளை இனங்கண்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கி வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டும்.

வாழ்வாதார உதவிகளைப் பெற்றவர்கள் அதன் மூலம் .நன்மை அடைகிறார்களா என்பதை அவதானித்து அவர்களை மேலும் ஊக்கப்படுத்தி தாமாகவே முன்னேற்றம் பெற வழிகாட்ட வேண்டும்.

வாழ்வாதார உதவிகளைப் பெற்ற பலர் தகுந்த ஆலோசனைகள் இல்லாது ஏனோ தானோ எனச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் தான் அவை வெற்றியளிப்பதில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சமூக மட்ட அமைப்புகள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (எ-14)

# தேசிய கடற்றொழில் சம்மேளன உபதலைவராக தமிழர் தெரிவு

வலி. தென்மேற்கு, ஜூலை 24

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்தின் உப தலைவர்களில் ஒருவராக யாழ். மாவட்ட கடற்றொழில் சம்மேளனத் தலைவர் என். பொன்னம்பலம் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த வாரம் தேசிய நீர் வள உயிரின செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சர் ராஜித.சேனாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் மூன்று உப தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் சம்மேளனத் தலைவர் என். பொன்னம்பலம் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பதினேழு பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மகா சம்மேளனத்தில் தமிழர் ஒருவர் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# மகாஜனக் கல்லூரி மாணவிகள் சாதனை





தேசிய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகளான செல்வி விதுஷா வாசுதேவன் கவிதைப் போட்டி பிரிவு IV இல் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும், செல்வி தீபிகா லிங்கபாலன் வாசிப்புப் போட்டி பிரிவு I இல் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (எ)

# நாடகப் போட்டி முடிவுகள்

யாழ்.கல்வி வலய மட்டத்தில் ஆங்கில தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நாடகப்போட்டியின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

**தரம்-10**

முதலாம் இடம்- குபனேந்திர தாஸ் குகநாத் (யாழ். இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்- அபிராமி ரவிதரன் (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை),மூன்றாம் இடம்- அபிராமி நற்குணம் (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை).

**தரம்-11**

முதலாம் இடம்- ரேவதி ரகுராஜன் (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - சிவமாதங்கி செல்வச்சந்திரன் (ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), மூன்றாம் இடம்-எ.ஆர்.ஆன் ஆனிசா(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்).

**தரம்-12**

முதலாம் இடம்- ஆத்மிகா முருகையா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் -சகாயநாதன் பெஞ்சமின் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), மூன்றாம் இடம்- [illegible] ததாசிவம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**தரம்-13**

முதலாம் இடம்- மதுரா கணேசநாதன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),இரண்டாம் இடம் - இரட்ணசிங்கம் பிரணவன் (யாழ். இந்துக் கல்லூரி),மூன்றாம் இடம்- முத்துக்குமரன் விதுன் (யாழ். இந்துக் கல்லூரி).

**சொல்வதெழுதல்**

**தரம்-6**

முதலாம் இடம்- நிவேரா நடேசன் (சுண்டுக்குளி மகளிர் பாடசாலை), இரண்டாம் இடம் - பற்றிக் நிலக்ஸன் பிரசாந் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), மூன்றாம் இடம்- லோகேஸ்வரன் டிலோசான் (யாழ். இந்துக் கல்லூரி)

**தரம்-7**

முதலாம் இடம்- கோபிகா சந்திரராஜ் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம்- ரவிசங்கர் பானுஜன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்- அமிர்தலிங்கம் கஜானன் (யாழ். இந்துக் கல்லூரி)

**தரம்-8**

முதலாம் இடம்- சௌமிகா புருசோத்மன் (சுண்டுக்குளி மகளிர் பாடசாலை), இரண்டாம் இடம் - தவபாலசுந்தரம் நீலலோகன் (யாழ். இந்துக்கல்லூரி), மூன்றாம் இடம்- சுரேஸ்குமார் துவாரகி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தரம்-9**

முதலாம் இடம்- கேசினி யோகேஸ்வரன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - ரூபன் சதுர்சன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்- எ.மேரி ஜென்சியா (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்).

**தரம்-10**

முதலாம் இடம்- மணிவண்ணன் மதுசன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), இரண்டாம் இடம் - நித்தியானந்தன் நிகிதன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்- சீவரத்தினம் கிருசிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தரம்-11**

முதலாம் இடம்- பிரியந்தினி சிவசுப்பிரமணியம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம்- பாவனா சிவயோகன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாம் இடம், கே.பிரணவன் (யாழ். இந்துக் கல்லூரி)

(தொடரும்) (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன்...

பல்கலைக்கழக அனுமதிக்கான புதிய இசட் புள்ளிகள் வெளியாகி உள்ள நிலையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் மீண்டும் குழப்பங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன.

பழைய இசட் புள்ளியின் அடிப்படையில் உயர்கல்வியில் சிறப்பான தெரிவுகளைப் பெற்றிருந்த பலர் - உதாரணத்துக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற துறைகள் - தற்போது பல்கலைக்கழக அனுமதியாவது கிடைக்குமா என்று ஏங்கும் அளவுக்குச் சிக்கல்கள் வளர்ந்து விட்டன என்று கூறப்படுகின்றது.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் கீழ் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு ஒரே கணிப்பீட்டில் இசட் புள்ளிகள் கணிக்கப்பட்டதனாலேயே இந்தக் குழப்பம் முதலில் ஆரம்பமானது. இரண்டுக்கும் தனித்தனியான இசட் புள்ளிகளைக் கணிக்காமல் ஒரேயடியாகக் கணித்தார்கள். இதனால் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. என்றுமில்லாதவாறு பரீட்சை எழுதியவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தமது பெறுபேற்று மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து மாணவர்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான இசட் புள்ளிகளைத் தனித்தனியே காணும்படியும் மீண்டும் கணிப்பீட்டை மேற்கொள்ளும்படியும் உத்தரவிட்டது.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ள புதிய இசட் புள்ளிகளே புதிய குழப்பங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன. மாணவர்களும் பெற்றோர்களில் பலரும் நேற்று செய்வதறியாது பதறித் திரிந்ததைக் காணமுடிந்தது. மருத்துவம், பொறியியல் அல்லது வேறு உயர்துறைக்குத் தாம் தெரிவு செய்யப்பட்டுவிட்டோம் என்று இருந்த பலரின் தலையில் புதிய இசட் புள்ளிகள் இடியாய் இறங்கி உள்ளன.

தாங்கள் பல்கலைக்கழகத்துக்கு ஏற்கனவே அனுமதி பெற்றுவிட்டோம் தானே என்ற தைரியத்தில் அடுத்த தேர்வை எதிர்கொள்வதற்கு வேண்டிய தேவை ஏதுமின்றி இருந்த அவர்களுக்கு இன்னும் சில நாள்களுக்குள் பரீட்சைக்கு விண்ணப்பித்து மீண்டும் அவசர அவசரமாகப் படித்துப் பரீட்சை எழுத வேண்டும் என்று சொன்னால் மனசு பதறிப் பதைபதைக்காமல் வேறு என்ன செய்யும்?

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போன கதையாக, இசட் புள்ளி குறைந்தால் என்ன செய்வது விரைவாக விண்ணப்பித்து மீண்டும் பரீட்சை எழுதுங்கள் என்று அதிகாரிகள் இலகுவாகப் பதில் சொல்கிறார்கள். அவர்கள்தான் கொள்கை முடிவுகளைத் தவறாக எடுத்தார்கள். அவர்கள்தான் முதலில் இசட் புள்ளிகளைத் தவறாகக் கணித்தார்கள். அவர்கள்தான் இப்போது புதிய புள்ளிகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், தண்டனை மட்டும் என்னவோ மாணவர்களுக்கே!


அதிகாரிப் பூனைகளின் விளையாட்டில் மாணவர்கள்தான் மீண்டும் மீண்டும் சுண்டெலிகளாகி சீவன் வலிக்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது? அதிகாரிகள் தமது தவறுகளுக்குப் பொறுப்பேற்று, மாணவர்களின் பிரச்சினைக்கு நல்ல வழிகண்டு பிரச்சினைக்கு உள்ளான அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பான தீர்வை உடனடியாகக் காணவேண்டும். கல்வி அமைச்சர் இதில் அவசரமாகத் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

இந்த விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவின் அக்கறை பாராட்டத்தக்கது.

# நந்தி விலகிவிட்டது

## நந்தனுக்கு தரிசனம் வாய்க்குமா?

*தமிழகத்திலிருந்து*
*கோலாகல ஸ்ரீநிவாஸ்*
(கட்டுரையாளர், 'சுடர் ஒளி' வாரப் பத்திரிகையின் ஆரம்பகாலத்தில் ஆசிரியர்களில் ஒருவராகப் பணியாற்றியவர்)





குடியரசுத் தலைவர் தேர்தலைப் பொறுத்தவரை காங்கிரஸுக்கு என்று ஒரு பண்பாடும் உண்டு. அது, 'ரப்பர் ஸ்டாம்ப்' தலைவர்களைக் குடியரசுத் தலைவர் ஆக்குவது என்பதுதான். ஆனால், அதையும் மீறி 2 முறை 'எதிர்ப்புக் குரல்' மிக்க தலைவர்களைக் காங்கிரஸ் நிறுத்தியிருக்கிறது. 1969இல் நீலம் சஞ்சீவ ரெட்டி நிறுத்தப்பட்டார் என்றால், இப்போது பிரணாப் முகர்ஜியும் தனக்கென சில கருத்துகளை உடைய குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளர் என்று சொல்லலாம்.

1969இல் ஜாகிர் உசேன் மறைவினைத் தொடர்ந்து, நீலம் சஞ்சீவ ரெட்டியை வேட்பாளராக நிறுத்தியது காங்கிரஸ். அவர் ''சொன்ன பேச்சைக் கேட்கமாட்டார்'' என்பதை உணர்ந்த இந்திரா காந்தி, அவரை எதிர்த்து தனது சொந்த வேட்பாளராக வி.வி.கிரியை நிறுத்தினார். ''மனசாட்சிப்படி'' வாக்களிக்குமாறு காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். காங்கிரஸ் உறுப்பினர்களும் ''மனசாட்சி''ப்படி வாக்களித்து கட்சி வேட்பாளரைத் தோற்கடித்து இந்திராவின் வேட்பாளரான வி.வி.கிரியை வெற்றிபெறச் செய்தனர்.

இந்தமுறை குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி சார்பில் பிரணாப் முகர்ஜி களமிறக்கப்பட்டார். அவர் தலையாட்டிப் பொம்மையாக இருக்க மாட்டார் என்று தெரிந்தும் அவரை வேட்பாளராக அறிவிக்க வேண்டிய நிர்பந்தம் காங்கிரஸுக்கு ஏற்பட்டது என்பதுதான் உண்மை. 1969இல் கடைப்பிடித்த ''மனசாட்சி வாக்கு'' உத்தியைக் கையாளும் பலம் இந்திரா காந்தியைப்போல சோனியா காந்திக்கு இல்லாமல் இருப்பது பிரணாப் முகர்ஜி செய்த புண்ணியம்.

அதை இன்னொரு விதமாகவும் அணுகலாம். ராகுல் வருவதற்கான ராஜபாட்டையை தயார்செய்ய பிரணாபுக்குக் கொடுத்த வெகுமானமாக இதைக் கருத இடமுண்டு. பிரணாப் முகர்ஜியை அமைச்சராக வைத்துக் கொண்டு ராகுலை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பது உறுத்தலான செயலாகத்தான் இருக்கும். எனவேதான், சல்லடை போட்டு பிரதிபா பாட்டீலைக் கண்டுபிடித்தது போல இந்த முறை 'பரம விசுவாசி' எவரையும் சோனியாவால் முன்னிறுத்த முடியவில்லை.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் குடியரசுத் தலைவர் வேட்பாளராக பிரணாப்பின் பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு, ராகுல் காந்தியை முக்கிய பொறுப்பு ஏற்கச் செய்யும் விடயத்தில் ஒவ்வொரு காரியமும் திட்டமிட்டு படிப்படியாக (இயல்பாகவே நடந்தது போலத் தோன்றினாலும்) நடந்தன.

முதலில் சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் மிகவும் கண்டிப்புடன் கூறுவது போல், ''தீவிர அரசியலுக்கு ராகுல் வரவேண்டும்'' என்றார்.

அதன் பிறகு, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் திக்விஜய் சிங், ஜூலை 16ஆம் திகதி திங்கட்கிழமை [illegible] வேட்பாளராக முன்னிறுத்துவது தவிர்க்க முடியாதது'' என்றார்.

இதைத் தொடர்ந்து குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்பு மனுவை ஹமீது அன்சாரி தாக்கல் செய்த நாளில் (ஜூலை 18, புதன்கிழமை) செய்தியாளர்களிடம் பேசிய சோனியா காந்தி, ''உயர் பதவிகளை வகிப்பது குறித்து ராகுல்தான் முடிவெடுக்க வேண்டும்'' என்றார். இதைத் தொடர்ந்து அடுத்த நாளே - அதாவது குடியரசுத் தலைவர் தேர்தல் நாளில் (ஜூலை 19, வியாழன்) ராகுல் காந்தி, ''கட்சி மற்றும் ஆட்சியில் பொறுப்புகளை ஏற்பதில் தயக்கமில்லை'' என்றார். ஆக, குடியரசுத் தலைவர் பதவிக்கு பிரணாப் 'தள்ளப்பட்டதன்' பரம்மரகசியம் இப்போது புரிந்திருக்கும்.

பிரணாப் முகர்ஜிக்கு குடியரசுத் தலைவர் பதவியை தந்ததுபோல, இரண்டு முறை பிரதமர் பதவி வகித்திருக்கும் மன்மோகன் சிங்குக்கு ஓய்வும் தந்துவிட்டால், ராகுலை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்துவதில் எந்த இடையூறும் இருக்கப் போவதில்லை.

ஆக, 2014 பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக ராகுலை அரங்கேற்றும் முயற்சி குடியரசுத் தலைவர் தேர்தல் நாளில் நிறைவுற்றது எனக் கொள்ளலாம்.

இந்தக் குடியரசுத் தலைவர் தேர்தலில் சில ஆச்சரியமான ஒற்றுமைகளும் காணப்பட்டன. பிரணாப்பை எதிர்த்துப் போட்டியிட்ட பி.ஏ.சங்மாவும் 'எதிர்ப்புக் குரல்' மிக்க ஒரு தலைவர்.

சோனியா காந்தியையே எதிர்த்தவர் சங்மா. இத்தாலியரான சோனியா காந்தி, இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக எப்படி வரலாம் என்று 1999இல் சரத் பவார், தாரிக் அன்வர் ஆகியோருடன் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தவர் அவர். அதனால், காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டவர். சரத் பவாருடன் சேர்ந்து தேசியவாத காங்கிரஸ் உருவாக்கிய முக்கிய தலைவர்களில் சங்மாவும் ஒருவர்.

பின்னர், காங்கிரஸுடன் பவார் நெருங்குவதை எதிர்த்து தேசியவாத காங்கிரஸிலிருந்து விலகி மம்தாவின் திரிணமூல் காங்கிரஸில் இணைந்தார். பிறகு மீண்டும் தேசியவாத காங்கிரஸுக்கே வந்து சேர்ந்தார்.

ஆக, காங்கிரஸ் கூட்டணி சார்பில் போட்டியிட்ட பிரணாப்பும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பி.ஏ. சங்மாவும் ஒரு காலத்தில் காங்கிரஸிலிருந்து ஓரங்கட்டப்பட்டவர்கள்; தனிக் கட்சி கண்டவர்கள்; இயற்கையாகவே போர்க்குணம் மிக்கவர்கள்; 'ரப்பர் ஸ்டாம்பு'களாக இருக்கத் தெரியாதவர்கள்.

இருந்தாலும், பிரணாப் முகர்ஜியைத்தான் குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவித்தாக வேண்டிய கட்டாயம் சோனியாவுக்கு ஏற்பட்டது. காரணம், ராகுலுக்கு 'வழி' கிடைத்தாக வேண்டுமே!

முன்னர் இந்திரா காந்தி 'தன்னுடைய வேட்பாளரை' நிறுத்தியது போல், இன்று தன்னுடைய தனிப்பட்ட தேர்வை (பிரதிபாவை திணித்தது போல்) கட்சியின் மூலம் செயல்படுத்தும் நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இல்லை என்பதே உண்மை.

இந்த அரசியல் உண்மை, காங்கிரஸ் தலைமையின் பலவீனத்தையும், சோனியா நினைத்ததையெல்லாம் 100 சதவிகிதம் செய்யக்கூடிய அளவுக்கு வளைந்துகொடுக்கும் நிலையில் காங்கிரஸ் கட்சி முன்பு போல் இல்லை என்பதையும் பறைசாற்றுகிறது.

சோனியாவின் முழுக் கட்டுப்பாட்டில் - அவரது சுட்டு விரலசைவில் கட்சி இருப்பது போல ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் செயற்கையான விம்பத்துக்கும் இப்போது நிலவும் அசலான நிலைக்கும் உள்ள இடைவெளியின் வெளிப்பாடுதான் பிரணாப் முகர்ஜின் தேர்வு. இந்தத் தேர்வில் கிடைத்திருக்கும் லாபம் ராகுலுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு!


நந்தி விலகியது என்னவோ உண்மை. ஆனால், நந்தனுக்குத் தரிசனம் கிடைத்ததா என்று கேட்டால், பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை முருகன் ஆலய வருடாந்த பெருவிழா

**இன்று**

செவ்வாய்க் கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகிறது



# ஆலய தரிசனம் மனதை ஒரு நிலைப்படுத்தவல்லது

*சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள், கோப்பாய்*

நானிலம் போற்றும் நல்லை முருகனின் வருடாந்தப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் சிறப்புற ஆரம்பமாகின்றது. தமிழர் தம் பண்பாட்டிலே சமயம் சார்ந்த நம்பிக்கைகளும் உணர்வுகளும் முக்கிய இடம்பெறுகின்றன. அவற்றை ஆதாரமாக வைத்தே நமது தமிழினத்தின் சமூக வரலாறுகள் ஆவணப்படுத்தப்படுகின்றன.

மனிதன் இயற்கையையே தெய்வமாகக் கருதியவன். அதுவே அவனது வாழ்வில் பிணைப்பாகியது. ஞான நாயகனாகிய முருகனின் தோற்றம் இயற்கையின் பாற்பட்டது.

முருகன் சிவபிரானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஜோதியாகிய பிளம்பு காற்றினிலே கலந்து சரவணப் பொய்கையின் நீருள் ஆறு வடிவமாகக் கார்த்திகைப் பெண்களால் எடுத்து வளர்க்கப்பட்டு கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகனாகியவன் என்பது கந்தபுராணம் கூறும் வரலாறு தொல்காப்பியம்

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'

என முருகனைப் பழந் தமிழ்த் தெய்வமாக சித்திரிப்பதைக் காணலாம். அத்தகைய முருகனை அறிவாலும், அன்பினாலும், யோக நிலையாலும் சிந்தித்து வந்தித்து காணமுடியும் என சைவசித்தாந்தங்கள் எடுத்துக் கூறினும் அவற்றின் வழி நின்று இறைவனைத் தரிசித்த அருட்பெரும் சமயாசாரியார்கள், நாயன்மார்கள் ஆலய வழிபாட்டின் மூலமே இலகுவில் இறைவனின் அருளைப் பெற முடியும் எனச் சாதனை மூலம் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

"நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு" என வாகீசப் பெருந்தகை பாடினார்.

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்கிறது சிவஞானபோதம். அனுபூதிமானாகிய அருணகிரிநாதர் பாடல் பெற்றதும் யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் ஆகியோரது திருவடிபட்டதுமான புண்ணிய பூமியில், நாவலர் பெருமான். பிறந்து வாழ்ந்து சைவமும் தமிழும் வாழப் பணி செய்த நல்லைப் பதியில் குமர கோட்டமாக விளங்கும் நல்லை முருகன் ஆலயம் வரலாற்றுப் பிரசித்தி பெற்றது.

இவ் ஆலயம் தமிழ் மன்னன் புவனேகபாகுவினால் கட்டப்பட்டு அன்றுமுதல் இன்று வரை மாப்பாண முதலியார் வம்சத்தால் நிர்வகிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இன்று குகஸ்ரீ குமாரதாசமாப்பாண முதலியாரால் நேரம், நேர்மை, அர்ப்பணிப்பு, கடமை, கண்ணியம் தவறாது நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இங்கு நடைபெறும் மஹோற்சவக் கிரியைகள் யாவும் குமார தந்திர ஆகம முறையில் நடைபெற்று வருகின்றன. 'மனங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டும் காட்சியாக அமைகின்ற விழாவில் தஞ்சத்தருள் மஞ்சக்காட்சி, ஆர்த்திகன் நீங்கும் கார்த்திகை உற்சவம், அஞ்ஞானம் நீக்கும் ஞானப்பழனி உற்சவம், பஞ்ச கிருத்தியத்திலே சம்ஹாரத்தை உணர்த்தும் இரதோற்சவம், தீர்த்தவாரிதி, கற்பு, களவு, இயலை சமூகத்துக்கு காட்டிடும் திருக்கல்யாணம் ஆகியவை முக்கியமானவை எனலாம்.

ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயமாகும். இறையுணர்வுடன் வேற்றுணர்வின்றி வேலவன் திருவடியைச் சிந்திக்க வேண்டும். விழாவில் இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், துன்னிய பிணை மலர்க்கையினர் ஒருபால், தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் என அடியார்கள் பக்திநெறி எழுச்சிபெறும்.

கந்தபுராண படல வாசிப்பு ஆண்டுதோறும் தொடர்ந்து இடம் பெற்று வரும் இவ்வாலய வழக்கம் மூலம் நமது சைவத் தமிழ் கலாசாரம் வெளிக் கொணரப்பட வேண்டியதவசியம். அவற்றுக்கு ஆக்கமும் அளிக்க வேண்டியது சைவப் பெருமக்களாகிய எமது கடனாகும். நல்லைக் கந்த னின் வருடாந்தப் பெருவிழாக் காலத்தில் அவன் அருளை மனதிருத்தித் தொழுது அவனருள் பெற்று இன்புறுவோமாக.

# வசந்தம் உங்கள் கைகளில்....

**உன் வாழ்க்கை என்பது உன்னை மட்டும் சார்ந்தது அல்ல உடன் இருப்பவர்களையும் சூழ்ந்து உள்ளது.**

*சுவாதி*



வாழ்க்கைப் புத்தகத்தில் 'சந்தோசம்' எனும் ஒரு பக்கத்தை தேடிக் கொண்டிருந்த நாள்களில் நாம் படிக்காமலே விட்டுச் சென்ற பக்கங்கள் ஏராளம், அப்படி இருந்தும் வாழ்க்கையின் சில பக்கங்கள், வாழ்க்கையின் முக்கியத்துவத்தைக் கற்று தர மறக்கவில்லை.

எத்தனையோ இன்பங்களுக்கும் துன்பங்களுக்கும் பிரிவுகளுக்கும் மத்தியில் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

நாம் ஒன்று நினைக்க இறைவன் ஒன்று நினைக்கிறான் என்ற நிலையில்தான் இன்று எமது வாழ்வு சென்று கொண்டிருக்கிறது.

நம் வாழ்வில் எத்தனை பேரைப் புரிந்து கொள்கிறோம். எத்தனை பேரை எமது உறவுகளாகத் தக்கவைத்துக் கொள்கிறோம் என்பதை எல்லாம் நினைக்கும் போது அவை வேதனை தரும் விடயங்களாக மட்டுமே இருக்கின்றன.

விவரம் தெரிந்த நாள் தொடக்கம் பாடசாலைக் கல்வியில் இருந்து எத்தனை ஆயிரம் உறவுகளை நாம் கடந்து வந்திருப்போம். ஆனால் உங்களுக்கு நினைவு இருக்கிறதா. நாம் எத்தனை உறவுகளை இன்றும் நினைவில் வைத்திருக்கிறோம் என்று.

ஒன்றாக இருந்து உண்டு படித்து ஓடி விளையாடிய பாடசாலை நண்பர்களை இன்று எமக்கு நினைவிருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தால் இல்லை என்ற பதில் மட்டுமே பெரும்பாலானோரிடம் இருக்கும்.

இவ்வாறு கடந்து வந்த காலங்கள் எமக்கு எத்தனையோ அனுபவங்களைக் கற்றுத் தந்திருக்கின்றன. நாம் கண்ட மனிதர்களும் அவர்களது குணாதிசயங்களும் எம்மை நல் வழிப்படுத்தியும் உள்ளன. சற்றுத் தடுமாற வைத்தும் உள்ளன.

அடிக்கும் காற்றுக்கும் வெள்ளத்துக்கும் வளைந்து கொடுத்து நிமிர்ந்து நிற்கும் நாணற் புற்களைப் போல இருக்கும் சமூகத்துக்கு நடுவில் நிமிர்ந்து நின்று பாறிப்போய்விட்ட ஆலமரமாயும் ஆயிரம் பேர் இருக்கத் தான் செய்கின்றனர்.

இவ்வ எல்லாம் எமக்கு என்ன உணர்த்துகின்றன. ஒவ்வொரு மனிதரும் எமக்கு ஒவ்வொரு பாடப்புத்தகங்களாக பொக்கிசங்களாகவே இருக்கின்றனர். எமக்கு பிடித்தவர்களாக இருந்தாலும் எம்மைப் பிடிக்காதவர்களாக இருந்தாலும் அவர்கள் மத்தியில் நாம் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்வில் சமநிலையை எட்ட முடியும்.

இப்படித்தான் சமூகம். இதை விட எதுவும் இல்லை. நாம் இந்தச் சமூகத்தில் எதிர் நீச்சல் அடித்து எப்படியோ பிழைத்துக் கொள்வோம் என்று எண்ணி ஓரேயடியாக மூழ்கிப் போய்விடக் கூடாது. எம்மால் இங்கு எதிர் நீச்சல் அடிக்க முடியாது உள்ள நிலையில் அவர்கள் பக்கமே சென்று விடுவோம் என்று வாழப் பழகிக் கொள்ளவேண்டும். எது எப்படி இருந்தும் எமது கொள்கையில் மாற்றம் இல்லாது இருந்தால் சரி. மற்றவை தானாகவே எம்மை வந்து சேரும். எமது வாழ்க்கை எம்மை மட்டும் சார்ந்தது என்ற எண்ணம் தவறானது. எம்மை மட்டும் சார்ந்தது இல்லை எமது வாழ்க்கை. எம்மைச் சுற்றி ஆயிரம் வேர்கள் விழுதுகள் கிளைகள் இருக்கத் தான் செய்கின்றன.

எந்த ஒரு மரமும் தனியே இருப்பதில்லை. அதில் வேர், இலை, கிளை, விதை, பூ, காய், கனி என்று அனைத்தும் சேர்ந்து தான் பூரணமரமாகிறது. இது போல் தான் வாழவும். உறவுகள் சூழ்ந்தது தான் வாழ்க்கை. இதில் ஒன்றை வெட்டி இன்னொன்றை ஒட்டவைத்து வாழ்ந்துவிட முடியாது. எல்லாமே எல்லோருமே எமக்குத் தேவை என்ற எண்ணப்பாட்டுடன் தொடரும் வாழ்வு இனிமையை அள்ளித் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 சிறுவர்களுக்கு ஆதரவளிக்கும் நாயன்மார்கட்டு சிறுவர் கிராமம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*



எஸ்.யேசுதாஸ்

இந்தச் சிறுவர் கிராம அமைப்பின் இலங்கைக்கான தேசிய இயக்குநராக ஆனந்தகருணாரத்னவும், உதவித் தேசிய இயக்குநராக திவாகர் ரெட்ணதுரை யும் கடமையாற்றுகின்றனர்.

மூடப்பட்ட மனிக் பாமில் வைத்து பராமரிக்கப்பட்ட சிறுவர்களையும், யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சிறுவர்களையும் இணைத்து யாழில் சிறுவர் கிராமத்தை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருபாலை றக்கா வீதி, அரியாலை ஆனந்தன் வடலி வீதி, போன்ற இடங்களில் வாடகை வீடுகளில் தற்காலிகமாக சிறுவர் கிராம செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந்த அமைப்பை நிரந்தர இடத்தில் அமைக்கும் பொருட்டு நாயன்மார்கட்டு குளத்திற்கு முன் பாகவுள்ள பல ஏக்கர் வயல் நிலம் கொள்வனவு செய்யப்பட்டு 120 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சகல வசதிகளையும் கொண்ட 12 வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன. சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பாலர் பாடசாலை, நூலகம், கணினிப் பயிற்சி நிலையம், விளையாட்டு மைதானம், பொழுது போக்கு செயற்பாடுகள். பூங்கா, பொதுத் தேவைகளுக்காக சமூக மண்டபம் போன்றவைகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்தச் சிறுவர் கிராம செயற்பாடானது ஏனைய சிறுவர் இல்லங்களிலிருந்து பெரிதும் மாறுபட்ட குடும்பச் சூழல் வாழ்வு முறையைக் கொண்டதாக அமைவதாக உதவித் தேசிய இயக்குநர் திவாகர் ரெட்ணதுரை தெரிவித்தார். சிறார்களை தாய், சகோதர உறவுப் பாசப்பிணைப்பில் வளர்த்தெடுக்கும் கட்டமைப்பு பின்பற்றப்படுகிறது.

ஒரு வீட்டில் 10 பிள்ளைகளும் ஒரு செவிலித்தாயும் (வளர்ப்புத்தாய்) இருப்பர். பிள்ளைகள் அந்தத் தாயை அம்மா என்றே அழைப்பர். தாய்க்குரிய கரிசனையுடன் பிள்ளைகளுக்கான தேவைகள், அன்புடன் கூடிய பராமரிப்புக்களை தாய் வழங்குவார். தாயானவள் 30-40 வயதுக்கு உட்பட்டவராகவும், குடும்பப் பொறுப்புகள் அற்றவராகவோ, தனித்து வாழ்பவராகவோ இனங்கண்டு தெரிவு செய்யப்படுவார்.

இந்தப் பணியாளர்களுக்கு ஊதியம், பணிக்கொடை ஓய்வூதியம் என்பவற்றுடன் 60 வயதின் பின்னர் ஓய்வு இல்லங்களில் தங்க வைத்து பராமரிக்கப்படும் வசதிகளும் வழங்கப்படும்.

தாய், தந்தையர் அற்ற, குடும்ப சூழலின் நிமித்தம் கைவிடப்பட்ட 12 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் சிறுவர் கிராமத்தில் இணைந்து பயன் பெறலாம். 14 வயதில் ஆண்கள், பெண்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு பராமரிக்கப்படுவர். கல்வி, பாதுகாப்பு, உணவு, வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சிகள், மருத்துவ வசதி, புலமைப் பரிசில், வெளிநாட்டுக் கல்வி, திருமணம் போன்ற அனைத்து படிமுறை வசதிகளும் வழங்கப்படும். சுயவாழ்வின் பின்னரும் நிறுவன உறவுகளும் தொடர்ந்திருக்கும்.

கைவிடப்பட்டோரின் தனிமை, விரக்தி, உளத் தாக்கங்களைப் போக்கி அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி சொந்தக்காலில் சுய மரியாதையுடன் சமூகத்தில் இணைத்து புது வாழ்வை அமைத்துக் கொடுப்பதே சிறுவர் கிராம அமைப்பின் நோக்கமும் சேவையுமாகும்.

வட மாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைத் திணைக்களத்தின் ஊடாக யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறுவர், குழந்தைகள் இங்கே ஒப்படைக்கப்படுகின்றனர். இங்கு மத, மொழிமாற்றத்திற்கு இடமில்லை. அவரவர் சார்ந்த மதக் கடமைகளை அனுசரிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.


இலங்கை முழுவதும் இயங்கிவரும் சிறுவர் கிராமங்களில் தற்போது 760இற்கும் அதிகமான பிள்ளைகள் நன்மை அடைந்து வருகின்றனர். கடந்த 33 வருடங்களில் ஏறத்தாழ 2500 பேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். சிறுவர் கிராமங்களுக்கு வெளியே வாழும் நிர்க்கதிக்குள்ளான குடும்பப் பிள்ளைகளின் வாழ்வை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் 3000 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மனிதநேயப் பணியாற்றும் அமைப்பில் நாடு பூராகவும் 450 பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் 18 பேர் பணிபுரிகின்றனர். யாழ் கிளையின் இயக்குநராக சு.அருச்சுனன் கடமையாற்றி வருகின்றார். தற்போது 75 பிள்ளைகள் வரையில் சிறுவர் காப்பகத்தில் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர். 120 பேர் வரையில் பாதுகாத்து பராமரிக்கக்கூடிய திட்டத்துடன் அமைக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதி தேவை ஏற்படும் பட்சத்தில் மேலும் விஸ்தரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜூன் மாதமளவில் இந்தச் சிறுவர் கிராம கட்டடப்பணிகள் பூர்த்தியடைந்து செயற்பட ஆரம்பிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

'படைத்தவன் படியளப்பான்' என்ற முதுமொழிக்கேற்ப மனித நலப் பணிகள் ஆற்றும் அமைப்புகள் ஊடாக இறைவனின் 'காத்தல்' செயற்பாடு நிறைவு செய்யப்படுகின்றது என்பதற்கு தொண்டு நிறுவனங்களின் பணி சான்றாகும்.

இந்த உன்னதமான சேவையானது சமூகத்தையும், நாட்டையும் காத்திரமான பாதைக்கு இட்டுச் செல்லும். கேளிக்கைகள், ஆடம்பரங்களுக்குச் செலவிடும் தொகையில் ஒரு பகுதியையாவது இவ்வாறான பிறர் நல வாழ்வுத் தேவைகளுக்கு வழங்க முன்வருவது அனைவரதும் கடமையாகும். ✱

> நாயன்மார்கட்டு குளத்திற்கு முன் பாகவுள்ள பல ஏக்கர் வயல் நிலம் கொள்வனவு செய்யப்பட்டு 120 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சகல வசதிகளையும் கொண்ட 12 வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன.



கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை,
226,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 4353

## நல்லூர் நாதனே கொடியேற்று



நல்லையிலே தில்லைகாண
நல்லூரா கொடியேற்று
நாள்தோறும் உனைப் பணிய
நாதனே கொடியேற்று
தொல்லை தரும்
வினையகலத்
தோகையனே கொடியேற்று
தும்பிமுகன் தம்பியுனைத்
துதிபாடக் கொடியேற்று
கல்லையொத்த மனமுருகக்
கந்தா நீ கொடியேற்று
கழல் பாடிக் கவிதை தரக்
கடம்பனே கொடியேற்று
எல்லையிலா உன் கருணை
எமையாளக் கொடியேற்று
ஏறுமயில் மீதுவந்து
இன்னருள் புரியக்
கொடியேற்று

-தேவி கணேஸ்

சிறப்புற வாழ்த்துவோர்:
குமார் பேக் ஹவுஸ்
சென்.செபஸ்தியான் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்

## கலையுமிழும் கொடியேற்றம்



உலகத்தில் உயர் மொழியால்
உன்னதத்தைச் சேர்த் தென்றும்
தலையாக மிளிர்ந் தொளிரும்
தவ நல்லைப் பதி யழகா!
கலையுமிழும் கொடி யேற்றம்
கவர்ந்திழுக்கும் காந்த மையா!
மலையாக நீ யிருந்து
மகிழ்வதனைத் தந்தி டையா!

*-கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்-*

சிறப்புற வாழ்த்துவோர்:
சரவணா ரெக்ஸ்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். நல்லூர், யாழ்ப்பாணம். நெல்லியடி.

## தெய்வீக இசையரங்கில்...

நல்லூர் உற்சவ காலத்தில், இளங்கலைஞர்மன்றத்தினால் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நாளாந்தம் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில்-

முதலாம் நாளான இன்றைய கொடியேற்ற தினத்தில் வி.கே. பஞ்சமூர்த்தி,பி.குமரேஸ் இணைந்து வழங்கும் மங்கல இசையரங்கு மாலை ஏழு மணி தொடக்கம் எட்டு மணி வரை நடைபெறும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வாளர் அனைவரும் கூட்டமைப்புக்கே வாக்களிப்பர்

## தன்மானம் மிக்க தமிழர் என்பதை மீண்டும் நிரூபிப்போம் என்கிறார் அம்பாறை வேட்பாளர்

அம்பாறை,ஜூலை24

எண்ணிப்பார்க்க முடியாத இழப்புகளைச் சந்தித்த தமிழினம் இதுவரை கௌரவமான அரசியல் தீர்வொன்றைப் பெறமுடியாமல் உள்ள நிலையில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலைச் சந்திக்கின்றது. இந்தநிலையில், தன்மானம் மிக்க ஒவ்வொரு தமிழ் உணர்வாளர்களும் தமது ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டிய தார்மீகக் கடமை உண்டு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான பேராசிரியர் முருகேசு இராஜேஸ்வரன் குறிப்பிட்டார்.

**தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் உணர்வுகளைச் சிதைத்துவிடாமல் ஐக்கியமான சமூகமாக எமது பலத்தை மீண்டும் உலகறிய வைக்கவேண்டும்.**

கல்முனை பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் இதயங்களில் வாழும் தந்தை செல்வாவினால் முன்னெடுக்கப்பட்ட அறவழிப் போராட்டம், தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதவழிப் போராட்டம் என்பன மௌனித்த நிலையில் நாம் மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்கின்றோம்.

இந்தநாட்டில் வாழும் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை. இந்த மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள் என்ற உண்மையை குறித்த போராட்ட வடிவங்கள் உலகறிய வைத்துள்ளமையால் எமது இனம் இன்று இராஜதந்திர ரீதியில் அரசியல் தீர்வைப் பெறும் காலம் கனிந்துள்ளது.

எனவே, தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் உணர்வுகளைச் சிதைத்துவிடாமல் ஐக்கியமான சமூகமாக எமது பலத்தை மீண்டும் உலகறிய வைக்கவேண்டும். அப்போதுதான் பேரினவாத சக்திகளின் கொட்டத்தை எமது வாக்குப்பலத்தால் அடக்கிவிட்டு, நாம் தன்மானம் உள்ள இனம் என்பதை மீண்டும் நிரூபணமாக்க முடியும் - என்றார். (ச)

# தமிழரின் ஏகோபித்த ஆணை கிழக்குத் தேர்தலில் வெளிப்படும்

## ஒற்றுமையே முக்கியம் என்கிறார் கூட்டமைப்பு மட்டு. வேட்பாளர்

எருவில்,ஜூலை24

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை சர்வதேசம் அக்கறையோடும், ஆர்வத்தோடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அவர்கள் வழங்குகின்ற ஆணையாக இந்தத்தேர்தல் இருக்கப் போகின்றது என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் சோமசுந்தரம் யோகானந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரின் உரிமைப் போராட்டம் இன்று சர்வதேச அரங்கில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பர் மாதம் நடை பெறவுள்ளது.

சர்வதேசம் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு வழங்குகின்ற ஆணையாக இந்தத் தேர்தலை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

எனவே, எங்கள் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க ஒரே அணியில் திரண்டு தமிழ்த் தேசியத்தை நிலைநாட்ட உங்கள் ஒற்றுமையை வாக்கின் மூலம் வழங்க வேண்டும். அரசுடன் சேர்ந்து தமிழ்த் தேசியத்தை விற்று அரசியல் பிழைப்பு நடத்துபவர்களை இந்தத் தேர்தலில் கிழக்கு மக்கள் ஓரங்கட்டிவிட வேண்டும் - என்றார். (ச-31)

# கிழக்கு மாகாண தேர்தலில் அமீர் அலியின் எதிர்பார்ப்பு

எருவில்,ஜூலை24

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை நிச்சயம் பெறும் என்று அக் கட்சியின் தவிசாளரும் வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஓட்டமாவடியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் மக்கள் எங்கள் கட்சிக்கு வழங்கிய ஆணையைப் போன்று இத் தேர்தலிலும் ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறினார். (ச-31)

# 'கபே' அமைப்பின் திருமலை மாவட்ட அலுவலகம் திறப்பு

**இலக்கம் 1008, அனுராதபுரம் சந்தி, திருகோணமலை எனும் முகவரியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஜூலை 24

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' இன் திருகோணமலை மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இலக்கம் 1008, அனுராதபுரம் சந்தி, திருகோணமலை எனும் முகவரியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியை மேற்கொள்வதோடு வாக்களிக்கத் தகுதியிருந்தும் அடையாள அட்டைகள் இல்லாமலிருப்பவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஒவ்வொரு கட்சிகளதும் பிரதிநிதிகளை அழைத்து வன்முறையைத் தவிர்ப்பது பற்றிய கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் சட்ட விரோத தேர்தல் பிரசாரம் அதிகரித்துள்ள நிலையில் கந்தளாயில் போஸ்டர்கள், பனர்கள் என்பன பொலிஸாரால் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-4)



கண்டி கண்ணொருவையில் விவசாயக் கண்காட்சியை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த காய்கறிகளைப் பார்வை யிடுகிறார்.

# புடைவை விற்பனை நிலையத்தில் தீ

நுவரெலியா,ஜூலை24

புசல்லாவ - நுவரெலியா வீதியில் அமைந்துள்ள ஆடை வியாபார நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து புசல்லாவ பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ விபத்தால் எவருக்கும் எந்தவித சேதமும் ஏற்படவில்லை. ஆனால் வியாபார நிலையத்துக்கும் நிலையத்தில் விற்பனைக்கு இருந்த ஆடைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மீள்குடியேற்ற கிராமத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

## குச்வெளியில் 280 குடும்பங்கள் பாதிப்பு

திருகோணமலை, ஜூலை24

திருகோணமலை மாவட்டத்தில் வடக்கே, குச்சவெளி, புடவைக்கட்டு வீதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட மீள்குடியேற்றக் கிராமத்தில் கடும் வரட்சியினால் மக்கள் குடிதண்ணீருக்காக அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர்.

சுமார் 280 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் மூன்று பொதுக் கிணறுகள் உள்ளன.

இந்தக் கிணற்றின் தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. உப்பு கலந்த உவர் நீராகவுள்ளது. அண்மையிலுள்ள குளமும் வரட்சியால் வற்றிவிட்டது.

பணம் கொடுத்தே தனியார்களிடம் குடிதண்ணீர் கொள்வனவு செய்கின்றோம் என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-40)

# காத்தான்குடி கடற்கரை வீதி காப்பெற் வீதியாக நிர்மாணம்

எருவில், ஜூலை 24

ஜப்பானிய ஜெய்கா திட்டத்தின்கீழ் காத்தான்குடி கடற்கரை வீதி முழுமையாக காப்பெற் வீதியாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுமார் 7 கோடி ரூபா நிதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வீதியின் ஆரம்பப் பணிகளை பிரதியமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.எம். அஷ்பர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த வீதியின் இரு பகுதிகளிலும் வடி கான்கள் அமைக்கப்பட்டு நவீனமுறையில் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

# இழந்துபோன உறுப்பினர் பதவியை மீண்டும் பெற்றுக்கொடுப்போம்

## அக்கரைப்பற்றில் முஸ்லிம் காங். வேட்பாளர் நஸார்

எருவில்,ஜூலை24

அக்கரைப்பற்று மண் இழந்துபோன மாகாணசபை உறுப்பினர் பதவியை நிச்சயம் இந்தமுறை நடைபெறவுள்ள தேர்தலில் பெற்றுக்கொடுக்கும். அதற்காக எந்தத் தியாகத்தைச் செய்வதற்கும் தயாராகவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் நஸார் ஹாஜியார் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களின் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முதன் முதலாக நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மூன்று ஆசனங்களை அக்கரைப்பற்று மண் பெற்றுக்கொண்டது. ஆனால், இன்று இந்த மண்ணிலிருந்து ஒருவர் கூட மாகாணசபையை அலங்கரிக்கவில்லை.

அக்கரைப்பற்றுக்கு மாகாண சபை உறுப்பினரைப் பெற்றுக் கொடுத்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸாகும். அந்த வகையில்தான் இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸினூடாகவே இழந்த மாகாணசபை உறுப்பினரை அக்கரைப்பற்று பிரதேசம் பெற்றுக் கொள்ளவுள்ளது.

அக்கரைப்பற்றில் இன்று முஸ்லிம் காங்கிரஸுக்குப் பெரும் செல்வாக்கு அதிகரித்துள்ளது. மாற்றுக் கட்சிக்காரர்கள் பிழையான விமர்சனத்தைத் தவிர, வேறு எதையுமே செய்யமுடியாத நிலையில் உள்ளனர். இந்தப் பிரதேசத்துக்கும் சமூகத்துக்கும் நல்லதைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்திலேயே அரசியலுக்குள் வந்துள்ளேன்.

இலங்கை முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி என்றுமே தனது தனித்துவத்தை விட்டுக் கொடுத்ததில்லை. முஸ்லிம்களின் உரிமையே அதன் குறிக்கோளாகும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் பலம் நிரூபிக்கப்படும். - என்றார்.(ச-31)

# கட்டுவனவில் இரு சடலங்கள் மீட்பு

அம்பாந்தோட்டை, கட்டுவன பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 52 வயதுடைய பெண் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார். அவரது கணவரான 60 வயதுடைய நபர் வீட்டுக்கு முன் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் இவர்களது உறவினர் என கூறப்படும் 32 வயதுடைய நபர் கையில் வெட்டுக் காயங்களுடன் எம்பிலிப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குடும்பப் பிரச்சினையால் ஏற்பட்ட மரணங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதே வேளை கஹகவத்தைப் பகுதியில் தாயும் மகளும் தீக்கிரையாகி உயிரிழந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் புத்திசாலித்தனத்தால், சொல்வாக்கும் அதிகரிக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரித்தாலும் சுறுசுறுப்பாகக் கடமையாற்றுவீர்கள். கடன் தீர்வுக்கு திட்டமிடுவீர்கள். தொழில் விடயங்களில் விழிப்போடு செயற்பட்டு மந்த நிலைமையை மாற்றுவீர்கள்.

**இடபம்:** இடமாற்றங்களால் மனமாற்றங்களைப் பெறும் நாள். இல்லறத்துணையின் வேண்டுகோள் ஒன்றை நிறைவேற்றாததால் சிறு சச்சரவுகள் நிலவும். உறவுகளின் தொடர்புகள் நலம் தரும். பணவரவு தேவைக்கேற்ற வகையில் கிடைக்கும். தொழிலில் மறைமுக எதிர்ப்புகள் தோன்றும்.

**மிதுனம்:** செய்ய நினைத்த பணி ஒன்று, செய்து முடித்த பணியாக இருக்கும். அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்களைச் சந்தித்து பழைய விடயங்களை நினைவு கூறுவீர்கள். பண விவகாரங்களில் எதிர்பார்த்த காரியம் ஒன்று ஏமாற்றத்தைத் தரலாம். திடீர் பயணம் ஒன்று ஏற்படும்.

**கடகம்:** உடல் சோர்வின் காரணமாக எதிலும் பட்டும் படாமலும் செயற்படுவீர்கள். தொழில் தொடர்பான முயற்சிகளிலும்கூட தடை தாமதங்களைச் சந்திப்பீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும். ஏதோ ஒரு விடயத்தை நினைத்து அடிக்கடி பயப்பட நேரிடும்.

**சிங்கம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள். செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். தொல்லை கொடுத்த எதிரிகள் எல்லை விட்டுச் செல்வர். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் மீது குற்றம் காண்பீர்கள். அதனை சற்று மாற்றிக் கொள்ளுங்கள்.

**கன்னி:** எதிர்பாராத விதமாக சிலரின் சந்திப்புகள் ஏற்படும். அதனையும் பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். பணப் பொறுப்புகள் பிறரை நம்பி ஒப்படைப்பதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் எளிதில் வந்து சேரும்.

**நாளை**

ஆடி 10 புதன்கிழமை 25.07.2012
திதி: ஸப்தமி பி.இ. 02.36 வரை
நட்சத்திரம்: அத்தம் 10.21 வரை சித்தம்
சுபநேரம்: 04.32- 06.02 வரை
ராகு காலம்: 12.02- 01.32வரை

**துலாம்:** சில பணிகளை முடிப்பதற்காக, பிறரின் உதவிகளை நாட வேண்டியிருக்கும். நீண்டநாள் எதிர்பார்த்த தகவல் ஒன்று இன்று கிடைக்கப்பெறும். பூர்வீக சொத்துக்களால் செலவுகள் ஏற்படும். வீட்டுக்கு வரும் உறவினர்களால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம்.

**விருச்சிகம்:** வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் தொழில் இடர்பாடுகள் தீரும். வீண் விரயங்களுக்கும் வாய்ப்பு உண்டு. பெற்றோர்களின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும். வெளிக்காட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலையே.

**தனுசு:** சில பணிகளில் நீங்கள் காட்டும் பிடிவாதம் பிறரை அதிகம் யோசிக்க வைத்த போதும் முடிவில் அவர்களே உங்களைப் பாராட்டுவார்கள். முரண்பாடாகச் செயற்பட்ட நண்பர்கள், நல்லாதரவு கொடுக்க முன் வருவர்.

**மகரம்:** முக்கிய காரியம் ஒன்றுக்காக அலைச்சலும் செலவுகளும் இருக்கும். முக்கியஸ்தர்களின் தொடர்புகள் பயன் தரும். தொழிலில் பங்குதாரர்களுடன் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படும். புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த தகவல் வருவதில் தாமதம் ஏற்படும்.

**கும்பம்:** எண்ணங்கள் வெற்றிபெறும். எடுத்த காரியத்தை எதிர்பார்த்தற்கு மேலாகச் செய்து முடிப்பீர்கள். பெண்களால் உருவான மனக்கலக்கம் அகலும். அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பதன் மூலம் வீண் அலைச்சலைத் தவிர்த்துக் கொள்வீர்கள்.

**மீனம்:** சில காரணங்களால் தன்னம்பிக்கை குறைந்து உள்ளத்தில் சோர்வும், அசதியும் ஆட்கொள்ளும். எதிர்ப்புகளை புத்தி சாலித்தனத்தால் வெல்வீர்கள். வீட்டுக்கு வரும் உறவினர் ஒருவரை மகிழ்வித்து மகிழ்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 9 | | 5 | 7 |
| 9 | | | | | | 4 | 2 | 3 |
| 1 | 5 | | | | 2 | | 8 | |
| | 7 | 1 | | 4 | 8 | | | |
| 2 | | | 9 | | | | | 5 |
| | | | 2 | 3 | | 7 | 6 | |
| | 1 | | 8 | | | | 3 | 4 |
| 6 | 4 | 5 | | | | | | 8. |
| 3 | 8 | | 7 | | | 6 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 8 | 9 | 5 | 2 | 4 | 1 |
| 9 | 5 | 2 | 7 | 4 | 1 | 8 | 6 | 3 |
| 8 | 4 | 1 | 3 | 6 | 2 | 9 | 5 | 7 |
| 1 | 8 | 5 | 4 | 2 | 9 | 3 | 7 | 6 |
| 2 | 6 | 4 | 5 | 3 | 7 | 1 | 9 | 8. |
| 7 | 3 | 9 | 6 | 1 | 8 | 5 | 2 | 4 |
| 4 | 1 | 6 | 9 | 5 | 3 | 7 | 8 | 2 |
| 3 | 9 | 7 | 2 | 8 | 7 | 6 | 1 | 5 |
| 5 | 2 | 8 | 1 | 7 | 6 | 4 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராஜகத்தை ஏற்படுத்துவதுதானா மஹிந்த சிந்தனையின் நோக்கம்?

**ரணில் கேள்வி**



கொழும்பு,ஜூலை24

நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்துவதா மஹிந்த சிந்தனையின் நோக்கம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தெல்கந்தவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்கள், பெண்கள் வீதியில் தனியாகச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மன்னராட்சிக் காலங்களில் பெண்கள் தங்க ஆபரணங்களை அணிந்து நாடு முழுவதிலும் செல்ல முடிந்தது. எனினும், தற்போதைய மன்னராட்சிக் காலத்தில் பெண்கள் ஆபரணங்களை அணிந்து அரை மைல் கூட தனியாகச் செல்ல முடியாது. சிறுவர் துஷ்பிரயோகம், வன்புணர்வுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

மன்னாரில் அண்மையில் துரதிர்ஷ்டவசமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் நீதிவானை மிரட்டி சாதகமான தீர்ப்பை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

குறித்த அமைச்சரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். நாட்டில் இடம்பெற்றுவரும் அநீதிகளுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் கூட்டாக இணைந்து குரல்கொடுக்க வேண்டும்-என்றார். (ச)

# 100 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

இலங்கையில் 100 வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இலங்கையை ஆசியாவின் கல்வி மையமாகப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் இவ்வாறு வெளிநாட்டு மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்வழங்கப்படுகின்றது.

சுமார் 48 நாடுகளைச் சேர்ந்த மாண வர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்ப டவுள்ளது. புலமைப் பரிசில் வழங்கப்படும் குறித்த மாணவர்களுக்கு விசாக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டா. வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் நோக்கில் அரசு இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ச)

# குடும்ப அரசியலால் நாடு ஆக்கிரமிப்பு

## புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை24

நாடு குடும்ப அரசியலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. குடும்ப அரசியலிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

குடும்ப அரசியலுக்கு எதிராக மக்கள் அணி திரளாவிட்டால் இந்த நாடு சீரழிந்து விடும்.

இன்று நாட்டில் மிக விசித்திரமான ஆட்சி நடைபெறுகின்றது. மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்குவதில்லை. நாடாளுமன்றில் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆளும் கட்சியினர் உரிய பதிலளிப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளால் மக்களால் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளது,

குறைந்தபட்சம் 7500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார். (ச)

# 8 முன்னாள் போராளிகளை சமூகமயப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஜூலை24

புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களில் எட்டுப் பேரை சமூகமயப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒருவருட காலம் புனர்வாழ்வளிக்கப்பட்ட குழுவினரே இவ்வாறு சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

இதுவரையில், புனர்வாழ்வளிக்கப்பட்ட 11 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் சமூகமயப் படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

# தமிழ் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை

## நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு



**நீதிபதிகளின் பற்றாக் குறை தொடர்பில் நீதிச் சேவை ஆணைக் குழுவுடன் கலந்துரையாடி புதிய நீதிபதிகளை நியமிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.**

கொழும்பு,ஜூலை24

நாட்டில் தமிழ் பேசும் நீதிபதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தாருஸ்ஸலாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

75 தமிழ் பேசும் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இதனாலேயே, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களை விசாரிப்பதற்கான செயற்பாடுகள் தாமதமடைகின்றன.

நீதிபதிகளின் பற்றாக் குறை தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி புதிய நீதிபதிகளை நியமிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. புதிதாக சுமார் 90 நீதிபதிகளை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

புதிய நீதிபதிகளின் நியமனத்தின் ஊடாக, முன்னாள் விடுதலை புலிகள் இயக்க சந்தேகநபர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்த முடியும். இதேவேளை, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர்களை விசாரிப்பதற்காக வெலிக்கடை சிறைச்சாலையினுள் புதிதாக நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலிகள் சந்தேகநபர்களை விசாரிப்பதற்காக மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் நீதிமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.-என்றார். (ச)

# போலித் தங்க நகைகளை அடகு வைத்த மூவர் கைது

**போலியான தங்க நகைகளை வைத்து சுமார் 80 ஆயிரம் ரூபாவை பெற முயற்சித்த போது கைது செய்யப்பட்டனர்.**

கொழும்பு,ஜூலை24

வங்கியில் காணப்படுகின்ற உயர் தொழில்நுட்பத்தாலும் கண்டுபிடிக்க முடியாத போலியான தங்க நகைகளை அடகுவைத்து பெருமளவு பணத்தைப் பெற்று வந்த குழு ஒன்றில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தில், கைதான இந்தக் குழுவில் இரண்டு பெண்களும் ஒரு ஆணும் உள்ளடங்கியுள்ளனர். இந்தக்குழுவினர், நாடளாவிய ரீதியில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை போலியான தங்க நகைகளை வைத்து சுமார் 80 ஆயிரம் ரூபாவைப் பெற முயற்சித்தபோது கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண் கொழும்பு மருதானை பிரதேசத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றியமை உட்பட்ட 43 குற்றங்கள் தொடர்பில் வழக்குகளை எதிர்நோக்கி வருபவராவார்.

எனினும் அவர் நுவரெலியா பிரதேசத்தில் வசிப்பதாகக் கூறி போலியான அடையாள அட்டையை கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் நேற்றுமுன்தினம் ஹற்றன் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# பொலிஸ் பயிலுநர் பரிசோதகர் எழுத்து மூல பரீட்சை 28இல்

கொழும்பு,ஜூலை24

பொலிஸ் திணைக்களத்தின் சப் இன்ஸ்பெக்டர் பதவியில் பயிலுநர் இணைத்துக்கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பு, கொட்டாஞ்சேனை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்திலும், மருதானை அல்ஹிதியா முஸ்லிம் வித்தியாலயத்திலும் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தகுதிபெற்று இதுவரையில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவர்கள் 011-2 42 03 62, 011-2 43 56 07 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பரீட்சை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# பண்ணையில் தீப்பற்றியதால் 500 கோழிகள் கருகின

கொழும்பு, ஜூலை 24

மதுரங்குளி, வேலாசிறி கிராமத்தில் கோழிப்பண்ணை ஒன்றின் மீது தீ பற்றியதால் சுமார் 500 கோழிகள் எரிந்து கருகி நாசமாகியுள்ளன.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான குறித்த கோழிப்பண்ணையில் ஏற்பட்ட தீ காரணமாக கோழிகளுடன் சேர்ந்த பண்ணையில் வைக்கப்பட்டிருந்த உபகரணங்களும் எரிந்துள்ளன.

குறித்த கோழிப்பண்ணையில் 20 நாள்கள் வயதுடைய புறொயிலர் வகை கோழிகள் 500 இருந்தன என்றும், அவை அனைத்தும் தீக்கிரையாகிவிட்டன என்றும் கோழிப் பண்ணை யின் உரிமையாளர் தெரிவித்தார். தனிப்பட்ட தகராறு காரண மாகவே பண்ணைக்கு தீ வைக்கப்பட்டி ருக்கலாம் என்று தான் சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார். (ச)



மாத்தறை மாவட்ட விவசாய சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரண தெல்கல்ல பிரதேச விவசாய சங்கத்துக்கு உபகரணத்தை வழங்குகிறார்.

# தங்கச் சங்கிலியை பறித்த நபர் மக்களிடம் வசமாக மாட்டினார்

## நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜூலை24

மோட்டார் சைக்கிளில் சென்று யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு செல்ல முற்பட்ட முன்னாள் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரை மடக்கிப்பிடித்த மக்கள் சந்தேகநபரை நையப் புடைத்த சம்பவமொன்று கொழும்பு, கிரண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்தயுவதி நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு அலுவலகத்தில் கடமையை முடித்துவிட்டு தனது இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில், கிராண்ட்பாஸ் பள்ளிவாசலுக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர் யுவதியின் தங்கச்சங்கிலியைப் பறித்துள்ளார்.

சங்கிலியைப் பறித்த சந்தேகநபர் ஓட முற்பட்டபோது தொழுகையை முடித்து விட்டு வந்தவர்கள் சந்தேகநபரைத் துரத்திப் பிடித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரை மடக்கிப் பிடித்து நையப்புடைத்த கிராண்ட்பாஸ் பகுதி மக்கள் அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ஏ. ரங்கநாதன் தலைமையிலான குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சந்தேகநபர் பொலிஸ் சேவையிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

வேலணைப் பிரதேசசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம், வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நூலக சபாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16-41)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மங்கையர்க்கரசி தாமோதரம்பிள்ளை



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி தாமோதரம்பிள்ளை கடந்த 20.07.2012 வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு, தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சோமசுந்தரம், திருநாவுக்கரசு, ஆறுமுகம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.07.2012 ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்ணாகம், சுழிபுரம் (207617(6-7-8) கு. திருமூர்த்தி (மருமகன்)

## திருமதி தில்லைவனம் கணபதிப்பிள்ளை
(நயினாதீவு)



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைவனம் கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம்(22.07.2012) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (வெற்றிலைக் கடை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்தர்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மருதடியான், நாகமுத்து, சுந்தரம்பிள்ளை, பொன்னம்பலம், சின்னத்தம்பி, செல்லையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் தில்லைவனம், நாகலெட்சுமி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சுப்புலெட்சுமி, கமலநாயகி, இரத்தினசிங்கம் (சுவிஸ்), நித்தியகலா (இத்தாலி), கோமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், நவபுஸ்பராணி (நெதர்லாந்து), பத்மநாதன் (நாதன்ஸ் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), கதிர்காமலிங்கம் (நாகையன் லொட்ஜ், கொழும்பு), தேவிகா (சுவிஸ்), குணேந்திரன் (இத்தாலி), உதயகுமாரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.07.2012) புதன்கிழமை பி.ப. 4.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இல.70, நகரசபை வீதி, தெஹிவளை.
தகவல்: குடும்பத்தினர்.
(20763)(5-6-7)

## கனகர் தம்பிப்பிள்ளை
(அம்பன்னை)



யாழ்ப்பாணம், சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் தம்பிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் - தில்லையம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின், அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், விமலரூபன் (இத்தாலி), வசந்தரூபி (லண்டன்), சாந்தரூபி, அகிலரூபன் (சுவிஸ்), காலஞ்சென்ற திலகரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், பூபதி, காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் இராஜேஸ்வரி (இராசா), சந்திரசேகரன், தவமணிதேவி ஆகியோரின் சகோதரனும், தீபா (இத்தாலி), வரன் (லண்டன்), ரசி (டுபாய்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், விதுன், நவீன், ஓவியா, தமிழவன், கனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கீரிமலை வீதி, சித்தங்கேணி (20773)(6-7-8) குடும்பத்தினர்.

## வணிகப்போட்டி

தென்மராட்சி, ஜூலை 24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான வணிகப்போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களையும் தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப்புகளில் வணிகம், கணக்கீட்டுக் கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (3-9)

## ஆறுமாத காலத்தில் 200 பிள்ளைகள் பிறப்பு

நவாலி, ஜூலை 24

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் வரையுள்ள ஆறு மாத காலப் பகுதியில் இருநூறு பிள்ளைகள் பிறந்துள்ளன. இந்த நிலையில் இந்த வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இல்லாத குறை நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

இது சம்பந்தமாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் யாழ்.சுகாதாரப் பணிப்பாளருடன் பல தடவைகள் தெரியப்படுத்திய நிலையில் அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)


**காணி விற்பனைக்குண்டு**

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 5227107
(20658)(6-7-45)

**Room வாடகைக்கு உண்டு**

யாழ். நகரை அண்மித்த அன்னசத்திர லேன் பகுதியில் Room வாடகைக்கு உண்டு. படிக்கின்ற பெண் பிள்ளைகள் இருவர் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 9426746
(20760)(6-8-8)

**வேலையாள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் போன்சொப் ஒன்றுக்கு விற்பனையாளராகவும், காசாளராகவும் வேலை செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை. (யாழ்.நகரில் வசிப்பவர் மட்டும்)
வயதெல்லை 18 - 30
தொடர்பு:- 077 9955588
(20770) (3,6,7)

**மல்டிமீடியா கல்வி**

நேரடி ஸ்கொலர்ஷிப் கட்டணக்கழிவுடன் 65% வரை



கிராபிக்ஸ்
அனிமேஷன்
ஸ்பெஷல் எபெஃக்ஸ்
மல்டிமீடியா

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

India's No.1 Animation Academy
JOB ASSISTANCE 100% CREATIVITY

Audio & Film Editing
Web Design & Development
Web & Cartoon Animation
Graphics Design
2D & 3D Animation
Digital Pre-Press
Mastering Multimedia



யாழ்.நகர் 2C, ஸ்ரான்லி வீதி, 021-2225677
[illegible] 021-2270267
நெல்லியடி கொடிகாமம் வீதி 021-2262399


## நயினையில் ஆடிப்பூரம் பெருந்திரளில் பக்தர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆடிப்பூரத் திருவிழாவை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை ஐயாயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

பெருந்திரளான பக்தர்களின் வருகையை முன்னிட்டு அமுதசுரபி அன்னதான சபை விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு அடியார்களுக்கு அமுது வழங்கியது. அத்துடன் மக்களுக்கு சிரமமில்லாத வகையில் விசேட படகுச் சேவைகளை நயினாதீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை உரிமையாளர் சங்கம் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (7)


**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**

Loader & Tipper



பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும். மற்றும் டிப்பரும் வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776035633, 0779037541
0777279151


## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26.08.1937
மறைவு 24.07.2000

அமரர்
அம்பலவாணர் குலசேகரம் J.P.
([illegible])

என்றும் உங்கள் நினைவுடன்...
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி பிள்ளைகள்.

கைதடி, நுணாவில், சாவகச்சேரி. (6105)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவில் அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றும் தி.வைகுந்தவாசன் அவர்களின் அன்புத் தந்தை **நாகலிங்கம் தியாகராசா** அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.பிரதேச செயலக நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.**
(20687) (2,6,7)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய உழவு இயந்திர சாரதி கந்தசாமி மோகன சுந்தரம் அவர்களின் அன்புத்தாய்

அமரர் **சிவகாமி கந்தசாமி**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

கமநல சேவை நிலையம், கரவெட்டி (18697)(6-7-8)

பெரும்பாக உத்தியோகத்தர், நிலைய உத்தியோகத்தர்கள், உழவு இயந்திர சாரதிகள், குழு உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

# 23 இந்திய மீனவர்கள் கைது; கொதித்தெழுந்தது தமிழகம்

## இராமேஸ்வரத்தில் பணி நிறுத்தப்போராட்டம்

**கைது செய்யப்பட்ட 23 மீனவர்களையும், 5படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய–மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையால் மன்னார் கடற்பரப்பில் இராமேஸ்வர மீனவர்கள் 23 பேர் கைது செய்யப்பட்டனர். இதனால் பெரும் பதற்ற நிலை தமிழக மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. கைதான மீனவர்களை விடுதலை செய்யக்கோரி 10 ஆயிரம் மீனவர்கள் இராமேஸ்வரத்தில் காலவரையறையற்ற பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் தேவதாஸ் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 23 மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் கைது செய்து இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தநிலையில் கைது செய்யப்பட்ட 23 மீனவர்களையும், 5 படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் மீது போதைப் பொருள் கடத்தியதாக வழக்குப்பதிவு செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். அவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரியும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நேற்றுமுன்தினத்திலிருந்து காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பங்கேற்று உள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (3)

## சிரமதான நிகழ்வு

யாழ்பாணம், ஜூலை 24

புனிதர் சாள்ஸ் சாரண படைப்பிரிவின் சிரமதான நிகழ்வு யாழ். மரியன்னை பேராலய சுற்றாடலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். மரியன்னை பேராலய பங்கைச் சார்ந்த அருட்தந்தை வின்ஸ்கோ தலைமையில் சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் மா. ஞானபிரகாசத்தின் வழிகாட்டலிலும் குழுச் சாரண தலைவர் எஸ். சுபேதர் பெர்னாண்டோவின் நெறிப்படுத்தலிலும் இந்தச் சிரமதானம் நடைபெற்றது.

(3- 136)

## பண்ணிசைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 24

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்திய இலவச தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சை வடஇலங்கை சங்கீத சபையின் பாடவிதானத்துக்கு அமைவாக தரம்-1, தரம்-2, தரம் -3 மாணவர்களுக்கிடையே நடைபெறும். விண்ணப்பித்த மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (3)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் பௌர்ணமிவிழா

தென்மராட்சி, ஜூலை 24

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆடிப் பௌர்ணமி விழா தென்மராட்சி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு விழா ஆரம்பமாகவுள்ளது.

பதில் மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலமும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் அறிஞர் கௌரவிப்பும் இடம்பெறும்.

மாகாண கல்வி அமைச்சின் மாதமொரு பௌர்ணமி விழா, வலய ரீதியாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (3,9)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூலை 24

அல்வாய் வடக்கு பத்திரகாளி சமேத ஆதி வீரபத்திர சுவாமி கோயிலில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூசை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 7மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வரலட்சுமி நோன்புக்காப்புக் கட்டப்படும். (3-8)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய வரலட்சுமி பூசை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. மூலமூர்த்தி பூசையுடன் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று காலை 9 மணிக்கு நோன்புக் காப்பு வழங்கப்படும். (3)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 24

அனலைதீவு நயினாகுளம் குழாவடியுறை பூர்ணா புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-14)

* * *

கொழும்புத்துறை, ஜூலை 24

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 5மணிக்கு நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. நற்கருணைப் பெருவிழா 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கும் நடைபெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (3-135)

* * *

கந்தரோடை அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. தினமும் மு.ப 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவதோடு மாலை 5 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையும், பின்னர் வசந்த மண்டபப்பூசையும் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார்.(3)

* * *

பாணந்துறை ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (3-14)


## நன்றி தெரிவிக்கின்றோம்

தனங்களப்பு சுண்டிக்குளம் வியாள வளவு வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்துக்கு 2011 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களால் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்புச் செய்தமைக்காக எமது ஆலய பரிபாலன சபையினர் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள்.

- ஆலய பரிபாலன சபையினர், தனங்களப்பு. (20685) (2,6,7)

## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம் 18.04.1926

மறைவு 15.08.2010



## முருகேசு சண்முகம்

திதி- வளர்பிறை சஷ்டி

ஈராண்டு நினைவுநாள் இன்று உங்களுக்கு
நீராண்ட எம் இல்லும் நாமும்- சிறக்க
பேராவல் கொண்டீர் பெரும்பணிகள் செய்தீர்
வேராகி நின்று உயர்ந்து விழுதுக்கும் பலம் தந்தீர்
பாரோடு விண்ணாளும் பரமன் பாத நிழலடி இருந்து
சீரோடு சிறப்போடு நாம் வாழத் துணையாவீர் ஐயா வே

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (220745) (5-6-7) குடும்பத்தினர்

## பயிற்சி வகுப்பு

செப்புத் தகட்டில் புடைப்புச் சித்திரக் கலைப் பயிற்சி 25.07.2012 அன்று ஆரம்பமாகிறது.

மேலதிக விவரங்களுக்கு: S. Ratnagopal
958/36, K.K.S. வீதி, நப்பிரமர் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(20752)(6-8-8) T.P : 077 5115553

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 4 அறைகள் கொண்ட சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குண்டு.

முற்பணம் 2 ½ லட்சம் வாடகை, 7000 ரூபா

தொடர்பு : 071 3436007

(20760)(6-8-8) பார்வையிடும் நேரம் - மு.ப. 9 - 12

## விற்பனைக்கு

NP WA xxxx GLAMOUR-HERO HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

(20762)(5-6-7) தொடர்பு: 077 807 7362

## ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் தேவை

எமது குளிர்பான நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் தேவையாகவுள்ளது.

உடன் இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 860 5355

(சி/1653)(5-6-7)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் நுணாவில் சந்திக்குமிடையில் கந்தன் இராஜ்கோன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (561272050V) சுவிஸ் நாட்டின் அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே 0779683552, கந்தன் இராஜ்கோன், [illegible]

சன்மானம் வழங்கப்படும்.

(18135) (5,6,7)

## மண்டைதீவு நீர் விநியோகத் திட்டத்திற்காக சேற்றுத்தரைப்பகுதியில் நீர்க்குழாய்களை பதிப்பதற்கு CHAIN EXCAVATOR மூலம் கிடங்கு வெட்டுதல் மீண்டும் வெட்டப்பட்ட இடங்களை நிரவுவதற்குமாக கேள்வி கோரப்படுகின்றது.

கேள்வி இல: UNICEF/RM/JAF/MAN/2012/069

01. மண்டைதீவு நீர்விநியோகத் திட்டத்திற்காக சேற்றுத் தரைப்பகுதியில் 90 மில்லிமீற்றர் அளவுடைய PVC/PE (1000 கனம்) நீர்க்குழாய்களை பதிப்பதற்கு Chain Excavator இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்துவதற்கு இத்தால் கேள்வி கோரப்படுகின்றது.

02. கேள்விப் பத்திரங்களை கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

03. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம், கேள்வி முடிவு நேரம் மற்றும் கேள்வி முடிவு திகதி ஆகியன குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித் தனியான தபாலுறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். கேள்விகள் பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். அல்லது கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 14.08.2012, 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றையதினமே உடனடியாக திறக்கப்படும்.

04. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து ஒரு (01) மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

05. வேலைகள் ஏழு (07) நாள்களுக்குள் தொடங்கப்படல் வேண்டும்

06. இக் கேள்வி அறிவித்தல், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட் டங்களுக்கும் உட்பட்டதாகும்.

07. கேள்வி கோரல் தொகை ரூபா. 100,000.00 தொடக்கம் ரூபா. 500,000.00 வரைக்கும் இடையில் இருந்தால் கேள்வி கோரல் தொகையில் மூன்று (03) வீதம் கேள்வி பிணைப்பணமாக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து பெற்றுத் தரப்படவேண்டும்.

08. கேள்வி பிணைப்பணம் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். இல்லையேல் அக் கேள்வி நிராகரிக்கப்படும்.

09. ஒவ்வொரு அலகு விலையிலும் போக்குவரத்துக் கூலி உள்ளடக்கப்படல் வேண்டும்.

10. Chain Excavatorஇயந்திரத்தை ஏற்றி இறக்குவதற்கான போக்குவரத்துச் செலவும் கேள்வியுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

11. கேள்வி மனுதாரர்கள் கேள்வி கோரமுன் குறிப்பிட்ட பிரதேசத்தை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சீ/1642)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க தயார்

## இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனம்

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக அரசும் சுகாதார அமைச்சும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளதாக இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் வாழ்நாள் சாதனையாளர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அதன் தலைவர் விஷ் கோவிந்தசாமி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த சம்மேளத்தின் தலைவர், மருந்துக் .கொள்



கையை அமுல்படுத்துமாறும், மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்துமாறும் பல்வேறு தரப்பினரால் சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. அமைச்சரும் அதிக அழுத்தங்களை எதிர் நோக்குகின்றார்.


நாட்டின் சுகாதார துறையை மேம்பாட்டின் வழியில் கொண்டு செல்வதற்கு முன்வைக்கப்படும் இத்திட்டங்களை நாமும் வரவேற்கின்றோம். எனினும் மருந்துக்கொள்கையை அமுல்படுத்து முன்னர் எம்மிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெறுமாறு நாம் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் இதில் சில குறைபாடுகள் உள்ளதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது ஏனைய பொருள்களுக்கு விலையை நிர்ணயிப்பதைபோன்று இலகுவான காரியமல்ல. ஏனைய பொருள்களில் சில ரகங்களே சந்தையில் உள்ளன. ஆனால் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தரவுகளுக்கு அமைய இலங்கையில் 5000 இற்கும் அதிகமான மருந்து ரகங்கள் காணப்படுகின்றன.

மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு, மூலப்பொருள்களின் தட்டுப்பாடு, பொதியிடல், உள்ளிட்ட ஏனைய பொருள்களுக்கான செலவுகள் காரணமாக மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன. இதுதவிர ரூபாவின் வீழ்ச்சியும் பிரதான காரணமாகக் குறிப்பிடலாம்.

(த)

## சிலோன் மோட்டார் கண்காட்சி 2012



இலங்கை மோட்டார் வாகன விற்பனையாளர்களின் சங்கம் (CMTA) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிலோன் மோட்டார் கண்காட்சி 2012 நிகழ்வின் பிரதான உராய்வு நீக்கி எண்ணெய் அனுசரணையை மொபில் வழங்கியிருந்தது. அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கையின் மிகப்பெரிய மோட்டார் வாகன கண்காட்சியான 'சிலோன் மோட்டார் கண்காட்சி 2012' இனை இலங்கை மோட்டார் வாகன விற்பனையாளர் சங்கம், கிளாசிக் மோட்டார் வாகன சங்கம் ஆகியன இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்கின்றன. இந்நிகழ்வின் இவ்வருடத்துக்கான முழுமையான சேவைத் தீர்வுகளை வழங்கும் நிறுவனமாக மெக்லாரன்ஸ் லுப்ரிகன்ட்ஸ் லிமிடெட் நிறுவனம் பங்குபற்றியிருந்தத்.

'சிலோன் மோட்டார் கண்காட்சி 2012' நிகழ்வின் பிரதான உராய்வு நீக்கி எண்ணெய் வழங்குநராக மெக்சோ ஒடோமடிவ் நிறுவனம், தன்னகத்தே கொண்டுள்ள கார் பந்தய வாகனங்களை இந்நிகழ்வில் காட்சிப்படுத்தியிருந்ததுடன், சிறிய ரக பந்தயக் கார்களை செலுத்தும் நேரடி அனுபவத்தை பார்வையாளர்களுக்கு வழங்கியிருந்தமை விசேட அம்சமாக அமைந்திருந்தது.


## சிறந்த வியாபார பொருள்கள் காட்சிப்படுத்தும் கண்காட்சி

இலங்கையின் பாரிய கட்டுமான துறையானது தம் புதிய படைப்புகளை காட்சிப்படுத்தும் பாரிய கண்காட்சியான 'Construct 2012' இனை ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கண்காட்சியானது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்தக் கண்காட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கட்டுமானத் துறையின் புதிய தொழில்நுட்பங்களைக்கான பார்வையாளர்கள், ஆர்வலர்கள், மற்றும் துறை சார்ந்த பங்காளர்கள் பலர் வருகை தரவுள்ளனர். நீண்ட காலமாக தம் ஆதரவினை வழங்கி வரும் UTE இவ்வாண்டு 5ஆவது தடவையாகவும் ஆதரவை வழங்க முன்வந்துள்ளது.

இக்கண்காட்சியானது தெற்காசிய பிராந்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இலங்கை கட்டுமான சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வரலாற்றில் அதியுயர் புரள்வு பதிவு செய்தது ஆர்ப்பிக்கோ

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் தேசிய உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வு 2012 அண்மையில் கோலாகலமாக இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது, சிறப்பாக செயலாற்றியிருந்த றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் விநியோகத்தர்களுக்கும் விற்பனை குழுவினருக்கும் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்நிகழ்வை றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் தலைவர், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான, வைத்திய கலாநிதி சேன யத்தெஹிகே தலைமைத்துவமேற்று நடத்தியிருந்தார். 'Reach beyond boundaries' என பெயரிடப்பட்டிருந்த இந்த வருடாந்த விநியோகத்தர் ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வின் விஷேட அம்சம் யாதெனில் கடந்த நிதியாண்டில் றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் தேசிய உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின்




தேறிய வருமானம், இதுவரை காலத்திலும் ஈட்டப்பட்டிருந்த அதியுயர்பெறு மதியை எய்தியிருந்தமையாகும்.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் தேசிய உற்பத்திகள் மற்றும் விநியோக பிரிவுக்கு உட்பட்ட மீள் விநியோக நடவடிக்கைகள், வியாபார விரிவாக்கல், உற்பத்திகள் மற்றும் தள பாட விற்பனை போன்ற பிரிவுகளில் கடந்த வருடத்தில் சிறப்பாக தமது செயற்பாடுகளை வெளிக்காட்டியிருந்த நாடு முழுவதும் பரந்து காணப்படும் விநியோக உத்தியோகத்தர்கள் 100இக்கும் அதிகமானவர்களுக்கு பணப்பரிசுகள், சான்றிதழ்கள், வெற்றிக் கேடயங்கள் மற்றும்வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் தங்க விருதுகளை பெற்றுக் கொண்டவர்களில், சிறந்த வியாபார விரிவாக்கல் முகாமையாளருக்கான விருதை துஷார ஏகொடகே, சிறந்த வியாபார விரிவாக்கல் முகாமையாளருக்கான விருதை சதாத் மொஹமட், சிறந்த பிராந்திய விநியோக முகாமையாளருக்கான விருதை பிரதீப் ஜயவீர, சிறந்த பிராந்திய விநியோக முகாமையாளருக்கான விருதை நிலந்த தயநாத், சிறந்த பிராந்திய விநியோக முகாமையாளருக்கான விருதை சமீர பெரேரா, சிறந்த உற்பத்தி முகாமையாளருக்கான விருதை ஜயநாத் அல்விஸ், சிறந்த விநியோகத்தருக்கான விருதை வேயங்கொட தினேத் லங்கா, சிறந்த விநியோகத்தருக்கான விருதை கட்டுநேரிய ஏஎஸ்எல் டிஸ்ரிபியுட்டர்ஸ், சிறந்த விநியோகத்தருக்கான விருதை கடான சிலோன் மரயின், சிறந்த விநியோகத்தருக்கான விருதை அநுராதபுரம் சேஃவ் டிஸ்ரிபியுட்டர்ஸ், சிறந்த விநியோகத்தருக்கான விருதை அநுராதபுரம் சேஃவ் டிஸ்ரிபியுட்டர்ஸ், சிறந்த விநியோகத்தருக்கான விருதை நிகவரெடிய ஜோர்ஜ் விஜேசிங்க டியுரபல் டிஸ்ரிபியுட்டர்ஸ் பிரைவேற் லிமிடெட், சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது கண்டி வஜிர மாரசிங்க, சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது அநுராதபுரம் மொஹமட் ரிஸ்மி, சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது நிகவரடிய சம்பத் ஜயவர்த்தன, சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது வேயங்கொட சமீர டி சில்வா, சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது கட்டுநேரிய லஹிரு சஞ்சீவ மற்றும் சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது பிரசாத் நிரோசன ஆகியோர் அடங்குவர்.

(த)



காகில்ஸ் பூட் சிற்றியின் சுன்னாகம் கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்து வைத்தார். (த)

# புதிய செயற்திறனுடன் முன்னேறும் டொஷிபா

புதிய மற்றும் பிரதான சற்றலைற் தொடர்களில் அதிக செயற்திறன், செல்லிடமெங்கும் கொண்டு செல்லும் .வசதி மற்றும் தனிப்பாணி ஆகியவற்றை டொஷிபா அறிமுகப்படுத்துகிறது. புதிய சற்றலைற் M800 சற்றலைற் C 800, தொடர்கள் சிறந்த செயற்பாங்கு, அனுபவம், மற்றும் விரும்பிய இடங்களுக்கு கொண்டு செல்தல் ஆகிய வசதிகளை கொண்டுள்ளது.

டொஷிபா சிங்கப்பூர் பிரைவேற் லிமிடட், இலங்கையில் உள்ள தமது மொபைல் கொம்பியூட்டிங் பங்காளர்களான ஜோன் கீல்ஸ் ஒஃபிஸ் ஓட்டோமேஷன் ஊடாக, மிகச்சிறந்த அம்சங்களை கொண்டுள்ளதும், அனைவராலும் வாங்கக்கூடியதுமான அதிநவீன M800 சற்றலைற் C 800, சற்றலைற் C 800 தொடர்



நோட்புக் கணினிகளை அறிமுகம் செய்தது. நாளாந்த பாவனைக்கான இந்த புதிய நோட்புக் கணினிகள் சிறந்த பாணியினையும் பல்வகைத் திறன்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், பரந்தளவு கட்டமைப்பு, காட்சித்திரை அளவுகள் மற்றும் நிறங்களைக் கொண்டுள்ளது.

டொஷிபா, தனது வாடிக்கையாளர்களுக்கு புத்தம்புதுத் தொழினுட்பம், சிறந்த செயற்திறன் மற்றும் தமது ஒவ்வொரு தலை முறை உற்பத்தியிலும் மேம்பட்ட வடிவமைப்பு ஆகியவற்றை வழங்குவதற்காக பாடுபடுகின்றது.

புதிய சற்றலைற் 800 தொடர் நோட்புக் கணினியிலும் குறித்த இந்த அம்சங்கள் பிரதிபலிக்கின்றன" என டொஷிபா சிங்கப்பூர் பிரைவேற் லிமிடட், டிஜிடல் புரொடக்ஸ் அன்ட் சேர்விசஸ் குரூப் உற்பத்தி சந்தைப்படுத்தல் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. வொங் வாய் மெங் அவர்கள் குறிப்பிட்டதுடன். முந்தைய தலைமுறையிலும் பார்க்க மெல்லியதும், மிகக் குறைந்த எடை கொண்டதுமான இந்த புதிய நோட்புக் கணினிகள் அத்தியாவசியமான சிறப்பம்சங்களை எந்தவித சமரசமும் இன்றி வழங்கும்" என்றார்.

சற்றலைற் M800 தொடர்: சிறந்த வடிவமைப்புடன் கூடிய சக்தி மற்றும் எடுத்துச் செல்லத்தக்க பாங்கு சமமாக இணைந்த சிறப்பம்சங்களுடன்திடமான செயற்திறன், செயற்பாடு மற்றும் நவீன பாங்கு ஆகியவற்றை வழங்கும் சற்றலைற் M800 தொடர், சிறந்த சக்தி மற்றும் விரும்பிய இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய பாங்கு, சகாய விலை இணைந்த நவ நாகரிக மடிக்கணினி ஒன்றை வேண்டுவோருக்கு ஏற்ற மிகச் சிறந்த தெரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்மடு கசிப்புக் கோட்டை பிடிபட்டது பொலிஸாரிடம்

வவுனியா கல்மடுப் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடமொன்றை கண்டறிந்த பொலிஸார், அங்கிருந்த கசிப்பு உற்பத்திக்குரிய பொருள்களை மீட்டதுடன், இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் உபகரணங்களையும் இரண்டு பரல் கோடா என்பவற்றையும் வைத்திருந்த இருவரை கையுமெய்யுமாகப் பிடித்தனர்.

குறித்த இடமே கல்மடு பகுதியில் நடைபெற்று வந்த சட்டவிரோத கசிப்பு விற்பனை வலையமைப்பின் மையப் புள்ளி என்று தெரிவிக்கப்படுகிறது. கல்மடு கசிப்புக் கோட்டை பொலிஸாரிடம் பிடிபட்டுவிட்டதால் அந்தப் பகுதியில் கொடிகட்டிப் பறந்த கசிப்பு விற்பனை கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று பொதுமக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

அண்மைக் காலமாக வன்னியில் பல பகுதிகளில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு தண்டப் பணம் அறவிடப்பட்டும் கூட அவர்கள் மீளவும் அதே தொழிலில் இறங்குவதும் வாடிக்கையாகி விட்டது. எனவே சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது பொலிஸாரும் நீதித்துறையினரும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே அதனை முற்றாக கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ங-க-86)

# கிழக்கு மாகாண சபை கலைப்புக்கு எதிரான மனு

## நாளை 3 நீதியரசர்கள் ஆயம் முன் பரிசீலனை

கொழும்பு, ஜூலை 24

கிழக்கு மாகாண சபையை முற்கூட்டியே கலைத்த நடவடிக்கைக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்டுள்ளமனுவை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் நாளை புதன் கிழமை விசேட விடயமாக எடுத்துக் கொண்டு விசாரிக்க விருக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் சிசிர டீ ஆப்ரூ, நீதியரசர்கள் ஏ.டபிள்யு. ஏ.சலாம், அனில் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கலைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினரான துரைரத்தினம் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண சபையை அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் கலைக்கக்கூடாது என்று கிழக்கு மாகாண சபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக் கையில், அடுத்த மூன்று மாதத்துக்குள் சபையை முற்கூட்டியே கலைப்பதற்கு முதலமைச்சர் சிபாரிசு செய்தமை சட்டவிரோதம் எனத் தெரிவித்து மனுதாரர் இந்த முறையீட்டைச் செய்திருக்கின்றார்.

எனவே இந்த சபை கலைப்பு நடவடிக்கைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை உடனடியாக விதிக்குமாறும் - சபையை முற்கூட்டியே கலைத்தமை சட்டமுறையற்றது எனப் பிரகடனப்படுத்துமாறும் - மனுதாரர் தமது மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனு கடந்த 6 ஆம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு நீதியரசர்களைக் கொண்ட மன்றில் பரிசிலனைக்கு எடுக்கப்பட்ட போது இந்த விடயம் முக்கியமான ஒன்று எனக் கருதி இதனை மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன் விசாரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஜூலை 20 ஆம் திகதி மூன்று நீதியரசர் ஆயத்தின் முன் மனுவைப் பரிசீலிக்கவும் தீர்மானிக்கப் பட்டது.

ஆனால் ஜூலை 20 ஆம் திகதி திடீரென நீதிமன்ற நடவடிக்கைகள் நிறுத்தப் படாமையால் அன்றைய தினம் இந்த மனு நீதிமன்றத்தில் எடுத்துகொள்ளப்படவில்லை.

மீண்டும் நேற்று மனு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் சிசிர டீஆப்ரூ முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், புதனன்று மூன்று நீதியரசர் ஆயம் முன்னிலையில் அதனைப் பரிசீலிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கைப்படி மேற்படி கிழக்கு மாகாண சபையை முற்கூட்டியே கலைத்த நடவடிக்கைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு எதுவும் வழங்குவதா என்பது நாளை நீதிமன்றம் பரசீலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தணி கனகஈஸ்வரன், சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சட்டத்தரணிகள் நிரான் அங்கிட்டல் பவானி பொன்சேகா ஆகியோர் ஆஜரானார்கள்.

## நண்பர்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள்

நெடுங்கேணி,ஜூலை 24

நோர்வேயிலுள்ள 'இலங்கை நண்பர்கள் அமைப்பினர்' முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இருட்டுமடு தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி இந்த அமைப்பின் தலைவரான எஸ்.மகேந்திரன் தலைமையிலான குழுவினர் பாடசாலை அதிபரான ச.மகேந்திரராஜாவைச் சந்தித்து பாடசாலையின் நிலவரம் தொடர்பாக கேட்டறிந்தனர்.

பின்னர் 130 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இந்தக் குழுவினர் வழங்கினர்.

இங்கு உரையாற்றிய பாடசாலை அதிபர் இந்தப் பாடசாலையில் பெற்றோரை இழந்த மாணவர்கள் பலர் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளையும் வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

மேலும் அன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் இந்தக் குழுவினர் ஒட்டுசுட்டான் மன்னகண்டல் அ.த.க.பாடசாலைக்கும் சென்று மாணவர்களின் குறைபாடுகளைக் கண்டறிந்ததுடன் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினர். இந்தப் பாடசாலை ஒரு பின்தங்கிய கிராமத்தில் இருப்பதனால் இதற்கு மேன்மேலும் உதவிகள் வழங்குவதாக அந்தக் குழுவினரால் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# தென்பகுதி போன்று எமக்கும் வேண்டும் நிரந்தர நியமனம்

## வவுனியா பட்டதாரிகள் சங்கத்தினர் வேண்டுகோள்

வவுனியா, ஜூலை 24

தற்போது வழங்கப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர் நியமனம் தொடர்பாக சந்தேக நிலை எழுந்துள்ளது. எனவே இந்தச் சந்தேகத்தை தீர்க்கும் வகையில், தென்பகுதியிலுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டமை போன்று தமக்கும் வழங்கப்பட வேண்டுமென வவுனியா மாவட்டப் பட்டதாரிகள் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக குறித்த சங்கத்தின் தலைவர் எம். ஆனந்தராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய பட்டதாரிகள் பயிலுநர் நியமனம் தொடர்பாகச் சகல பட்டதாரிகள் மத்தியிலும் அச்சம், சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த நியமனம் நிரந்தர நியமனமாக எதிர் காலத்தில் வழங்கப்படுமா என்ற ஐயமும் அதற்கான காரணமாகும். ஏனெனில் கொடுக்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் ஆறு மாத காலப் பயிற்சி முடிந்த பின்பு நிரந்தர நியமனம் பெறத் தகுதியுடையவரென்றோ அல்லது குறிப்பிட்ட பரீட்சை மூலமாகத் தெரிவு செய்யப்படுவரென்றோ அல்லது எத்துறை சார்ந்த பட்டதாரிகள் எந்தெந்த துறைகளில் பயிற்சியளிக்கப்படுவார்கள் அல்லது நியமிக்கப் படுவார்கள் என்பதோ குறிப்பிட்டுச்சொல்லப்படவில்லை.

எனவே எமது தமிழ்ப் பகுதி மாவட்டங்களிலும் இந்த அரச நியமனங்களை நிரந்தரமானதாக வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கம் விநயமாக கேட்டுக்கொள்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(க-400)

# அமைச்சரின் காடைத்தனத்துக்கு அனுமதி பாதயாத்திரைக்கு மட்டும் தடை விதிப்பா?

## ஜே.வி.பியின் சந்திரசேகரன் கேள்வி

வவுனியா, ஜூலை 24

நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அரசு தேசிய ஒற்றுமைக்கான பாதயாத்திரைக்கு தடைவிதிப்பதா?

-இவ்வாறு கேள்வி எழுப்பினர் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன்.

மக்கள் விடுதலை முன்னணியின் சோசலிஷ இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்த தேசிய ஒற்றுமைக்கான பாதயாத்திரை நேற்று வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த பாதயாத்திரைக்கு ஏற்கனவே வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது. இருந்தபோதும் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் நீதிமன்றுக்குச் சென்று தமது நிலைப்பாட்டைத் தெரிவித்ததை அடுத்து பாதயாத்திரையை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

சோஷலிஷ இளைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிமல் ரத்னாயக்கா தலைமையில் இடம்பெற்ற இப் பாத யாத்திரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று போர் நிறைவடைந்து மூன்று வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இனவாத அடிப்படையில் மக்களை வதைக்கும் செயலை அரசு முன்னெடுத்து வருகின்றது.

மூவின மக்களையும் பிரித்தாளும் கைங்கரியத்தை அரசு தற்போது முன்னெடுத்து வருகின்றது. மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி நாம் அனைவரும் ஒன்றுபட்டு எமக்குரிய அரசியல் உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனை வலியுறுத்தும் முகமாகவே இந்தத் தேசிய பாதயாத்திரையை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

தேசிய ஒற்றுமைக்கான பாதயாத்திரைக்கு நீதிமன்றத்தின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கை எடுத்த பொலிஸாரும், அரசும், நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து காடைத்தனம் புரிந்த அமைச்சரை சுதந்திரமாக நடமாட அனுமதித்துள்ளதுடன் அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எம்மீது எத்தகைய அடக்கு முறைகள் வந்தாலும் தடைகள் போடப்பட்டாலும் எமது இந்த தேசிய ஒற்றுமைக்கான பாதயாத்திரை தொடரும் என்றார்.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமான பாத யாத்திரை வவுனியா ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகி நகரைச் சென்றடைந்து வவுனியா நகர சபை மைதானத்தில் முடிவடைந்தது.

பாத யாத்திரையில் கலந்து கொண்டோர் ''எமது நிலம் எமக்கு வேண்டும்'', ''எமக்குரிய சம்பளத்தை நீதியாக வழங்கு'' போன்ற கோரிக்கைகளை எழுப்பியவண்ணம் சென்றனர்.

இதேவேளை இப்பாத யாத்திரை ஆரம்பமான இடத்தில் நூற்றுக்கணக்கான கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங-க-400)

## கிளிநொச்சி பாடசாலை மாணவருக்கு உளவள நிபுணர்களின் சேவைகள்

அக்கராயன்,ஜூலை 24

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உளவள நிபுணர்களின் சேவைகள் இன்னமும் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போர்,இடப்பெயர்வு, நலன்புரி நிலைய வாழ்வு, மீள்குடியமர்வின் பின்னரான பிரச்சினைகள், உறவினர்களை இழந்ததில் ஏற்பட்ட மனத் தாக்கம் என்பன இந்த மாணவர்களை வெகுவாகப் பாதித்தன.

இவற்றின் தாக்கங்கள் இவர்களின் மனங்களில் நீங்காத வடுக்களாக இன்னமும் நீடிக்கின்றன.

இதனால் இவர்கள் தமது கல்வியில் அக்கறையின்றிக் காணப்படுகின்றனர். எப்போதும் இவர்கள் ஒருவகையான சோர்வுடன் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்ந்து நீடிக்குமாயின் இந்த மாணவர்களின் எதிர்காலமே பாழாகி விடுமென கல்வியாளர்கள் கூறுகின்றனர். எனவே உளவளத்துறைசார் நிபுணர்களின் சேவைகள் இவர்களுக்கு இன்றியமையாததாகும்.

மேலும் பாடசாலை ஆசிரியர்களுக்கு உளவளப் பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக அவர்கள் மாணவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் துரைராசா



பூநகரி மறவகுறிஞ்சியைப் பிறப்பிடமாகவும், 55 ராணி வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் , புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் துரைராசா நேற்று (23.07.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி துரைராசாவின் அன்புக் கணவரும், நந்தகுமார், தனபாலசிங்கம் (குமரன் மில், குருநகர்), தர்மராசா (வட்டக்கச்சி),ராஜ்குமார் (வட்டக்கச்சி), சசிகுமார் (நல்லூர் பிரதேச சபை), சசிகலா (ஆசிரியை, கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயம்), ரஜிகலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாதேவி, திலகராணி, கோகிலராணி (ஆசிரியை வட்டக்கச்சி), தனுஜா, நீதிராஜா, சுனேத்திரா (யாழ். மாநகரசபை) ஆகியோரின் மாமனும், சாளினி, தர்சன், சுஜீவன், பிரியா, மயூரன், சோபியா, அனோஜா, மதுரி, நிருஜா, கோபிசங்கர், நிதுஷா, ஷாருஜா, சயனிகா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனும், சகிஷாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2012) செவ்வாய்க் கிழமை புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்

(சி/1665)(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண நீச்சல் போட்டியின் போது...






வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் முதன் முறையாக நடத்தப்பட்ட மாவட்ட மட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான நீச்சல் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம்பெற்ற போது கமராவுக்குள் சிக்கிய பதிவுகள். (23)

# புயலாகினர் விதுபாலா, கிரி; சரிந்தது கிறாஸ்கொப்பர்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான பிரிவு III க்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி 103 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 45.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.



விதுபாலா



கிரி

இதில் ஆர்.சங்கர் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும், தசரிதன் 19 ஓட்டங்களையும், செல்ரன் 22 ஓட்டங்களையும், விதுசன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணிசார்பாக கஜதீபன் மூன்று இலக்குகளையும் பார்த்தீபன், அஜித், கபிலன், கஜநாதன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

208 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணியினர் பல்கலைக் கழக அணியின் விதுபாலா மற்றும் கிரி ஆகிய இரட்டை புயல்களின் பந்து வீச்சில் நிலைகுலைந்து 34.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் அஜித் 46 ஓட்டங்களையும், காந்தீலன், கஜதீபன் ஆகிய இருவரும் தலா 10 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களான கிரி 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், விதுபாலா 9.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும் வீழ்த்தினர்.

( ங-23)

# பல்கலைக்கழக கரம் இறுதிப்போட்டி நாளை



காமாட்சி வி.க.



சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் அணியும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களின் ஆண்கள் அணிகளுக்கான கரம் சுற்றுப்போட்டி யின் இறுதிப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் காமாட்சி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. இறுதிப்போட்டியின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பௌதிகவியற்துறைத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக கரம் அணியின் முன்னாள் வீரருமான பேராசிரியர் ப. ரவி ராஜன் கலந்துகொள்வார்.

குறித்த கரம் சுற்றுப்போட்டி யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் பழைய மாணவி திருமதி முரளிதரன் பொறுப்பாசிரியரின் அனுசரணையுடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

(23-86)

## அரச சேவைகள் விளையாட்டு அமைப்பின் மென்பந்து கிரிக்கெட்டில் 31 அணிகள்

வவுனியா, ஜூலை 24

வவுனியா மாவட்ட அரச சேவைகள் விளையாட்டு அமைப்பு நடத்தும் வடமாகாண ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அரச திணைக்களங்கள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த 31 அணிகள் பங்குபற்றவுள்ளன. (ங-400)

# காட்டா, குமித்தே போட்டிகள் வெற்றிபெற்றோர்கள் விவரம்

வலி. வடக்கு, ஜூலை 24

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**காட்டா**

*1 ஆம் இடம்- ரி.பிரபாகரன் (முல்லைத்தீவு), 2ஆம் இடம்- எஸ்.சுபராஜ் (கிளிநொச்சி)*

*3 ஆம் இடம் - கே.நாகேந்திரன் (முல்லைத்தீவு), கே.லிங்கேஸ்வரன் (கிளிநொச்சி)*

**50 கிலோ குமித்தே**

*1 ஆம் இடம்- ப.பிரதாப் (கிளிநொச்சி), 2 ஆம் இடம்- ஜே.ஆதவன் (முல்லைத்தீவு), 3 ஆம் இடம் - ரி.றொக்ஷன் (முல்லைத்தீவு ), யு.தயாநிதி (யாழ்ப்பாணம்)*

**55கிலோ குமித்தே**

*1 ஆம் இடம் -ரி.வேணில்தாஸ் (முல்லைத்தீவு), 2 ஆம் இடம் - யு.உதயசங்கர் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம்- எம்.ஜெகன் (முல்லைத்தீவு), ரி.யசோதரன் (கிளிநொச்சி)*

**60 கிலோ குமித்தே**

*1ஆம் இடம்- எஸ்.சிவராசா (யாழ்ப்பாணம்), 2ஆம் இடம்- என்.சாருஜன் (கிளிநொச்சி), 3ஆம் இடம்- எஸ்.ஜே.சியான்கெனடி (கிளிநொச்சி), எ.றொக்ஷன் (முல்லைத்தீவு)*

**67 கிலோ குமித்தே**

*1 ஆம் இடம்- ரி.றொபின்சன் (முல்லைத்தீவு), 2ஆம் இடம்- எம்.வசந்தகேசன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம்- எஸ்.பிரசாந் (கிளிநொச்சி), ஜே.அனுதீபன் (கிளிநொச்சி)*

**75 கிலோ குமித்தே**

*1 ஆம் இடம்- ப.விஜயகணேஷ் (யாழ்ப்பாணம்), 2ஆம் இடம்- எஸ்.ஜெயசிலன் (முல்லைத்தீவு ) 3ஆம் இடம் - ப.விஜயேந்திரன் (யாழ்ப்பாணம்), ரி.டேவிற் (கிளிநொச்சி)*

**84 கிலோ குமித்தே**

*1 ஆம் இடம் -கே.நாகேந்திரன் (முல்லைத்தீவு), 2ஆம் இடம்- எ.எட்மன் றீகன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் - ரி.சாந்தராஜ் (யாழ்ப்பாணம்), ரி.தர்சிகன் (முல்லைத்தீவு)*

**84 கிலோவுக்கு மேல் குமித்தே**

*1 ஆம் இடம் -ரி.பிரபாகரன் (முல்லைத்தீவு ), 2ஆம் இடம் - ப.ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம்- எ.ஆர். சைலேந்திரகுமார் (யாழ்ப்பாணம்)* (ங-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மோசமான பந்துவீச்சு**
தென்னாபிரிக்காவின் ஸ்மித் - அம்லா ஜோடி 2 ஆவது இலக்குக்கு 259 ஓட்டங்கள் சேர்த்தது. அதன்பின் இணைந்த அம்லா - கலிஸ் ஜோடி 3 ஆவது இலக்குக்கு 360 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தது. இதன் மூலம் டெஸ்ட் வரலாற்றில், தென்னாபிரிக்கா சார்பில் ஒரு இன்னிங்ஸில் இரண்டு ஜோடிகளை 250 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்க்க வைத்து, மோசமான பந்துவீச்சை இங்கிலாந்து வெளிப்படுத்தியது.

# அம்லா முச்சதம்
## முனகுகிறது இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில், ஹசிம் அம்லா 311, கலிஸ் 182 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுக்க, தென்னாபிரிக்க அணி வலுவான இலக்கை நிர்ணயித்தது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட், லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 385 ஓட்டங்கள் எடுத்தது. இதில் குக் 115 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பின்னர் முதல் இன்னிங்சைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 இலக்குகளுக்கு 403 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அம்லா (183), கலிஸ் (82) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்சைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணியின் அம்லா - கலிஸ் ஜோடி, இங்கிலாந்து பந்துவீச்சை பதம் பார்த்தது. அபாரமாக ஆடிய அம்லா, டெஸ்ட் அரங்கில் தனது இரண்டாவது இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த கலிஸ், தன்பங்கிற்கு சதம் அடித்தார்.

தொடர்ந்து அசத்தலாக ஆடிய அம்லா, டெஸ்ட் அரங்கில் தனது முதலாவது முச்சதத்தைப் பதிவு செய்தார். தென்னாபிரிக்க அணி தேநீர் இடைவேளையின் போது முதல் இன்னிங்சில் 2 இலக்குகளுக்கு 637 ஓட்டங்கள் எடுத்து, 252 ஓட்டங்கள் முன்னிலையுடன் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அம்லா (311), கலிஸ் (182) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து சார்பில் அண்டர்சன், பிரஸ்னன் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அம்லா, டெஸ்ட் அரங்கில் முச்சதம் அடித்த முதலாவது தென்னாபிரிக்க வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார். முன்னதாக 2010 இல் அபுதாபியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில், தென்னாபிரிக்காவின் டீ வில்லியர்ஸ் அதிகபட்சமாக 278 ஓட்டங்கள் எடுத்தார்.

### மோசமான பந்துவீச்சு

தென்னாபிரிக்காவின் ஸ்மித் - அம்லா ஜோடி 2 ஆவது இலக்குக்கு 259 ஓட்டங்கள் சேர்த்தது. அதன்பின் இணைந்த அம்லா - கலிஸ் ஜோடி 3 ஆவது இலக்குக்கு 360 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தது. இதன் மூலம் டெஸ்ட் வரலாற்றில், தென்னாபிரிக்கா சார்பில் ஒரு இன்னிங்சில் இரண்டு ஜோடிகளை 250 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்க்க வைத்து, மோசமான பந்துவீச்சை இங்கிலாந்து வெளிப்படுத்தியது.

### இரண்டாவது இடம்

தென்னாபிரிக்க வீரர் கலிஸ், தனது 43 ஆவது டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். முதலிடத்தில் இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் (51 சதம்) உள்ளார். மூன்றாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (41) உள்ளார். (5)

# வென்றாலும் அபராதம்




இந்தியக் கிரிக்கெட் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இலங்கைக்கெதிராக இடம்பெற்ற ஆட்டத்தில் மெதுவாக பந்து பரிமாற்றங்களை வீசிய குற்றத்திற்காகவே அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அன்றைய ஆட்டத்தில் இந்திய அணி ஓர் பந்துப் பரிமாற்றத்தைக் குறைவாகப் பந்து வீசியிருந்த நிலையில் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனிக்கு போட்டி ஊதியத்தின் 20 சதவீதமும், ஏனைய வீரர்களுக்கு போட்டி ஊதியத்தின் 10 சதவீதமும் தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஆட்டத்தில் இடம்பெற்ற நேரத் தடங்கல்கள் உட்பட அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்ட பின்னரும் இந்திய அணி ஓர் பந்துப் பரிமாற்றம் தாமதமாக வீசியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

தற்போது டோனிக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதோடு அடுத்த 12 மாதங்களுக்குள் இந்திய அணி மீண்டும் இன்னொரு தடவை மெதுவாகப் பந்துவீசுமாயின் மகேந்திரசிங் டோனிக்கு ஒரு ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கான தடை விதிக்கப்படும்.

இந்திய அணி சார்பாக ரவிச்சந்திரன் அஸ்வின், பிரக்ஜான் ஓஜா, விரேந்தர் சேவாக் ஆகிய சுழற்பந்து வீச்சாளர்கள் பந்துவீசியிருந்த போதிலும், இந்திய அணி தாமதமாகப் பந்துவீசிய குற்றத்தைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட் முழுமையான ஒழுக்கவியல் விசாரணையொன்றை நடத்தி இந்த அபராதத்தை விதித்தார். (5

# குலசேகரா தொடரிலிருந்து வெளியேற்றம்

இலங்கை அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர இந்தியாவிற்கெதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் ஏனைய 4 ஆட்டங்களிலும் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடனான முதலாவது ஆட்டத்தில் பிடியொன்றை எடுக்க முனைந்தபோது காயமடைந்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆட்டத்தின் 11 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் விரேந்தர் சேவாக் அடித்த பிடியொன்றைப் பிடிக்க முனைந்த நுவான் குலசேகர கால்பகுதியில் காயமடைந்திருந்தார். குறித்த பிடியை அவர் பிடித்திருந்த போதிலும், தொலைக்காட்சி நடுவரிடம் அந்தப் பிடி சரியானதா என்று நிர்ணயிக்க உதவி கோரப்பட்ட போது வழங்கப்பட்ட மீள் ஒளிபரப்புக்கள் தெளிவாகக் காணப்படாத நிலையில் விரேந்தர் சேவாக் ஆட்டமிழக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

நுவான் குலசேகர தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டதை உறுதிப்படுத்திய அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன, அவருக்குப் பதிலாக எந்த வீரரை அணியில் சேர்ப்பது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டையில் ஸ்கான் செய்யும் வசதிகள் காணப்படாததன் காரணமாக கொழும்புக்குச் சென்ற பின்னரே ஸ்கான் செய்யப்படும் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, குலசேகரவிற்குப் பதிலாக யாரை அணியில் சேர்ப்பது என்பது குறித்து தேர்வாளர்களுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தப்படும் எனவும் தெரிவித்தார்.



நுவான் குலசேகர 5 பந்துப் பரிமாற்றங்கள் மாத்திரம் பந்து வீசியிருந்ததோடு, 11 ஆம் இலக்கத்திலேயே துடுப்பெடுத்தாடக் களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஷாம்சன் இங்கிலீஷ்**
3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

தொழில் புரிவோர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகளுக்கான

**புதிய பிரிவு - 28.07.2012 சனி**

(I) 08-10 (II) 10-12 (III) 01-03 (IV) 03-05
20 பேருக்கு மட்டும் அனுமதி உண்டு

**SAAMSON** 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்.
**0776214567** (சி/1655) (3.14)


# பதானுக்கு அதிக வாய்ப்பை வழங்குங்கள்

இந்திய அணியின் இர்பான் பதானுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று வேகப்பந்து வீச்சு ஜாம்பவானாகிய வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். அத்தோடு இந்தத் தொடரில் இர்பான் பதானுக்கு வாய்ப்பு வழங்கியமைக்காக இந்தியத் தேர்வாளர்களுக்குத் தனது பாராட்டுக்களையும் அவர் தெரிவித்தார்.

இர்பான் பதானுக்குத் தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டாலே அவரால் சிறந்த தன்னம்பிக்கையைப் பெற்று ஆட முடியும் எனத் தெரிவித்த வசீம் அக்ரம், இந்தியாவிலுள்ள ஏனைய சகலதுறை வீரர்களை விட இர்பான் பதானே சிறந்த தெரிவு எனத் தான் எண்ணுவதாக அவர் தெரிவித்தார்.

இர்பான் பதான் மிகச்சிறப்பாக முன்னேறியுள்ளதாகத் தெரிவித்த அவர், அது இர்பான் பதானுக்கு முக்கியமானது எனத் தெரிவித்தார்.


**A/L கருத்தரங்கு**
**தமிழ்**
**திரு. T.S குகன் (B.A)**

25.7.2012 புதன் - பகுதி - I
26.07.2012 வியாழன் பகுதி - II
27.07.2012 வெள்ளி - இலக்கணம்

காலை 8.30 - பி.ப. 1 வரை

* அனுமதிகள் முன் கூட்டியே பெறவும்
* வெளி மாணவரும் பங்குபற்றலாம்.

**யூனிவேர்சல்** - கந்தர்மடம் (20776) (3.14)

**நல்லூர் பெருந்திருவிழாவில் பூபாலசிங்கத்தின் புத்தகத்திருவிழா**

அறிவியல், அரசியல், ஆன்மீகம், இலக்கியம், மருத்துவம், பொறியியல், சோதிடம், சிறுவர் இலக்கியம், சிறுவர் நாவல்கள், பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், Dictionary வகைகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் மற்றும் பாலர் வகுப்பு முதல் பட்டதாரிகள் வரையான அனைத்து பாடநூல்களும், சஞ்சிகைகளும்.

பிரமாண்டமான மூன்று மாடிக்கட்டிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், நூலகங்கள், பிரதேசசபைகள், நகரசபைகள், வாசகர்கள் தங்களது நீண்ட நாள் தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளவும், இன்று முதல் நல்லூர் உற்சவம் முடியும் வரை எமது நல்லூர் சிறப்பு விற்பனை நிலையம் காலை 7 மணி முதல் மாலை 10 மணிவரையும் திறந்திருக்கும்.
விசேட விலைக்கழிவு 10% முதல் 50% வரை வழங்கப்படவுள்ளது.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
நல்லூர் உற்சவகால சிறப்பு விற்பனை நிலையம்

1. பாரதியார் சிலை முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம்.
2. நல்லூர் சிவன் கோயில், அருகில்.

(சி/1663) (3.14)

**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**

அரைவாசி ஆலோசனைக் கட்டணத்துடன்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
37, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
0212219016

(20568) (3.5.6)

**French Language Center**

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரம் வாய்ந்த FRENCH மொழி கற்பித்தலை மேற்கொள்ளும் ஒரே ஒரு நிறுவனம்.
பூரண தமிழ், French விளக்கத்துடன் வகுப்புக்கள் மேற்கொள்ளப்படும்.
(Paris இல் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், பல வருட கால அனுபவம் வாய்ந்தவரும்)

ஆசிரியர்: V. ஜெகன்

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

**வகுப்புகள் ஆரம்பம்**

கந்தர்மடத்தில் 28.07.2012 காலை 11.00 மணி
மானிப்பாயில் 25.07.2012 காலை 11.00 மணி

விவரங்களுக்கு: **UNI - ICT CAMPUS**

Jaffna Road, Manipay
T.P : 077 9789456

NO .83, Palaly Road, Kantharmadam Jaffna

நல்லைக் குமரனுக்கு இன்று கொடியேற்றம்.
நலங்கள் நல்கிடுவாய் கந்தா உன் குலங்கள் தழைத்திடவே!

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**



இல. 111,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224134

இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 0212225511

அழகிய தங்கப்பவுன் நகைகளை நம்பிக்கையுடன் பெற்றிட நம்பகரமான ஸ்தாபனம்



நாடு நலம்பெற வீடு செழித்திட
நல்லைக்குமரன் வீதியுலா வருகின்றான்
இன்னருளை வாரி
வழங்கிடுவான்!

**நியூ நகுலா ஜுவல்லர்ஸ்**



இல.109, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212219119

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224101

(சி/1628)(2-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.